24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 316 புரட்டாதி 22ஆம் நாள் திங்கட்கிழமை 08 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## ஆர்வக்கோளாறால் தவராசாவிடம் வாங்கிக் கட்டிய விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஒக். 8
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தனக்குக் கிடைத்த செய்தியை உறுதிப்படுத்தாமல், அதன் உண்மைத் தன்மையை ஆராயாமல், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அமைச்சர்களுக்கு அனுப்பியுள்ளார். இதனால் எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவிடம் அவர் முறையாக வாங்கிக் கட்டியுள்ளார். >> 25

## நல்லகாரியங்கள் செய்வதால்தான் தனக்கு எதிர்ப்பு என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஒக். 8
மக்களுக்கு நல்ல பணிகளை ஆற்றுவதால்தான் தனக்கு எதிர்ப்பு வெளியிடப்படுவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவக் கலாநிதி சிதம்பரநாதன் முகுந்தனுக்கு தென்மராட்சியில் நேற்று இடம்பெற்ற மதிப்பளிப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு >> 25

## யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறும் மீனவர்கள் முல்லையில் வாடி அமைப்பு

*பிரதேச மீனவர்கள் குற்றச்சாட்டு*

முல்லைத்தீவு, ஒக். 8
வடமராட்சி கிழக்கில் கடலட்டைத் தொழிலில் ஈடுபட்டவர்கள் வெளியேறவேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டுள்ள நிலையில் அவர்கள் முல்லைத்தீவு, சாலைப் பிரதேசத்தில் வாடி அமைத்துக் கடலட்டைத் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.
கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள், >> 25

## இலங்கையருக்கு 2019 மோசமானதாக இருக்கும்

*எதிர்வு கூறுகிறார் அமைச்சர் ராஜித*

கொழும்பு, ஒக். 8
இலங்கையர்களுக்கு அடுத்த ஆண்டு மிகவும் மோசமான ஆண்டாக அமையவுள்ளதாக சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.
நுவரெலியா மாவட்ட மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்கான >> 25

# இடைக்கால அரசு பற்றி ஆராய கூட்டத்தைக் கூட்டுகிறார் மகிந்த!

கொழும்பு, ஒக்ரோபர் 8
இடைக்கால அரசு அமைப்பதற்கு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆதரவு வழங்குவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் முக்கிய கூட்டம் நாளை இடம்பெறவுள்ளது. அந்தக் கட்சியின் தலைவர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் அவரது வீட்டில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.
மகிந்த அணியைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற அழைக்கப் >> 25

## நாடாளுமன்றத்தை சுற்றி மணல் மூடைகள்

*அவசரப் பணியில் இராணுவம்*



கொழும்பு ஒக். 8
சீரற்ற வானிலை காரணமாக, நாடு முழுவதும் ஆறுகள் பெருக்கெடுத்து, பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்த நிலையில், நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள தியவன்ன >> 25

## மைத்திரியும், மகிந்தவும் மீளவும் சந்தித்துப் பேசுவர்

*இரு வாரங்களின் பின்னர் நடக்கலாம் என எதிர்பார்ப்பு*

கொழும்பு, ஒக். 8
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவும் இரு வாரங்களுக்குப் பின்னர் மீண்டும் சந்தித்துப் பேசுவர் என்று எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. கொழும்பு ஆங்கில ஊடகம் >> 25

## அரசியல்க் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று ஆர்ப்பாட்டங்கள்

*கலந்து கொள்ள அறைகூவல்*

யாழ்ப்பாணம், ஒக். 8
நீண்டகாலமாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்க் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியும், சிறைச்சாலைகளில் உணவு >> 25

## கொக்குவில் பகுதியில் எஸ்ரிஎவ் கண்காணிப்பு

*வாள்வெட்டுக்களையடுத்து நடவடிக்கை*

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்த வாள் வெட்டுச் சம்பவங்களை அடுத்து அங்கு சிறப்பு அதிரடிப் படையினர் (எஸ்.ரி.எவ்.) பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். >> 25

see more news in
newuthayan.com

*கிளிநொச்சியில்*

## தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பழைமை வாய்ந்த நாணயம் மீட்பு



கிளிநொச்சி, ஒக். 8
பழமை வாய்ந்த நாணயம் கிளிநொச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த நாணயக் குற்றியில் தமிழ் மொழியிலான எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. >> 25

*அரசியல்க் கைதிகள் விவகாரம்.*

## கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு நாளை அவசரமாகக் கூடுகின்றது

*கொழும்பில் போராட்டம் நடத்துவது பற்றியும் ஆராயவுள்ளதாகத் தகவல்*

யாழ்ப்பாணம், ஒக். 8
அரசியல்க் கைதிகளின் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தால் நாளுக்கு நாள் அவர்களின் உடல் நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அரசுத் தலைமை ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், கூட்டமைப்பின் தலைமையுடனான >> 25

## பலாலி வானூர்தி நிலையத்தின் தொழில்நுட்பப் பிரச்சினைக்குத் தீர்வு

யாழ்ப்பாணம், ஒக். 8
பலாலி - தமிழகம் இடையேயான வானூர்திச் சேவையை நடத்துவதில் எழுந்துள்ள தொழில்நுட்பப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
இலங்கை, இந்திய அதிகாரிகள் கொழும்பில் நடத்திய பேச்சுக்களில் இதற்கான தீர்வு காணப்பட்டுள்ள்தாக அறியமுடிகின்றது.
பலாலி வானூர்தி நிலையத்தைப் பிராந்திய வானூர்தி நிலையமாக்குவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் சென்னை, மதுரை, திருச்சி வானூர்தி நிலையங்களுக்கு ஆரம்பத்தில் சேவை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக வானூர்திப் பாதை வரையும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
பலாலி வானூர்தித் தளத்துக்கும், தமிழகத்தின் சென்னை, மதுரை, திருச்சி வானூர்தித் தளங்களுக்கும் இடையிலான தூரம் மிகக் குறைவாக உள்ளது. இதனால் வானூர்திகள் தமது வான் பாதையிலிருந்து பதியத் தொடங்கும்போது எந்த வானூர்தி நிலையக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவேண்டும் என்பது தொடர்பான தொழில்நுட்பப் பிரச்சினை எழுந்தது.
இது தொடர்பில் கொழும்பில் இரு நாட்டு அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது. இலங்கை வான் எல்லைக்குள்ளேயே வானூர்திகள் பதியத் தொடங்கும்.
அதேவேளை பலாலி வானூர்தி நிலையத்தில் தரையிறங்குவதற்கு முன்பாக இலங்கை வான் பரப்புக்குள் அவை வட்டமடித்தே தரையிறங்கும் என்றும் தீர்வு காணப்பட்டுள்ளது.
வானூர்தி பதியத் தொடங்கும்போது பலாலி வானூர்தித் தளத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையுடனேயே தொடர்பு கொள்ளவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
இதேவேளை, திருச்சி அல்லது மதுரையிலிருந்து ஆண்டிறுதிக்குள் பலாலி வானூர்தித் தளத்துக்கு அன்டனோவ் தர வானூர்தி நிச்சயம் தரையிறங்கும் என்று இரண்டு நாட்டு அதிகாரிகளும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## வாக்குறுதியளித்த நிதியிலும் பெருமளவு வெட்டிக் குறைப்பு

*மீள்குடியேற்ற அமைச்சுக்கு இந்த நிலை*

யாழ்ப்பாணம், ஒக். 8
மீள்குடியேற்ற அமைச்சுக்கு அடுத்த ஆண்டு பாதீட்டில் 6ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த நிதி பெருமளவில் வெட்டிக் குறைக்கப்பட்டு ஆயிரத்து 750 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்படக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கில் மீள்குடியேற்றப் பிரதேசங்களில் பெருமளவு அபிவிருத்தி வேலைகள் >> 25

## மக்களுக்கு அறிவுரை கூறுவோர் தாமும் செயற்படுவது அவசியம்

### அரசுக்கு ஜே.வி.பி. அறிவுரை

கொழும்பு, ஒக். 8
அரச தலைவரும், தலைமை அமைச்சரும் ஒரே நேரத்தில் நாட்டில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மெதிரிகிரிய பிரதேசத்தில் நேற்றுநடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ரூபாவின் பெறுமதியைப் பாதுகாக்க டொலர் செலவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அரசு கூறுகின்றது. ஆனால், அரசிலுள்ளவர்கள் இதனை நடைமுறைப்படுத்துவதில் கவனயீனமாக உள்ளனர். தலைமை அமைச்சர் தற்போது நோர்வேயில் உள்ளார். அவர் மட்டுமா? அங்கு சென்றுள்ளார். இல்லை. ஒரு கூட்டமே சென்றுள்ளனர்.

தலைமை அமைச்சர் செல்லும் போது அரச தலைவர் அமெரிக்காவிலிருந்து நாட்டுக்கு வந்தார். அரச தலைவர் அமெரிக்காவுக்கு தனியாகவா? சென்றார். இல்லை. அவருடன் 63 பேர் சென்றுள்ளனர். அவர்களுக்கான செலவு டொலரின் பயன்பாட்டை அதிகரிக்குமா? இல்லையா?. அமைச்சர்கள் கூட்டமொன்றே வெளிநாட்டில் சுற்றித் திரிகின்றனர்.

ரூபாவின் பெறுமதியை குறைப்பதற்கு மற்றுமொரு வழி முறை உள்ளது. அதிலும் அரசு கவனம் செலுத்துவதில்லை. அதுதான் உள்நாட்டு ஏற்றுமதிப் பொருள்களை அதிகரித்தல். இந்த விடயத்தில் அரசு இன்னும் பலப்படவில்லை என்றார். (ற)

## பயங்கரவாத எதிர்ப்பு வரைவு நாளை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக். 8
பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு மற்றும் நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு என்பன நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

1979ஆம் ஆண்டு 49ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாகக் கொண்டு வரப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் வரைவை அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன நாடாளுமன்றில் சமர்பிக்கவுள்ளார்.

அதேவேளை, 2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவை நிதி அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார். (ற)

## அரசமைப்புச் சபைக்கு சமலும், அத்துகோரளவும்!

கொழும்பு, ஒக். 8
அரசமைப்புச்சபையின் உறுப்பினர்களாக, நீதியமைச்சர் தலதா அத்துகோரளவும், முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவும் நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

நோர்வே மற்றும் பிரிட்டனுக்கான பயணங்களை மேற்கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பி யதும், இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசமைப்பு சபைக்கு தலைமை அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து ஐந்து உறுப்பினர்களின் பெயர்களைப் பரிந்துரைக்க வேண்டும். அவர்களில் இருவர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். ஏனைய மூவர், நாட்டின் பிரதான சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், சிவில் சமூகப் பிரதிநிதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும்.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் என்ற வகையில் தலதா அத்துகோரளவின் பெயரை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்மொழிவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் முன்மொழிவார் என்று அறியப்படுகிறது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே, தனது தரப்பில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவை கடந்த செப்ரெம்பர் 17ஆம் திகதி அறிவித்திருக்கிறார். தலைமை அமைச்சர், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிகளைக் கொண்டிராத கட்சிகளில் இருந்து, இன்னும் ஒரு உறுப்பினரை நாடாளுமன்றம் தெரிவு செய்ய வேண்டும்.

அதேவேளை, சிவில் சமூக அமைப்புகளின் சார்பில் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவை, அரசமைப்பு சபைக்கு நியமிக்க முன்மொழியப்பட்டுள்ள போதும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் என்று மகிந்த அணி அச்சுறுத்தியுள்ளது.

சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரினதும் நியமனங்களுக்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்க வேண்டும். சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூன்று பேரின் பெயர்கள் தற்போது ஆராயப்பட்டுவரும் நிலையில் தலைமை அமைச்சர் நாடு திரும்பியதும் அது முடிவு செய்யப்படும்.

கடந்த அரசமைப்புச் சபை செப்ரெம்பர் 21ஆம் நாளுடன் காலாவதியாகியது. (ற)

# அம்பாந்தோட்டை துறைமுகம் சீன கடற்படையின் தளமாகும்

## எச்சரிக்கிறார் அமெ. துணைத் தலைவர்

**கொழும்பு, ஒக். 8**
**கடன் இராஜதந்திரத்தை தனது பூகோள செல்வாக்கை விரிவுபடுத்திக் கொள்வதற்குச் சீனா பயன்படுத்திக் கொள்கிறது. அம்பாந்தோட்டை துறைமுகம், பீஜிங்கின் வளர்ந்து வரும் நீல நீர் கடற்படையின் முன்னரங்கத் தளமாக விரைவில் மாற்றமடையும். இவ்வாறு அமெரிக்காவின் துணை அரச தலைவர் மைக் பென்ஸ் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் உயர்மட்ட சிந்தனைக் குழாமான, ஹட்சன் நிறுவகத்தில் அயலுறவுக் கொள்கை தொடர்பாக கடந்த வியாழக்கிழமை நிகழ்த்திய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆசியா, ஆபிரிக்கா, தொடக்கம், ஐரோப்பா வரை மட்டுமன்றி, இலத்தீன் அமெரிக்கா வரையான நாடுகளுக்கு, சீனா நூற்றுக்கணக்கான பில்லியன் டொலர்களை உட்கட்டமைப்பு கடன்களாக வழங்கியுள்ளது. அந்தக் கடன் நிபந்தனைகள் பீஜிங்கிற்குச் சிறந்ததாகவும் பயனளிப்பதாகவும் உள்ளது.

இலங்கையைப் பற்றிக் கேளுங்கள், வணிகப் பெறுமானம் பற்றிய சந்தேகம் உள்ள துறைமுகத்தை அமைப்பதற்காக, சீன அரசு நிறுவனங்களிடம் இருந்து பெரும் கடனைப் பெற்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அந்த நாட்டால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததால் துறைமுகத்தைச் சீனாவிடம் வழங்கும்படி இலங்கைக்கு அழுத்தம் கொடுத்தது. சீனாவின் வளர்ந்து வரும், நீல நீர் கடற்படையின் முன்னரங்க இராணுவத் தளமாக, அம்பாந்தோட்டை துறைமுகம் விரைவில் மாறக் கூடும்.

சீனாவின் மூலோபாய நோக்கங்களுக்கு இடமளிப்பதாக வாக்குறுதி அளிக்கும் கட்சிகள், வேட்பாளர்களுக்கு நேரடியாக ஆதரவளித்து, சில நாடுகளின் அரசியலை பீஜிங் சீர்குலைக்கிறது என்றார். (ற)

## கிராமிய பொருளாதார வீழ்ச்சியே காரணம்

### அனுரகுமா

கொழும்பு, ஒக்.8
கிராமிய பொருளாதார வீழ்ச்சியடைந்திருப்பதே நாட்டில் ஏற்பட்டுள்ள பிரதான பிரச்சினை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது

நாட்டை ஆட்சி செய்த எந்த அரசுமும் கிராமிய பொருளாதாரத்தை முன்னேற்ற நடவடிக்கைகளை எடுக்கவில்லை. கிராமிய பொருளாதாரம் முன்னேற்றமடைந்திருந்தால், நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கங்கள் ஏற்படாது. என்றார். (ற)

## தெல்லிப்பழையில் வழிப்பறிக் கொள்ளை

யாழ்ப்பாணம், ஒக். 8
காங்கேசன்துறை வீதியில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதுடன், மல்லாகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் திருட்டுச் சம்பவங்களும் பரவலாக இடம்பெற்றுள்ளதாகப் பொதுமக்களால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களுக்குள் அந்தப் பகுதியில் மூன்று திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அதிகாலை 12 மணிக்கும் 4 மணிக்கும் இடையிலேயே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகப் பதிவாகியுள்ளது.

மேலும் கடந்த ஒரு மாத காலத்தினுள் 15 இற்கு மேற்பட்ட வழிப்பறிக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் காங்கேசன்துறை வீதியால் சென்ற இருவர் மல்லாகத்தை அண்மித்த பகுதியில் வாள்களைக் காண்பித்து மறிக்கப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து அலைபேசி மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. (5,26)

# நாவாந்துறைச் சந்தையில் வெட்டப்படுகின்றது மாடு

## மாநகர சபை இலஞ்ச ஊழல் குழு குற்றச்சாட்டு முறைப்பாடு இல்லை என்கின்றனர் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஒக்.8
யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குள் உள்ள நாவாந்துறை சந்தையில் சட்டவிரோதமாக மாடுகள் வெட்டப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் இலஞ்ச ஊழல் குழுவினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இது தொடர்பில் கேட்டபோது, யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட மாட்டிறைச்சி கடைகளுக்கு எமது கொல்களத்தில் இருந்தே இறைச்சி எடுத்துச் செல்லப்படுகின்றது. வெளியிடங்களில் களவாக மாடுகள் இறைச்சியாக்கப்படுகின்றன என்று எமக்கு எந்த முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தனர்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் இலஞ்ச ஊழல்க் குழுவினர் தெரிவித்தாவது

எமது சபையின் எல்லைக்குள் உள்ள நாவாந்துறை சந்தைப் பகுதியில் உள்ள கழிவுத் தொட்டிகளில் மாட்டின் தோல், வெட்டத்தப்பட்ட கழிவுகள் என்பன கொட்டப்படுகின்றன. அதை நாம் நேரடியாக அவதானித்துள்ளோம்.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையின் கழிவகற்றல் வாகனத்தில் மாட்டின் தோல்கள், கழிவுகள் ஏற்றப்பட்டு யாழ்ப்பாண வீதியின் ஊடாகக் கொண்டு செல்லப்பட்டது. அதை அவதானித்த நாம் அவை எங்கிருந்து ஏற்றப்பட்டன என்று சாரதியிடம் கேட்டோம். நாவாந்துறைச் சந்தையில் இருந்து ஏற்றி வருகின்றோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

நாம் நாவாந்துறை சந்தைக்குச் சென்று விசாரித்ததில் அங்கு வைத்து களவாக மாடுகள் இறைச்சியாக்கப்படுகின்றன. சந்தைக்கு என மேற்பார்வையாளர் ஒருவரையும் காவலர் ஒருவரையும் மாநகர சபை நியமித்துள்ளது. ஆனாலும் மாடுகள் இறைச்சியாக்கப்படுகின்றன என்று அங்கிருந்தவர்கள் கூறினர்.


பொதுவாக மாட்டை இறைச்சியாக்க என மாநகர சபையின் கொல்களமே உள்ளது. அங்குதான் மாடு இறைச்சியாக்க வேண்டும். இறைச்சி மட்டுமே கடைகளுக்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்படும். கழிவுப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிப்பதில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

மாட்டின் தோல், கழிவுகள் குப்பைத் தொட்டிகளில் காணப்படுவால் களவாக மாடுகள் இறைச்சியாக்கப்படுகின்றன என்றே தெரிகிறது. இதை உடனடியாகத் தடுக்க வேண்டும். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளோம். என்றனர்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபை உயர் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

வெளியிடங்களில் களவாக மாடுகள் இறைச்சியாக்கப்படுகின்றன என்று எமக்கு எந்த முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. முறைப்பாடு செய்யப்பட்டால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். கொல்களத்தில் இருந்து கொண்டு செல்லப்படும் இறைச்சியின் அளவை விட அதிகமாகக் கடைகளில் இறைச்சி காணப்பட்டால் அவற்றை உடனடியாகக் கைகயகப் படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது - என்றனர். (ற-8)

# மாடு கடத்தியோர் கைது



கொடிகாமம்,ஒக் .8

கொடிகாமம் வறணி வீதியூடாக நெல்லியடி நோக்கி வடி ரக வாகனத்தில், அனுமதிப்பத்திரம் இன்றி நான்கு மாடுகளைக் கொண்டு வந்ததுடன், சித்திரவதைப்படுத்திக் கொண்டுவந்தனர் என்ற குற்றச்சாட்டில் நெல்லியடியைச் சேர்ந்த இருவர் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டதுடன், மாடுகளையும் நெல்லியடி பொலிஸார் தடுத்து வைத்துள்ளதுடன், இன்றையதினம் நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சத்திர சிகிச்சை நிபுணருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு

சாவகச்சேரி, ஒக். 8

யாழ்.போதனா மருத்துவமனையில்இருதயசத்திரசிகிச்சையினை வெற்றிகரமாக மேற்கொண்ட இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் மட்டுவிலைச் சேர்ந்த சிதம்பரநாதன் முகுந்தனுக்குத் தென்மராட்சி பிரதேச மக்கள் முன்னெடுத்த மதிப்பளிப்பு நிகழ்வு , நேற்று சாவகச்சேரி சிவன் கோவில் சாலையில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இவரின் கல்லூரித் தோழனும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபருமான செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

பிரதேச மக்கள் ஒன்றிணைந்து சாவகச்சேரி சிவன் கோவிலிலிருந்து விழா நாயகன் தம்பதி மற்றும் அவரது தாயார் ஆகியோரை ஊர்வலமாக விழா மேடைக்கு அழைத்து வந்தனர்.

நிகழ்வின் வரவேற்புரையினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரனும் , ஆசியுரையினை சாவகச்சேரி முத்துமாரி அம்பாள் கோவில் முதன்மைக் குரு சிவசிறி க.வீரபத்திரக் குருக்கள் சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத் தந்தை அருட்பணி றெக்ஸ் செளந்தரா அடிகளாரும் நிகழ்த்தினர்.

முதன்மை உரையினை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நிகழ்த்தினார்..

பாராட்டுரைகளை வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, யாழ்.போதனா மருத்துவமனை உணர்வழியியல் மருத்துவ நிபுணர் சு.பிரேமகிருஷ்ணா, சாவகச்சேரி மருத்துவமனை பொறுப்பதிகாரி ப.அச்சுதன் , யாழ்.போதனா மருத்துவமனையில் கடந்த 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற முதலாவது இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை மேற்கொண்ட முல்லைத்தீவைச் சேர்ந்த சரண்குமார் உட்பட பலர் உரையாற்றினர்.

மருத்துவ நிபுணரின் சேவையினைப் பாராட்டி பிரதேச மக்களால் 'முகுந்தம்' என்னும் நூல் வெளியீடும் இடம்பெற்றது. (9-159)



## இறக்குமதியைக் கட்டுப்படுத்தி

# வடக்கில் உள்ள விவசாயிகள் உணவுற்பத்திக்கு முன்வரவேண்டும்

**யாழ்ப்பாணம் ,ஒக் .8**

**வடக்கில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருள்களுக்காக இலங்கை அரசு அதிகமாக நிதியை செலவழித்து இறக்குமதி செய்கின்றது.எனவே இங்குள்ள விவசாயிகள் அதனை இங்கு உற்பத்தி செய்ய முன்வரவேண்டும் என கொழும்பு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.**



யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் கமநல சேவைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்துக்கான கட்டடம் அமைக்க அடிக்கல் நடும் வைபவம் .நேற்றுக் காலை இடம் பெற்றது.இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது :

இந்த நாட்டில் எமக்குத் தேவையான பல உணவு வகைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகின்றோம்.அந்த வகையில் உருளைக்கிழங்கை இறக்குமதி செய்ய 5 ஆயிரம்,நிலக்கடலைக்கு 703 மில்லியன், திராட்சைக்கு 7 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா, என கடந்தவருடம் செலவழித்துள்ளோம். இதுமட்டுமல்லாது வெங்காயம், மிளகாய்,என அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய கடந்த வருடம் ஏராளமான நிதியை செலவழித்துள்ளோம்.

ஆனால் இந்த உணவுப் பொருள்களை வடக்கில் உற்பத்தி செய்வதற்கான வளங்கள் உள்ளன. இங்குள்ள காலநிலை மற்றும் நில அமைப்பு இந்த உணவுகளை உற்பத்தி செய்யக் கூடியதாக உள்ளது. எனவே இங்குள்ள விவசாயிகள் அவற்றைச் சரியாகப் பயன்படுத்தி அனைவரும் சிறந்த முறையில் விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும். அதற்கு நாமும் திணைக்களங்களும் உங்களுக்கு பக்கபலமாக இருப்போம்.

வடக்கில் உள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனை போதிய சந்தைப்படுத்தல் வசதி மற்றும் சந்தை வாய்ப்பு இல்லாமையே. அதனை நாம் கவனத்தில் எடுத்து இப்போது ஓர் தீர்மானம் எடுத்துள்ளோம்.அதாவது இங்கு விசாயிகள் உற்பத்தியாக்கும் உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதில்லை. அல்லது இறக்குமதிக்கான வரியை அதிகரிப்பது என தீர்மானித்துள்ளோம்.இதனூடாக விவசாயிகளுக்கு போதிய சந்தை வாய்ப்புக்களை உருவாக்க முடியும்.

சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் வடக்கு மாகாணம், விவசாயத் துறையில் முன்னணியில் இருந்தது. அதேபோலவே தற்போதைய அரசும் உற்பத்தியை அதிகரிக்க அதிக நிதியை விவசாயிகளுக்கா ஒதுக்கி வருகின்றது. இந்த அரசில் வடக்கு ,தெற்கு என்ற வேறுபாடுகள் எதுவும் இல்லை. அனைத்து பிரதேசங்களுக்கும் சமமான அபிவிருத்தியை மேற்கொண்டு வருகின்றோம். விவசாயிகளுக்கான உரமானியத்துக்காக இந்த ஆண்டு 35 ஆயிரம் மில்லியன் நிதி ஒதுக்கியிருந்தோம். இந்தப் பிரதேச மக்கள் விவசாயிகள் இங்கு விவசாயத்தில் ஆர்வம் காட்டி உங்கள் உற்பத்திகளை அதிகரியுங்கள் உங்களுடன் நாம் எப்போதும் பக்கபலமாக இருப்போம் என்றார்.

இந்த நிகழ்வில் மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்துக்கான புதிய கட்டடம் அமைக்க அடிக்கல் நடப்பட்டது. அடிக்கல்லை விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர நட்டு வைத்தார். பின்னர் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பலா மரக்கன்றுகள் வழங்கி வைக்கப் பட்டன. நிகழ்வில் விவசாய பிரதி அமைச்சர் இ.அங்கஜன், கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், விவசாயாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(8,9,159)

# படுக்கையறைகளில் அலைபேசி வேண்டாம்

## இலங்கை சுகாதார அமைச்சின் அறிவிப்பு

கொழும்பு ,ஒக் .8

தூங்கும் அறையில் கைத்தொலைபேசி பாவிப்பது மற்றும் இரவு நேரத்தில் நீண்ட நேரம் அறையில் கைத்தொலைபேசியை வைத்திருப்பது கடும் சுகாதார பாதிப்புக்கு காரணமாகும்.

கைத்தொலைபேசி மற்றும் கணினி தொடர்பான உபகரணங்களில் அதிகம் நேரம் செலவிடுவது சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது.

சிறப்பாகத் தூங்கும் அறையில் கைத்தொலைபேசி வைத்திருப்பது மூளை மற்றும் நரம்புத் தொகுதிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இரவு தூங்கச் செல்லும் முன் அவ்வாறான உபகரணங்களை அறையிலிருந்து வெளியகற்றி அல்லது செயற்பாட்டைத் துண்டித்து (OFF) வைக்குமாறு பொது மக்கள் வேண்டப் படுகின்றார்கள்.



# நல்லூர்ப் பிரதேச சபையினரால் பாத்தீனிய ஒழிப்பு செயற்றிட்டம்

யாழ்ப்பாணம் .ஒக் .8

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நேற்றையதினம் பாத்தீனிய ஒழிப்பு செயற்றிட்டம் பரவலாக இடம்பெற்றது. இந்த செயற்றிட்டத்தில், சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி, உப தவிசாளர் ஜெயன் , சபை உறுப்பினர்கள், சபையின் செயலர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன், பாத்தீனியச் செடிகளை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

(8)

## பனை - தென்னை அ.கூ.சங்கங்களுக்கு

# கண்காட்சியின் ஊடாக 2.6மில். ரூபா வருவாய்

யாழ்ப்பாணம், ஒக். 8

**யாழ்ப்பாணத்தில்அண்மையில்இடம்பெற்றபனம்அபிவிருத்திவாரக்கண்காட்சிஊடாக 2.6மில்லியன்ரூபாநிதியைசங்கங்கள்வருமானமாகப்பெற்றுள்ளனஎன்றுவடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பனை அபிவிருத்திச் சபை மற்றும் வடக்கில் உள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து இந்த பனை அபிவிருத்தி வார கண்காட்சியை நடத்தியிருந்தன.
இது தொடர்பில் பொ. வாகீசன் மேலும் தெரிவித்ததாவது:
நல்லூர்சங்கிலியன்பூங்காவில் நடத்தப்பட்ட இந்தக் கண்காட்சி மற்றும் விற்பனை ஊடாக இந்த ஆண்டில் கூட்டுறவு பனை தென்னைவளச் சங்கங்கள் அதிக வருமானத்தைப் பெற்றுள்ளன.
பனம் பொருள்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டதோடு அதன் விற்பனையும் அதிகரித்துக் காணப்பட்டது.
இவ்வாறான கண்காட்சிகள் ஊடாக பனை சார் உற்பத்திப் பொருள்களின் விற்பனை அதிகரிக்கப்படுவதுடன் மக்களுக்கும் இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுகின்றது. சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களைக் கவரும் வகையில் இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது.
அதனைவிட பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள், பனை அபிவிருத்திச் சபைஎன்பனஅதிகஅக்கறையுடன்தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியதால் தான்வருமானத்தையும்அதிகரிக்கமுடிந்தது - என்றார். (ம-17)



கொடிகாமம் அரசினர் வித்தியாலய பரிசில் நாள் கடந்த 4ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய ஞானம்அரங்கில்பாடசாலைஅதிபர்ப.தர்மபூபதி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி கே.சயந்தன் கலந்துகொண்டார். (ம-9,159)



யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் "கூட்டுறவின் அரவணைப்புக்கடன்திட்டத்தின் கீழ்" கூட்டுறவுக் கிராமிய வங்கி ஊடான கடன் திட்டத்தை அண்மையில் ஆரம்பித்து வைத்தது. இந்தக் கடன் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக முப்பது வரையிலான பயனாளிகளுக்கு கடன் வழங்கி வைக்கப்பட்டது. சங்கத்தின் தலைவர் என்.எல்.சத்தியதாசன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.மோகன் முதன்மைவிருந்தினராகக்கலந்துகொண்டுகடன்வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (ம-17)



வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து வறிய குடும்பங்கள் 5 பேருக்கு மலசல கூடம் அமைப்பதற்கான பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், சனசமூக நிலையம் ஒன்றுக்கான சிறுவர் விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி, உப தவிசாளர் ஜெயன், சபைச் செயலர் சுதர்ஜனன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-8)



வடமராட்சி புலோலி காந்தியூர் முன்பள்ளியில் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை காலை சிறுவர்தினம் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. (ம)

## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ்ப்பாணத்தில்உள்ளபிரபல கலவன் பாடசாலையில் பாடசாலை மாணவர் ஒருவரின் சைக்கிள் காணாமல் போயுள்ளது என்று கடந்த 4ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
பத்தாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ம-7)

## இளம்பிறைக்கழக நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக். 8
வடமராட்சி காந்தியூர் இளம்பிறை விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் காந்தியூர்சனசமூகநிலையமண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.
விளையாட்டுக் கழகத்தின் தலைவர் க.உதயராசா தலைமையில்நடைபெற்றஇந்தநிகழ்வில் சென்றகூட்ட அறிக்கை செயலாளரால்வாசிக்கப்பட்டது. தொடர்ந்து பொருளாளரால் கணக்கறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.
அதில் விளையாட்டுக் கழகத்தின் தலைவராக முன்னைய தலைவர் க.உதயராசா, செயலாளராககஜதீபன், பொருளாளராக சி.அகல்யன், உபதலைவராக செ.அனோஜன், உபசெயலாளராகமு.சேந்தன், ஆலோசகர்களாக சி.குகபாலன் (கணக்காளர்), சிறீஸ்கந்தராசா(அபிவிருத்தி உத்தியேகத்தர்), கணக்காய்வாளராக பே.குகநேசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். தொடர்ந்து 12 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ம)

## முதியோர் மதிப்பளித்தல்

யாழ்ப்பாணம் தொல்புரம் சர்வோதய நிலையம் முதியோர் மதிப்பளித்தல் நிகழ்வொன்றை இன்று பிற்பகல் 3 மணியளவில் நடத்தவுள்ளது. (ம-63)

## ஓய்வூதியர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 8
தேசிய ஓய்வூதியர் தின விழா யாழ்ப்பாணத்தில் இன்று கொண்டாடப்படவுள்ளது.
நடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, நடாளுமன்றஉறுப்பினர்விஜயகலாமகேஸ்வரன் ஆகியோரின் இணைத் தலைமையில் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணிமுதல் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம-17,11)

## ஆசிரியர்தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய ஆசிரியர் தின விழா பாடசாலையின் தலைமை மண்டபத்தில் இன்று இடம்பெறவுள்ளது.
பாடசாலைஅதிபர்கோ.பத்மநாதன்தலைமையில் காலை9மணிக்குஇந்தநிகழ்வுகள்நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற வலயக்கல்விப்பணிப்பாளர்ஜி.வி.இராதகிருஷ்ணன் கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினராக வேலணைகோட்டக்கல்விப்பணிப்பாளர்திருமதி சா.கிருஷ்ணதாஸ்கலந்துகொள்ளவுள்ளார். (ம)

## தராசுகளுக்கான முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஒக். 8
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள்திணைக்களத்தால்ஒக்டோபர்மாதத்துக்கான தராசுகள் முத்திரையிடல் எதிர்வரும் 10, 11 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ளது.
கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ளஅளவீட்டுஅலகுகள்மற்றும்சேவைகள்திணைக்களத்தில் நிகழ்வு நடைபெறும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 8
சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரபுரம் அருள்மிகு மஹா முத்துமாரிஅம்பாள் ஆலயநவராத்திரி காலச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வுகள் ஆலயத் தலைமை மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
முதலாம் நிகழ்வில் சைவப்புலவர் கந்தசத்தியதாசன்'விநாயகரும்சக்தியும்'என்னும்விடயப்பொருளிலும் இரண்டாம் நாள் நிகழ்வில் சைவப்புலவர் முகுந்தன் 'கும்பபூஜை உணர்த்தும் தத்துவம்' என்னும் விடயப் பொருளிலும், மூன்றாம் நாள் நிகழ்வில்சைவப்புலவர்செ.த.குமரன்'வல்லமை தாராயோ' என்னும் விடயப் பொருளிலும், நான்காம் நாள் நிகழ்வில் சைவப்புலவர் ச.நவநீதன் 'நவராத்திரிஉணர்த்தும்சமூகமேம்பாடு'என்னும் விடயப் பொருளிலும் ஐந்தாம் நாள் நிகழ்வில் சைவப்புலவர் கா.கமலநாதன் 'அனைத்துமாய் நின்றால்' என்னும் விடயப் பொருளிலும், ஆறாம் நாள்நிகழ்வில்க.ஈஸ்வரன்'மகத்துவம்மிக்கபுரட்டாதி' என்னும் விடயப் பொருளிலும் ஏழாம் நாள் நிகழ்வில் சைவப்புலவர் நித்தியபாபுதரன் 'மகிடாசுரமர்த்தனி திருவருள்' என்னும் விடயப் பொருளிலும் எட்டாம் நாள் நிகழ்வில் சைவப்புலவர் த.மனோஜ்குமார் 'கலைகள் அருள்வாள் கலைவாணி'என்னும்விடயப்பொருளிலும்சொற்பொழிவு ஆற்றவுள்ளார்கள். (ம)

## முத்திரைகள் காட்சிப்படுத்தும் நிகழ்வு

கொடிகாமம், ஒக். 8
சாவகச்சேரிஅஞ்சலகத்தில்முத்திரைகள்காட்சிப்படுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.
சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தினால் தேசிய அஞ்சல் வாரத்தையொட்டி இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-159,9)

## ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள்

### சிறுப்பிட்டி அ.த.க.பா.



யாழ்ப்பாணம், ஒக். 8

சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலையின் ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

நீர்வேலி, சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலையின் தலைமை மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டார்.

### வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி



யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. ஆசிரியர்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கி மதிப்புறுத்தப்பட்டனர்.

### மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்



மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆசிரியர் தின நிகழ்வுகள் நடைபெற்றன.

மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் நடைபெற்றன. மாணவத் தலைவர் ஜ.விதுரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வித்தியாலய முன்னாள் அதிபர் பொ.கனகரத்தினம் கலந்துகொண்டார். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-105,422,9,159)

# வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் 960 இடங்களில் டெங்குச் சோதனை

## 472 இடங்களில் அபாய நிலை

**வலி.தென்மேற்கு, ஒக். 8**

**வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நுளம்புக் கட்டுப்பாடு வாரத்தை முன்னிட்டு சுகாதாரப் பிரிவினர் வீடுகள், பாடசாலைகள், புதிய கட்டடங்கள் அமைக்கும் இடங்கள் என 960 இடங்களை கடந்த வாரம் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். இவற்றில் 472 இடங்கள் டெங்குக்கு ஏதுவான சூழ்நிலைகள் இருந்தமையும், 42 இடங்களில் நுளம்புக் குடம்பிகளும் அடையாளம் காணப்பட்டன.**

கொழும்பு அரசால் அறிவிக்கப்பட்ட நுளம்புக் கட்டுப்பாடு வாரத்தை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் டெங்குக்கு எதிராக பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் 888 வீடுகளும் 43 பாடசாலைகளும் 29 புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கும் இடங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சுகாதாரப் பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர், பிரதேச செயலக உத்தியோகத்தர், பிரதேச சபை உத்தியோகத்தர், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து இந்தச் சோதனையை நடத்தினார்கள். 32 வீடுகளிலும் 5 பாடசாலைகளிலும் 5 புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கும் இடங்களிலும் நுளம்புக் குடம்பிகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதையடுத்து இரு வீடுகளின் உரிமையாளருக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பலருக்கு எதிராக சிவப்பு அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-115)

### தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி போட்டிகள்

சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் கற்கும் (தரம் 1 - 5) மாணவர்களுக்கிடையில் பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளனர். சித்திரம், வாசிப்பு, கட்டுரை, பொதுஅறிவும், நுண்ணறிவும், பேச்சு ஆகிய போட்டிகளே அவ்வாறுநடத்தப்படவுள்ளன.தரம்ஒன்று முதல் தரம் ஐந்து வரை கல்வி கற்கும் மாணவர்கள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் ஒவ்வொருபிரிவில்ஆகக்கூடியதுதலா மூன்றுமாணவர்களை அதிபர்கள் பரிந்துரைக்க முடியும். (ம-9)



யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் அனுசரணையுடன் கச்சாய் பொது நூலகம் நடத்திய நடமாடும் சேவை கடந்த மூன்றாம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான மாணவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு நூல்களை வாசித்தனர். (ம-9,159)



கைதடி பராசக்தி முன்பள்ளியின் சிறுவர் தினத்தையொட்டி, சிறார்களின்ஆக்கப்பொருள்கள்காட்சிப்படுத்தல்முன்பள்ளி மண்டபத்தில்கடந்தபுதன்கிழமைநடைபெற்றது.முன்பள்ளி ஆசிரியை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாகச் சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் த.சுதர்சன் மற்றும் இ.கந்தசாமி தயாளன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-9,159)

# புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டன. பாடசாலை அதிபர்கள் சிலர் தமது பாடசாலைகளில் சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை அனுப்பி வைத்துள்ளனர். நேற்று மாலை வரை கிடைக்கப்பெற்ற சில முடிவுகளின் விவரங்கள்.

*யாழ். சென். பெனடிற் றோ.க.வித்தியாலயம்*
க.பவநிதி - 190, சி.பகலவன் - 182, ஜ.ஜாகாஸ் - 182, அ.தரணிகன் - 182, ற.கிசான் - 179, அ.சந்தனவாணி - 179, சு.பாவலன் - 177, சு.மிதுசன் - 176, மு.டனிலஸ் - 176, கௌ.அருளகன் - 175, ப.கயானன் - 175, ப.பவிசாயினி - 173, த.டிலக்சிகா- 172, ச.சந்தோஸ் - 171, சி.லக்ஸ்சன் - 170, சூ.நிதர்சன் - 169, ரா.தாரங்கன் - 169, அ.மகிழினி-169, க.காருணியா-168, ஜெ.பிரதீசா - 167, கௌ.ரிசான் - 167, ப.மயூரி - 167, வி.கயானன் - 166, சி.திவ்யபிரியதர்சன் - 166, மே.டிரோன் - 166, சி.விதுசிகா - 166, ற.பிரியங்கா - 166.

*சண்டிலிப்பாய் இந்து*
சி.அட்சயா - 184, ம.பிருந்தா - 179, அ.சகிதன் - 178, நி.யனேஜனன் - 170, பா.தக்சணா - 170, ஜீ.கிருசனா - 167, ச.கிஜானி- 166, ந.சத்தியா - 165.

*நாவற்குழி மகா வித்தி.*
நித்தியானந்தராசா அன்பானுஜா - 187.

*கொடிகாமம் அரசினர் வித்தி.*
செல்வரட்ணம் கதுசா - 165.

*மந்துவில் றோ.க.தீ.க.பா.*
ஜெ.மோபிலாஸ் - 179, த.அஜிந் - 171.

*கைதடி நுணாவில் அ.த.பா.*
விக்னேஸ்வரன் பிரணவன் - 168.

*வரணி குமரணி பாடசாலை*
தயாகரன் யதுர்சன் - 172.

*வரணி குடமியன் அ.த.பா.*
இராஜரட்ணம் லஜித்தன் -174

*விடத்தற்பளை கமலாசினி வித்தி.*
ஜெ.தேனுசன் - 184, பா.கவிசாந் - 176, சி.கதிர்நிலா 171, பி.மிதுர்சிகா - 171.

*வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தி.*
ஆரங்கநாதன் நிருபரின் - 172

*இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி.*
கேதீசன் கஜதாஸ் - 176, சுகுமார் சுவஸ்திகா - 176.

*கைதடி நாவற்குழி அ.த.க.பா.*
ஜெயசுதாகர் சாருகன் - 177

*வரணி கரம்பை அ.த.க.பா.*
பாஸ்கரன் நிந்துஜன் - 166

*மருதங்கேணி இ.த.க.வித்தி*
சி.கவிநிலா-182, பி.சமர்விழி-176, ஜெ.துதிபன்-169.

*நொச்சிகுளம் முத்துமாரி வித்தி*
புஷ்பராஜ் குமுதினி - 168.

*கரப்புக்குத்தி அ.த.க.பாடசாலை.*
யதுர்சிகா -174, தருமராசா பிரவீன் - 173

*கலைமகள் வித்தியாலயம்*
ஞானசீலன் ராகனி - 169

*கிளிநொச்சி அ.த.க.பா.*
கி.விதுசன் - 170, ச.விதுர்சனா - 176, ர.தமிழ்காவியா -173, க.சங்கீர்த்தனன் - 168. (ம)

# இலங்கையின் அனைத்து மக்களும் சமத்துவமாக வாழ வேண்டும்

## அமைச்சர் சஜித் பிரேமதாசா தெரிவிப்பு

மன்னார்,ஒக்.8

மன்னார் தாழ்வுப்பாடுப் பகுதியில் ஐம்பது வீடுகளைக் கொண்ட வளனார் புரம் எனும் 134 ஆவது மாதிரிக் கிராமம்,வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசாவால் நேற்றுமுன்தினம் காலை எட்டு மணியளவில் வைபவ ரீதியாகத் திறந்து மக்களிடம் கையளிக்கப்பட்டது இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர், இலங்கையின் அனைத்து மக்களும் சமத்துவத்துவமாக வாழவேண்டும் என்று தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்து மக்கள் வீட்டுத்தேவைகளுக்காக யாரேனும் ஒருவருக்குப் பின்னால் அலைய வேண்டிய அவசியம் இல்லை.

உங்கள் கால்களுக்கு அருகாமையில் நாங்கள் வந்து உங்களுக்கு இருக்கின்ற வீட்டுப்பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முன்வந்திருக்கின்றோம் அத்துடன் மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் கேட்டுக்கொண்டமைக்கு அமைவாக மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் மறைந்த அரச தலைவர் பிரேமதாசாவால் ஐம்பது வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்டு, தற்போது சேதமடைந்து காணப்படும் பிரதேசசபை உப அலுவலகம் மறு சீரமைப்பு செய்வதற்காக, அமைச்சர் பைசர் முஸ்தபாவுடன் பேசி அந்த கட்டடம் மறு சீரமைப்புச் செய்யப்படும் என மேலும் தெரிவித்தார். (213)

# முல்லை.தண்ணிமுறிப்புக் குளம் வற்றியதால் 300 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிப்பு




முல்லைத்தீவு, ஒக்.8

**முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தண்ணிமுறிப்பு குளத்தின் நீர்மட்டம் முற்றாக வற்றிக் காணப்படுவதால், குளத்தினை நம்பி நன்நீர் மீன்பிடியில் ஈடுபடும் 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்க் குடும்பங்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

தண்ணிமுறிப்புக் குளத்தில் இரண்டு மீன்பிடிச் சங்கங்கள் காணப்படுகின்றன. 150 அங்கத்தவர்களைக் கொண்ட தண்ணிமுறிப்பு மீனவர் சங்கமும் 154 அங்கத்தவர்களைக் கொண்ட முஸ்லிம் மீனவச் சங்கம் என இரண்டு சங்கங்கள் காணப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சி காரணமாகக் குளத்தின் நீர்மட்டம் முற்றாகக் குறைந்துள்ளதால், குளத்தை நம்பி வாழும் 300க்கும் மேற்பட்ட குடும்பங்களின் பொருளாதாரமும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நாள்தோறும் நூறு கிலோவுக்கும் மேற்பட்ட நன்னீர் மீன்கள் இந்த குளத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்றும், தற்போது குளத்தில் நீர் இன்மையினால் தொழில் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் நன்னீர் மீன்பிடி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள். (21)



# உணவுப்பொதிகள் வழங்கல்

வவுனியா,ஒக் .8

வவுனியா செட்டிகுளம் நீலியாமோட்டைப் பிரமணாலங்குளம் பகுதியில் வாழும் லினிஸ்பாலன் மகேஸ்வரி குடும்பத்தினரின் வீடு தற்செயலாகத் தீப்பிடித்து தையல் இயந்திரம் உடுதுணிகள் ஆகியன தீயில் கருகியுள்ளன. இதனை அறிந்த மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.சிறிநிவாசன் கிராம அலுவலர் செல்வி ரஞ்சினி, அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பிரதீஸ் ஆகியோர் அவசரமாக உதவி தேவையென லண்டன் வீ 3 பவுண்டேசன் நிறுவனத்தை அணுகி கேட்டபோது மேற்படிக் குடும்பத்துக்கு இரண்டு மாதங்களுக்கு போதுமான உலர் உணவுகள் கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (222)

# புலமைப் பரிசில் வலுவூட்டல் பயிற்சி

கிளிநொச்சி, ஒக்.8

பரந்தன் அந்தோனியார் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 3 , 4 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வலுவூட்டல் பயிற்சி வகுப்புகள் கடந்த நான்காம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தரம் 3, 4 ஆகிய வகுப்புகளில் கற்கும் 32 மாணவர்களுக்கான வலுவூட்டல்ப் பயிற்சி வகுப்பினை நடத்த லண்டனில் இயங்கும் நிறுவனத்தினரின் நிதிப் பங்களிப்பில், கிளிநொச்சியில் இயங்கும் நாறோ நிறுவனத்தினர் இந்த செயற்பாட்டை முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது .(9)

# அல் அஸ்ஹர் கல்லூரியின் நூற்றாண்டு விழா

மன்னார்,ஒக் .8



மாவனல்லை ஹெம்மாதகம அல் அஸ்ஹர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவும் அதனையொட்டி நடைபெறும் கல்விக் கண்காட்சியும், வர்த்தகக் கண்காட்சியும் நேற்று முந்தினம் சனிக்கிழமை இடம் பெற்றது.

குறித்த நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் கலந்து கொண்டார்.


பாடசாலை அதிபர் எம் .ஏ. எம் .அக்ரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப், ஜம்மியதுல் உலமாவின் பிரதிச் செயலர் எம்.எஸ்.எம்.தாஸிம் மௌலவி உட்பட பலர் கலந்து கொண்டனர். (56)



# வாழ்வாதார உதவி வழங்கல்

வவுனியா,ஒக் .8

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம், மீடியாபாம் பகுதியில் வசிக்கும் இரண்டு கண்பார்வையையும் இழந்த செல்வநிலானி என்ற மாணவிக்கு, வீ 3 பவுண்டேசன் ஊடாக கொக்குவில் பொற்பதியைச்சேர்ந்த சுவிஸில் வசிக்கும் சுதன் இராஜசுந்தரம் வாழ்வாதார உதவியாக 36 ஆயிரம் ரூபா பெறுமதியான ,ஆடுகளை வழங்கி வைத்தார். (222)



# மன்னாரில் கண்டல் தாவர நடுகை நிகழ்வு

மன்னார்,ஒக்.8

தேசிய மர நடுகை நிகழ்ச்சி திட்டத்தின் (வன ரோபா) வனமாக்கல் செயற்பாட்டின் கீழ் மன்னார் மாவட்டத்தில் 2ஆயிரம் கண்டல்த் தாவரங்களை நடுகை செய்யும் நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் ஆரம்பமானது.

தேசிய சுற்றாடல் மாநாடு அரசதலைவரின் தலைமையில் மன்னாரில் இடம் பெறுவதையிட்டு, கரையோரப் பாதுகாப்பு மற்றும் மூலவளமுகாமைத்துவத்திணைக்களத்தின் எற்பாட்டில் மன்னார் தள்ளாடிப் பகுதியில் உள்ள கரையோரப் பகுதிகளைத் தூய்மைப் படுத்தி, இயற்கை வளங்களைப்பாதுகாக்கும் வகையிலும், மீன் இனங்களின் இனப் பெருக்க வீதத்தை அதிகரிப்பதற்காகவும், கரையோரங்கள் அரிக்கப்படுவதை தடுப்பதற்காகவும், கரையோரங்களை அண்டிய தள்ளாடிப் பகுதியில் 2ஆயிரம் கண்டல்த் தாவரங்கள் நடப்பட்டன.

இலங்கைக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் மூலவளமுகாமைத்துவத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்திர கீர்த்தி தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் அரச அலுவலர்கள், 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கண்டல்த் தாவரங்களை நட்டு வைத்தனர். (213)



# உருளைக்கிழங்கு, வெங்காயத்துக்கு உத்தரவாத விலை நிர்ணயம்

## விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

வடமராட்சி,ஒக் .8

**உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயத்துக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படுவதுடன், இவற்றின் இறக்குமதிக்கு, இறக்குமதித் தீர்வையை ஏற்படுத்தவுள்ளோம். இதனால் விவசாயிகளின் உற்பத்திக்கு நிகரான விலை கிடைக்கும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பழமரத் தோட்டத்துக்கான பழமரக்கன்றுகளை நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திருமதி பாலராணி சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வருகை தந்த விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர , பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதன், மாகாண கல்வியமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார். வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோர் வருகை தந்தனர் .

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் கூறுகையில்,

எமது நாட்டுக்கு 60 ஆயிரம் மெற்றிக் தொன் பழங்கள் வருடந்தோறும் இறக்குமதி செய்யப்படுகின்றன. 2 ஆயிரம் மெற்றிக் தொன் திராட்சைப் பழங்களும் , 958 மில்லியன் ரூபா பெறுமதியான தோடம்பழங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றது. இவற்றையெல்லாம் எமது நாட்டில் உற்பத்தி செய்ய முடியும். யாழ்ப்பாணத்திலும் பழமரச் செய்கையை நன்றாக மேற்கொள்ள முடியும். இங்கும் திராட்சை உற்பத்தி செய்யப்படுகின்றது.

வடமாகாணத்தில் வவுனியாவில் உழுந்து .பாரம்பரிய நெல் உற்பத்தி வலயங்கள் முல்லைத்தீவில் நிலக்கடலை உற்பத்தி வலயம், யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரியில் மாம்பழ உற்பத்தி வலயம் ஆகியவற்றை உருவாக்கியது போல யாழ்ப்பாணத்தில் திராட்சை அபிவிருத்தி உற்பத்தி வலயத்தை உருவாக்கவுள்ளோம்.

உங்களுக்குத் தேவையான உணவை நீங்களே உற்பத்தி செய்ய வேண்டும். நாமே பயிரிட்டு உண்ண வேண்டும். இது விவசாயிகளான உங்கள் கைகளில் தான் உண்டு என்றார்.

இந்த நிகழ்வில் விவசாய அமைச்சர், பிரதி விவசாய அமைச்சர் மற்றும் குழுவினரும் கல்லூரி மாணவிகளுக்கு பழமரக்கன்றுகளை வழங்கி வைத்தனர். (173)



# சிறுவர் தின நிகழ்வு

கொடிகாமம். ஒக்.8

மிருசுவில் குடும்ப முன்பள்ளி சிறுவர் தின நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி குடும்ப தலைவி ஜேசுதாசன் சகாயராணி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் சச்சிதானந்தன் , சிறப்பு விருந்தினராக அருட்பணி எஸ். டபிள்யூ ஜேம்ஸ் அடிகள், புனித நீக்கிலார் ஆலய பங்கு தந்தை , மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அருட்சகோதரி ஜீ.ஜ .சுபாசினி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. அரியநாயகம் பெற்றோர்கள் மாணவர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (159)

# பேருந்து தரிப்பிடம் திறப்பு

கொடிகாமம்,ஒக். 8

கொடிகாமம் இராமாவில் பகுதியில் ஏ9 முதன்மைச் சாலையில் அமரர் வேலுப்பிள்ளை பொன்னுச்சாமி நினைவாக நிர்மானிக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் 1.30 மணிக்கு குடும்பத்தினரால் நாடா வெட்டி பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு, பொது மக்களின் பாவனைக்கு தற்போது திறந்து விடப்பட்டது. (9)





முல்லையில் பல பகுதிகளிலும்

# மரக்கன்றுகளை நட்டது வனவளத்திணைக்களம்

முல்லைத்தீவு, ஒக்.8

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் வனவளத்திணைக்களத்தால் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மன்னாகண்டல் பகுதியில் 500 மரக்கன்றுகளும், கரைதுறைப்பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட ஆண்டான்குளப்பகுதியில் எண்ணாயிரத்து 500 மரக்கன்றுகளும் உடையார்கட்டு வீதியின் கரையோரம், 100 மரக்கன்றுகளும் விசுவமடுவில் 100 மரக்கன்றுகளும்,வற்றாப்பளை கோவில் பகுதியில் 20 மரக்கன்றுகளும், முல்லைத்தீவுக் கடற்கரை தேவாலய பகுதியில் 300 மரக்கன்றுகளும், இந்த ஆண்டில் இதுவரை நட்டுவைக்கப்பட்டுள்ளன என்று வனவளத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவில் பற்றைக் காடுகளாகக் காணப்படும் பொது மக்களின் காணிகளைக் கூட வனவளத் திணைக்களம் தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதி என்று தெரிவித்து எல்லையிட்டுள்ள நிலையில், மாவட்டத்தின் பல பகுதிளிலும் மரக்கன்றுகள் நடப்பட்டது மக்கள் மத்தியில் கேள்வியை எழுப்பியுள்ளது. (21)

# கிணற்றில் இருந்து யானைக் குட்டி மீட்பு

வவுனியா.ஒக் .8

வவுனியா மாமடுவ பொலிஸ்பிரிவிற்குட்பட்ட நாமல்கம பகுதியில் நேற்றுக் காலை கிணற்றில் இருந்து மூன்றுமாதமேயான யானைகுட்டி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில் காட்டுப்பகுதியில் உள்ள காணியின் பாழைடந்தகிணற்றில், யானைகுட்டி ஒன்று விழுந்துள்ளதை அப்பகுதியால் சென்றவர்கள் அவதானித்துள்ளனர். பின்னர் அது தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்துக்கும் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பலமணி நேரபோராட்டத்தின் பின்னர் யானைக்குட்டியை மீட்டனர்.

குறித்த கிணற்றிற்கு அருகில் காட்டுப்பகுதி இருப்பதுடன், யானைகளின் நடமாட்டம் அதிகம் இருந்து வருகிறது. இந்த நிலையில் தாயுடன் யானைக்குட்டி வந்தநிலையில் இடையில் மின்சார வேலி அமைக்கபட்டுள்ளதால் தாய் யானையால் அதனை தாண்டிவரமுடியாமல் போயிருக்கலாம் என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

மருத்துவ பரிசோதனையின் பின்னர் யானைக் குட்டி மீண்டும் தாயுடன் சேர்க்கபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)



# கசிப்புடன் இருவர் கைது



யாழ்ப்பாணம் ,ஒக் .8

துன்னாலைப் பகுதியில் வீடு ஒன்றில் கசிப்பு தயாரிக்கும் வேலையில் ஈடுபட முற்பட்டவர்களை, நெல்லியடி குற்றத்தடுப்புப்பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட சிறப்பு சுற்றிவளைப்பில், அப்பகுதியைச் சேர்ந்த இரு பெண்கள் கைது செய்யப்பட்டதுடன், ஆண் ஒருவர் தப்பியோடியுள்ளார். சம்பவத்தில் 115 லீற்றர் கோடாவும், 10 லீற்றர் கசிப்பும், கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் 39 மற்றும் 43 வயதுடைய பெண்கள் என்றும் மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (26)

# சாவாகச்சேரி நகரசபையால் மாணவர்களுக்கிடையில் போட்டிகள்

சாவகச்சேரி, ஒக்.8

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி ,சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொது நூலகத்தினரால், பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கிடையில் நடத்தவுள்ள போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி பொது நூலக மண்டபத்தில் ஆரம்பிக்குமென நகரசபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

தரம் 1 மாணவர்களுக்கான சித்திரப் போட்டிகள், எதிர்வரும் 19 ஆம் திகதி மாலை 3 மணிக்கும், தரம் 3 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை 3 மணிக்கும் தரம் 4 மாணவர்களுக்கான, பொது அறிவும் நுண்ணறிவும் போட்டிகள் 23 ஆம் திகதி மாலை 3 மணிக்கும், எதிர்வரும் 27 ஆம் திகதி தரம் 2 மாணவர்களுக்கான வாசிப்புப் போட்டிகள்காலை 9.30 மணிக்கும் ,தரம் 5 மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் காலை 11.30 மணிக்கும் நடைபெறுமெனவும் அறிவித்துள்ளார்.

போட்டிகளில் தரம் 1 மாணவர்களுக்கான சித்திரப் போட்டியில் எனது செல்லப் பிராணி, காலைக் காட்சி, பூக்கடை என்னும் தலைப்பிலும், தரம் 2 மாணவர்களுக்கான வாசிப்பு போட்டியில் தரம் 2 வகுப்பு தமிழ் பாட நூலிலிருந்து ஒரு பந்தி எழுத்துப் பிழையின்றி தெளிவான உச்சரிப்புடன் வாசித்தல் வேண்டும்.

தரம் 3 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் 75 சொற்களுக்கு குறையாமல் நூலக வாசிப்பின் முக்கியத்துவம் , நவராத்திரி விழா .நூல்கள் மிகச் சிறந்த நண்பர்கள். என்னும் தலைப்பில் எழுத வேண்டும்.

தரம் 4 மாணவர்களுக்கான பொது அறிவும் நுண்ணறிவும் போட்டியில், நுண்ணறிவுப் போட்டி புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்களை அடிப்படையாகக் கொண்டும், பொது அறிவுப் போட்டி அண்மைக்கால தகவல்களான விளையாட்டு, கல்வி, கணிணி, அரசியல், சினிமா ,இலங்கை பற்றிய வரலாறு .போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்ததாகவும் இருக்கும்.

தரம் ஐந்து மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில், இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வின் அவசியம் ,பொலித்தீன் பாவனைக்கான மாற்றீடு , தேசிய வாசிப்பு மாதம் ஆகியவற்றிலும் போட்டிகள் நடத்தப்படுமெனவும் அறிவித்துள்ளார். (9)

# முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி

கொடிகாமம், ஒக் .8

சாவகச்சேரிப் பிரதேச சபையின் அல்லாரை ஐங்கரன் முன்பள்ளிச் சிறார்களின், ஆக்கப் பொருள் கண்காட்சி நேற்றுக் காலை 10 மணிக்கு ஐங்கரன் முன்பள்ளி மண்டபத்தில் முதன்மை முகாமைத்துவ உதவியாளர் சாவகச்சேரி பிரதேச சபை சி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தவிசாளர் சாவகச்சேரி பிரதேச சபை க.வாமதேவன் , சிறப்பு விருந்தினர்களாக சாவ கச்சேரி பிரதேச சபை கச்சாய் உப அலுவலக பொறுப்பதிகாரி பர்சனா, ஓய்வு பெற்ற உப அதிபர் செ.சிவபாதசுந்தரம், கிராம அலுவலர் அல்லாரை மோ.பிரகாஸ், ஐங்கரன் சனசமூக நிலையத்தின் தலைவர் ,சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் க.தம்பு ஆகியோர் கலந்து கொண்டனர். (159)



சுயாதீன தமிழ் இளைஞர்களால்

## 10,000 பனம் விதைகள் வவுனியாவில் விதைப்பது ஆரம்பம்

வவுனியா, ஒக்.8

வவுனியாவில்சுயாதீனமாகஇயங்கும் தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் 10 ஆயிரம் பனம் விதைகளை விதைக்கும் செயற்றிட்டம் இடம்பெறுகின்றது.

இந்தச் செயற்றிட்டத்தின் ஏழாவது கட்ட நடவடிக்கை நெளுக்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்லூரியின் ஏற்பாட்டில் வவுனியா சாம்பல் தோட்டம் குளக்கரைக்கு அருகே நேற்றுக் காலை 7.30 அளவில்நடைபெற்றது.

இதுவரையில் கிட்டத்தட்ட 4ஆயிரத்து 30 பனம்விதைகள் விதைக்கப்பட்டநிலையில்நேற்றுமேலதிகமாக 2ஆயிரம்பனம்விதைகள் விதைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச்செயற்றிட்டநடவடிக்கையில் கிராம அலுவலர் நா.சிறிதரன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க. விஜயரூபன், பாடசாலைமாணவர்கள், பொது அமைப்புகளின்பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு மிக ஆர்வத்துடன் பனம் விதைகளை விதைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

நிலத்தடிநீரைத்தக்கவைப்பதற்காகவும் பனை மூலமான உற்பத்திகளைப்பெருக்குவதற்காகவும்மக்கள் மத்தியில்விழிப்புணர்வைஏற்படுத்தும்முயற்சியாகவும்சுயாதீனமாகச் செயற்படும்இளைஞர்கள்வவுனியாவில் பத்தாயிரம் பனம் விதைகள் விதைக்கும் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அதனடிப்படையில் கடந்தமாதம் 23ஆம் திகதி எல்லப்பர் மருதங்குளத்தில்200விதைகள்நடப்பட்டன. இந்தச் செயற்றிட்டம், சாஸ்திரிகூழாங்குளத்தில் 300, வவுனியா குளக்கட்டில்110,எல்லப்பர்மருதங்குளத்தில் 200, தவசிகுளத்தில் 420, சாஸ்திரிகூழாங்குளத்தில் 800, கற்பகபுரத்தில்1000,கோதண்டர்நொச்சிகுளத்தில் 1000, சாம்பல்தோட்டத்தில்2000என 30பனம்விதைகள் இதுவரைவிதைக்கப்பட்டன.

(4,21,110)

## கெற்பேலியில் பலாமரக் கன்றுகள் நடுகையும் விதைநெல் களஞ்சியசாலைக்கு அடிக்கல்லும்

கொடிகாமம், ஒக். 7

'நாம் பயிரிட்டு நாம் உண்போம்' என்ற தொனிப்பொருளில் பத்து லட்சம்பலாமரக்கன்றுகள்நடுகை செய்யும் வேலைத்திட்டமும் 14 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் விதை நெல் களஞ்சியக் கட்டடத்துக்கான அடிக்கல்நடும்நிகழ்வும் கொடிகாமம் கெற்பேலியில் நேற்று இடம்பெற்றன.

யாழ்ப்பாண மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் நிசாந்தன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

அதில் விவசாய அமைச்சர் உரையாற்றும்போது:

எந்த அரசும் வழங்காத உதவிகளையும் கொடுப்பனவுகளையும் இந்த அரசு வழங்கியுள்ளது.

மாகாண விவசாய நடவடிக்கைக்கு 3ஆயிரம் மில்லியன் ரூபாவும் மானிய உரக் கொடுப்பனவுக்கு 35 ஆயிரம் மில்லியன் ரூபாவும், ஒதுக்கப்பட்டுள்ளது. எங்கள் பிரதேசத்திலும் கச்சான், மாம்பழம், மிளகாய்வளங்களை உருவாக்கி நல்ல வருமானத்தைப் பெறவேண்டும். விவசாய உற்பத்திக்கு நல்ல சந்தை வாய்ப்பை உருவாக்குவது என்று அரசு தீர்மானித்துள்ளது.

விதை நெல் களஞ்சியக் கட்டடத்துக்கான அடிக்கல்லை விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர நட்டார். விவசாய அமைச்சின் கமக்கார நம்பிக்கை நிதியத்தினூடாக அமையவுள்ளது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் விவசாய அமைச்சர்மகிந்தஅமரவீர, விவசாயபிரதி அமைச்சர் இ. அங்கஜன், யாழ்ப்பாண மாவட்டச்செயலர்நா.வேதநாயகன், விவசாயப்பணிப்பாளர் திருமதி. கைலேஸ்ரன், சாவகச்சேரிப்பிரதேசசெயலர்தேவந்தினி பாபு, சாவகச்சேரி கமநல அபிவிருத்தி அலுவலர் முரளிதரன் கமக்கார அமைப்பின் தலைவர்கள் மற்றும்விவசாயப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் மாமரக் கன்றுகளை சம்பிரதாய பூர்வமாக நட்டனர். பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(4,159,9)



# ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராடும்கட்சியாக இருப்போம்;

## மறுவாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி கூறுகிறது

வவுனியா, ஒக். 8

அனைத்துஒடுக்குமுறைகளுக்கும்எதிராகப்போராடும்ஒருஅமைப்பாக தமதுகட்சிஇருக்கும்என்றுமறுவாழ்வளிக்கப்பட்டதமிழ்விடுதலைப் புலிகள் கட்சி கூறியுள்ளது. அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடும் ஒரு அமைப்பாக தன்னை அடையாளப்படுத்தி இந்தக் கட்சி பயணிப்பதுடன் தன்னைச் சமூகத்துக்குள் ஈடுபடுத்த முயற்சித்து வருகின்றது என்றும் கட்சி தெரிவித்துள்ளது.



மறுவாழ்வளிக்கபட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியின் ஒன்றுகூடல் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. வடக்குகிழக்கைச் சேந்த பலர் அதில் கலந்துகொண்டனர். புதிய நிர்வாகத்தெரிவும்இடம் பெற்றது. அதன்பின்னர் கட்சியின் அரசியல் நிலைப்பாடுதொடர்பாக அறிவிக்கும் செய்தியாளர்சந்திப்புநேற்றுஇடம் பெற்றது.

அதில்கட்சியினர்தெரிவித்ததாவது: 2009 இல் போர்நிறைவுற்ற பின்னர்தமிழ்இனத்தின்மீதுகட்டவிழ்த்து விடப்பட்டஇனப்படுகொலைமுள்ளிவாய்க்கால் பேரவலமாக வந்தது. அதன் பின்புகூடத் தமிழ்அரசியல் தலைமைகள் என்று கூறிக்கொள்வோர் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க முன்வர வில்லை. இன்று மக்களே போராடிவருகிறார்கள். சிங்களப் பேரினவாத அடக்குமுறைகளுக்கு உள்ளாகும் தமிழ் மக்களின்பலம், தமிழ்த்தலைமைகளின் சுயநலத் தேர்தல் அரசியல் மற்றும் குழுவாதப் போக்குகளால் மேலும் பலவீனமடைந்துள்ளது. தமிழர் அரசியலில் வெறுமை ஏற்பட்டிருப்பதுடன்மக்களைஅரசியல் மயப்படுத்தி, அரசியல் போராட்ட சக்தியைஇளையோர்மத்தியில்ஏற்படுத்துவதில் போருக்குப் பின்பாக வடக்குகிழக்கு தவறியுள்ளமையைக் காணமுடிகிறது.

அதிகார சக்திகளிடம் அடிபணிதலுக்கு சாத்தியமே இல்லை என்கின்ற அடிப்படையிலும்எமது அரசியல்நிலைப்பாட்டில்எந்தவித சமரசமும்மாற்றுஅமைப்புடன்வைத்துக் கொள்வதில்லை என்ற புரிதலுடன் நாம் செயற்பட்டுவருகின்றோம். எமது மக்களின் வலிகளை நாம் உணர்ந்ததன் வெளிப்பாடே எம்மை ஆயுதம் ஏந்த வைத்தது. எமது மக்களுக்கான அரசியல் நெருக்கடிகள் யாவும் தொடர்ந்த வண்ணமே இருக்கிறது. நாம் நம்பிய அரசியல் சக்திகள்அனைத்தும் எமதுமக்களைஏமாற்றி அந்தமக்களின் அவலமான வாழ்க்கையைத் தொடர வைத்தது. தமது அரசியல் சுகபோகங்களைத் தொடர்வதையே தமது சிறந்த தந்திரோபாயமாகவும், குறிக்கோளாகவும் தொடர்ந்துகொண்டு வருகின்றார்கள் என்று கட்சியின்உறுப்பினர்கள் தெரிவித்தனர். அவர்களில் கட்சியின் தலைவர் க. இன்பராசா தெரிவிக்கையில், தற்போதைய சூழலில் தியாகி திலீபன், அன்னைபூபதி, கரும்புலி நினைவுநாள்கள்போன்றவற்றைச் செய்வதற்கு உரித்தானவர்கள் முன்னாள் போராளிகளான நாம்மாத்திரமே. இவ்வாறானநிகழ்வுகளில் எந்தஒரு அரசியல்வாதிகளும் கலந்துகொள்ளத் தேவையில்லை. சுமந்திரனும், கயேந்திரகுமாரும் வீணாகச் சண்டையிட வேண்டாம். தமிழ் அரசுக் கட்சி, ஈபிஆர் எல் எப், ஈபிடிபி, போன்ற கட்சிகளின்நிகழ்வுகளில்நாம்கலந்துகொள்ளவதில்லை. அதுபோல எமது நிகழ்வுகளில் நீங்கள் ஏன் கலந்துகொள்கிறீர்கள்?

இன்று ராணுவத்துடன் இருந்து காட்டிக்கொடுப்பில்ஈடுபட்டவர்களே புலம்பெயர் தேசங்களான இலண்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து செயற்படுகின்றனர். மறுவாழ்வழிக்கப்படாமல் அவர்கள் எவ்வாறு அந்த நாடுகளுக்குச் சென்றார்கள்? அப்படியானால்காட்டிகொடுத்தது அவர்களே - என்றார்.

(4,110)

# எமது அரசியல்உரிமைகள்வழங்கப்படுமானால் தமிழர்களும்ஒன்றுசேர்ந்துநாட்டைச்சிறப்பாக்கலாம்

## பச்சிலைப்பள்ளி தவிசாளர் கூறுகிறார்



யாழ்ப்பாணம், ஒக். 8

எமது அரசியல் உரிமைகள் வழங்கப்படுமானால் தமிழ்மக்களாகியநாம்ஒற்றுமைப்பட்டு, இந்தநாட்டை எதிர்காலத்தில் உலகில் சிறந்த நாடக உருவாக்க முடியும். சிங்களச்சகோதரர்கள்இதனைவிளங்கிக்கொள்ள வேண்டும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஒழுங்கமைப்பில்'நல்லிணக்கத்துக்கானஉறவுப்பயணம்'என்னும் கருத்திட்டத்தை அடிப்படையாகக்கொண்ட இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்ட நிகழ்வு பச்சிலைப்பள்ளியில் நேற்றுஇடம்பெற்றது. அதில்முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டுகருத்துத்தெரிவிக்கையிலேயேமேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்மக்கள்ஒருபோதும்சிங்களமக்களுக்குஎதிரானவர்கள் அல்லர். அவர்கள் சிங்கள இனவாத அரசுகளுக்கு எதிராகப் போராடினார்களே தவிர ஒருபோதும் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவில்லை. இதனைச் சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். தமிழ்மக்களுடையவாழ்வியல்உரிமைகள்மறுக்கப்பட்டு கலை, கலாசார, பண்பாட்டு உரிமைகளுடன் கூடிய அனைத்து விடயங்களிலும் பின்தள்ளப்பட்டு இரண்டாந்தரக்குடிமக்களாக நடத்த முற்பட்ட வேளையிலேயே தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடினார்கள்.

இதைஇனவாதநோக்கோடும், குறுகிய அரசியல் இலாபம் தேடும் சிங்கள பேரினவாத சக்திகள் திரிபுபடுத்தி இனங்களைப்பிரித்தாண்டனர். இதனால்தமிழர்களாகிய நாம் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்துள்ளோம் என்றார்.

பளை வண்ணாங்கேணி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைமன்றத்தின்கிளிநொச்சிமாவட்ட உதவிப்பணிப்பாளர், மாத்தறை மாவட்ட இளைஞர் சேவை மற்றும் கிராம அலுவலர், பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சமுர்த்தி அலுவலர், மாத்தறை மாவட்ட இளைஞர்கள், கிளிநொச்சி மாவட்ட இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் என்று தவிசாளர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(4)

# வடக்கு மாகாணத்தின் பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்துக்கு 440 வெற்றிடங்கள்

## நிரப்ப விரைவில் விண்ணப்பம் கோரப்படவுள்ளன

யாழ்ப்பாணம், ஒக். 8
வடக்கு மாகாண பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்துக்கு நிலவும் 440 வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பம் கோரப்படவுள்ளது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

வெற்றிடமாகக் காணப்படும் விஞ்ஞான பாட ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் பகிரங்க விண்ணப்பம் கோரப்படவுள்ளது. இவ்வாறு கோரப்படும் விண்ணப்பத்துக்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த விஞ்ஞானப் பட்டதாரிகள் அனைவரும் விண்ணப்பிக்க முடியும். அவ்வாறு விண்ணப்பிப்ப வர்கள் தேவைக்கு அதிகமாகக் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் போட்டிப்பரீட்சை மூலமும் தேவையான அளவுக்கு உட்பட்ட விண்ணப்பங்கள் கிடைப்பின் நேரடியாகவே நேர்முகத் தேர்வின் மூலம் தேர்வுகள் இடம்பெறும்.

வடக்கு மாகாணத்தில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் சார் பட்டதாரிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றனர். அவற்றுக்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே காணப்படுகின்றது.

3 பாடங்களுக்கும் கடந்த காலங்களிலும் விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதும் தேவையானளவு எண்ணிக்கையான விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை. இதன் காரணமாகவே குறித்த பாடங்களுக்கு வெற்றிடங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன என்றார்.

(4,105)

# தொல்லியல் திணைக்களம் வடக்கில் இன முரண்பாட்டை உருவாக்குகிறதா?

## மாகாண உறுப்பினர் ரவிகரன் கேள்வி

முல்லைத்தீவு, ஒக். 8
தொல்லியல் திணைக்களம் வடக்கில் இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் திணைக்களமாகச்செயற்படுகின்றதா என்றுசந்தேகிக்க வேண்டியுள்ளது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

திணைக்களத்தினர் பூர்வீக இந்து மத இடங்களைக் குறிவைத்துஅழித்து அந்த இடங்களில் பௌத்த சின்னங்களைநிறுவுவதற்கு ஏதுவான செயல்களையே செய்துவருகின்றார்கள். உண்மையான தொல்லியல் திணைக்களத்தின் வேலைகளைச்செய்யாது மதத் திணிப்பையே மேற்கொள்ளும் இவர்களின் செயற்பாடுகளைக் கண்டிப்பதுடன் இது விடயத்தை அரசதலைவரின் கவனத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்றும் தெரிவித்தார்.

தொல்லியல் திணைக்களத்தின் நம்பகத்தன்மை பற்றிக் கடந்த ஜூலை 18 ஆம் திகதி அமர்வில் கருத்துக்களைத் தெரிவித்திருந்தேன்.

தேசிய மரபுரிமைகள் அமைச்சின் 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் 16ஆம் திகதிய அரசிதழ்அறிவித்தல்பல தொன்மையான இடங்களை வடக்கின் மாவட்டங்களில் தொல்லியல் திணைக்களத்துக்குள் உள்வாங்கப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக முல்லைத்தீவில் 47இடங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குருந்தூர் மலையில் அண்மையில் பௌத்த பிக்குகளின் துணையுடன் புத்தர் சிலை வைக்க வந்த குழுவினர் ஊர்ப் பொதுமக்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதேபோல் நாயாறு நீராவியடிஏற்றப்பகுதியில் விகாரை அமைப்பதற்கும், புத்தர் சிலைவைப்பதற்குமான முயற்சியும் தடுத்து நிறுத்தப்பட்டது.

வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலையின் ஆதிகால இந்துக் கோவில்கள் இருந்த இடத்தில் பௌத்தத்தின் திணிப்புகள் இடம்பெற்றபோதும் இளையோர், பொதுமக்களால் நிறுத்தப்பட்டன.

எனவே இவை விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி மதத் திணிப்பை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - என்று அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(4)

# மறுவாழ்வு அமைச்சை வைத்து சிலர் வியாபாரம் செய்ய முயற்சி

## பிரதி அமைச்சர் மஸ்தான் குற்றச்சாட்டு

மன்னார், ஒக். 8
மீள் குடியேற்றம், மறுவாழ்வு அமைச்சு தற்காலிக அமைச்சு. இந்த அமைச்சை வைத்துக்கொண்டு சிலர் வியாபார செய்யப் பார்க்கின்றார்கள். சரியான முறையில் திட்டங்களை மேற்கொண்டிருந்தால் அனைவருக்குமான உரிய தேவைப்பாடுகள் முடிவடைந்து இந்த அமைச்சு இல்லாமல் போயிருக்கும்.

இவ்வாறு பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார். கடந்த கால ஆட்சியை நாம் ஏன் மாற்றினோம்? கடந்த ஆட்சியின் வேலைத்திட்டங்கள்சிறப்பானவை. எல்லாம் நன்றாகத்தான் இருந்தன. ஆனால் அவர்களின் நிலைப்பாடுகள் பிழை. ஏமாற்றுக்கள், ஊழல்கள் நிறைந்திருந்தன. அதன் காரணமாகவே கடந்த ஆட்சி மாற்றப்பட்டது என்றும் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தை மன்னார் உப்புக்குளம் முதன்மை வீதியில் நேற்றுமுற்பகல் 10 மணியளவில் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் திறந்து வைத்தார்.

அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதி அமைச்சராக இருந்துகொண்டு நான் சும்மா இருக்க முடியாது.

சுமார் 2 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களை நான் சமர்ப்பித்துள்ளேன். இந்த வருடத்துக்குள் 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதாக அரசதலைவர் தெரிவித்துள்ளார். அதில் ஆரம்பக் கட்டமாக நூறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த நிதி ஒதுக்கீட்டை மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் பிரித்து ஒதுக்க வேண்டியுள்ளது.

போர் நிறைவடைந்து 10 வருடங்களாகின்றன. போருக்கு முன்னரும் மீள் குடியேற்ற அமைச்சு காணப்பட்டது.

தற்போதைக்கு வந்திருக்க வேண்டியது வடக்கு அபிவிருத்தி. ஆனால் மீள் குடியேற்றம், மறுவாழ்வு, வடக்கு அபிவிருத்தி அமைச்சு செயற்படுகின்றது.

மீள் குடியமர்வு முடிவடையவில்லை. மறுவாழ்வளிப்பு நிறைவடையவில்லை. வடக்கு அபிவிருத்தி, அரசின் செயற்றிட்டங்களும் இந்தத் திட்டங்களில் பிழையாக வழி நடத்தப்பட்டுள்ளன.

அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர் நல்ல நோக்கத்துக்காக இந்தப் பகுதிகளில் பெரிய நல்ல திட்டங்களைத் தந்தாலும் வாழ்வாதார உதவிகள் உட்பட அனைத்துமே சரியான திட்டமிடல் இல்லாமல் இந்த நிதி ஒதுக்கீடுகள் கூடுதலாக முறைகேடு செய்யப்படுகின்றன என்று எமக்குப் பல முறைப்பாடுகள் வருகின்றன.

கிராமங்களில் இடம்பெறுகின்ற பல்வேறு பிரச்சினைகளை மக்களுடன் இருந்து தீர்த்து வைக்க வேண்டும்.

இங்கே நடக்கின்ற ஊழல்கள், அடாவடித்தனங்களை, அரசியல் வியாபாரங்களை ஏன் தடுக்க முன்வரக்கூடாது? சில கிராமங்களுக்குச் சென்றால் ஒரு நேரச் சாப்பாட்டிற்கு கூட வழியில்லாமல் மக்கள் இருக்கின்றார்கள். அவர்களின் கஸ்டங்களும் நீக்கப்பட வேண்டும் - என்றார்.

(4)

## ஒட்டு மொத்த தமிழ்த் தலைவர்களும்

# நாடாளுமன்றைப் புறக்கணித்தால்தான் கைதிகளின் விடுதலைக்கு வழிபிறக்கும்!

## மன்னார் நகர சபை உறுப்பினர் தெரிவிப்பு

மன்னார், ஒக். 8
ஒட்டு மொத்த தமிழ் அரசியல் தலைவர்களின் புறக்கணிப்புத்தான் அரசியல் கைதிகளின் விடுதலையை வலுப்படுவதும் என்று மன்னார் நகர சபை உறுப்பினர் ஜோசப் தர்மன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது.

அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும்என்றகோரிக்கை வடக்குகிழக்கு பகுதிகளில் மாத்திரம் இல்லாமல் இலங்கை முழுவதும், தமிழ் சமூகத்திடம் மட்டும் இல்லாமல் அனைத்துத் தரப்பினரிடமும் இருந்து ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

அரசியல் கைதிகளின் விடயம் தற்போது இலங்கை மட்டும் அல்ல வெளிநாடுகள் மத்தியிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான எமது ஆர்ப்பாட்டங்கள் பல்வேறு விதமாக இடம்பெற்று வருகின்றன. உணவு ஒறுப்புப் போராட்டங்களாக, அகிம்சை வழிப் போராட்டம், கவனவீர்ப்புப் போராட்டங்களாக இடம் பெற்று வருகின்றன.

இன்னொரு பகுதியில் அரசியல் வாதிகள் அனைத்து மேடைகளிலும், பன்னாட்டுத் தூதுவர்களிடமும், அரசியல் கைதிகள் தொடர்பாகப் பலமுறை பேசி விட்டார்கள். தற்போதும் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இதுவரை எமது கோரிக்கைக்கு அரசு செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. எனவே எமது கோரிக்கையை, எமது போராட்ட வழியை மாற்ற வேண்டும். குறிப்பாக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்க வேண்டும். அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து மாகாண சபை, உள்ளளூராட்சி மன்ற உறுப்பினர்களும் அனைத்து அமர்வுகளையும் புறக்கணிப்பதன் மூலமும் எங்களுடைய எதிர்ப்பைக் காட்ட முடியும்.

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் அரசதலைவர் முன்னிலையில் அரசியல் கைதிகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உரை நிகழ்த்தியபோதும் அரசதலைவர் அரசியல் கைதிகள் தொடர்பாகவோ அவர்களின் விடுதலை தொடர்பாகவோ எந்தக் கருத்தையும் முன்வைக்காதது கவலையளிக்கின்றது.

எனவே ஒட்டு மொத்த தமிழ் அரசியல் தலைவர்களின் புறக்கணிப்புகள் ஒன்றே எமது போராட்டத்தை மேலும் வலுப்படுவதும். எனவே அரசுடன் இணைந்து எல்லா விடயங்களிலும் பங்குபற்றி விட்டு அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பாகப் பேசுவது ஒரு போதும் அவர்களின் விடுதலைக்கு உதவப்போவதில்லை. அதேநேரம் ஒட்டு மொத்தமாக அனைவரும் எமது புறக்கணிப்புகளை ஒற்றுமையாக வெளிப்படுத்தும் போது நிச்சயமாக அரசியல் கைதிகளுக்குச் சாதகமான விடயங்கள் இடம்பெறும் என்று நம்புகின்றேன் - என்றுள்ளது.

(4,56)

## வடக்கு மாகாணத்தில்

# ரூ.685 மில்லியன் பெறுமதியான செயற்றிட்டங்கள் முன்மொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 8
வடக்கு மாகாணத்தில் உள்ள உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்திக்கென 685 மில்லியன் ரூபா பெறுமதியான 62 செயற்றிட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு ஒதுக்கீடு செய்த ஆயிரம் மில்லியன் ரூபா நிதிக்கான வேலைத் திட்டங்களில் தற்போது 685 மில்லியன் ரூபா நிதி முன்மொழியப்பட்டுள்ளது. என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

முன்மொழியப்பட்ட இந்தச் செயற்றிட்டங்களை ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களுக்கும் வழங்கி அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட இருக்கும் வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை,

யாழ்ப்பாணம்- 21, கிளிநொச்சி - 13, மன்னார் - 8, முல்லைத்தீவு - 13, வவுனியா- 7.

மேற்படி 62 வரையிலான செயற்றிட்டங்களையும் வடக்கில் உற்பத்தியாளர் கூட்டுவுச் சங்கங்களில் நடைமுறைப்படுத்தி அதற்கான வேலைத்திட்டங்கள் விரைவாக ஆரம்பித்தும் வைக்கப்படவுள்ளன.

இந்தச் செயற்றிட்டங்கள் அபிவிருத்தி ஊடாக வடக்கில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் யாவும் விரைவுபடுத்தப்படும்.

கடந்த காலங்களில் போதிய வருமானம், செயற்பாடுகள், சந்தை வாய்ப்புகள் இன்றிய நிலையில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்து வந்துள்ளன என்று ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

(4,17)





# நாட்டின் சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

கொழும்பு, ஒக். 8

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பல பகுதிகளில் தொடர்ந்தும் பெய்து வரும் அடைமழை காரணமாக வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகப் பலர் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வலல்லாவிட்ட பிரதேச செயலகத்தில் 3 பெண்களும், அகலவத்தைப் பிரதேசத்தில் ஒருவரும் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போயுள்ளதாக அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரதேசச் செயலர் தெரிவித்துள்ளார்.

பஹலஹெவெஸ்ஸ, கொஸ்கெட்டிய, மல்வச்சிகொட பகுதியில் பெரியளவிலான மக்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்தப் பகுதியின் பல முதன்மை மற்றும் உள்ளக வீதிகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாக அந்தப் பகுதியின் செயற்பாடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகச் செயலர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையில் காணாமற் போனவர்களைத் தேடும் நடவடிக்கையில் பிரதேச மக்கள் மற்றும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை தொடக்கம் பெய்து வரும் கடும் மழை காரணமாகப் பல்வேறு பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

பேருவளை, பதுரலிய மற்றும் களுத்துறை நகரை அண்டிய பல பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி சில இடங்களில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மீட்புப் படகுகள் மற்றும் உயிர்காக்கும் கவசங்கள் சகிதம் வெள்ளத்தில் சிக்குண்டவர்களை மீட்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சீரற்ற காலநிலை; பூங்காவிற்கு பூட்டு

கொழும்பு, ஒக் 8

சீரற்ற காலநிலை காரணமாக பெத்தகன ஈர நில பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை அவதான நிலையத்தின் அறிவுறுத்தலுக்கமைய, எதிர்வரும் நாள்களில் மழைவீழ்ச்சி அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதால் பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வானிலை சீரான நிலமைக்கு திரும்பிய பின்னர் மக்கள் பாவனைக்குத் திறந்துவிட எதிர்பார்த்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இதேவேளை, கடந்த சில தினங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் கனமழை பெய்து வருகின்றது. இதன்காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

## ‘செல்பி’ மோகத்தால் உயிரிழந்த இளைஞர்

கொழும்பு, ஒக் 8

குளிக்கச் சென்ற இளைஞர் அருவியில் தவறி வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார். பெலிஹூல் ஓய பஹன்துடா பலங்கொட அருவியில் குளிக்கச் சென்ற இளைஞனே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். கொழும்பு மட்டக்குளிப் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான சஞ்சய் கிருஷ்ணா என்ற தமிழ் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து பலங்கொட சென்ற இளைஞர்கள் 10 பேர் அருவியில் குளிப்பதற்காகச் சென்றுள்ளனர். இதன்போது சிலர் செல்பி ஒளிப்படம் எடுக்க முயற்சித்துள்ளனர்.

இதன்போது, அதில் ஒருவர் அருவியில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். அவரை காப்பாற்ற முயன்ற மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்துள்ளார். உயிரிழந்த இளைஞனின் சடலம் பலங்கொட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆபத்து நிறைந்த இவ்வாறான பகுதிகளில் நீராடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் மக்களை கேட்டுள்ளனர்.

## சிகரெட்டுகளுடன் இளைஞன் கைது

கொழும்பு, ஒக் 8

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளுடன் இளைஞன் ஒருவரைக் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளின் பெறுமதி 10 இலட்சத்துக்கும் அதிகமானது எனச் சுங்கப் பிரிவு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## மைத்திரியுடன் இணைந்து கூட்டணி அரசை ஏற்படுத்தோம்

### கூட்டு எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர்

கொழும்பு, ஒக்.8

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து கூட்டணி அரசை ஏற்படுத்தக் கூட்டு எதிர்க்கட்சியினர் தயாரில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.

இடைக்கால அரசு ஒன்று அமைக்கப்படஉள்ளதாக அரசியல் வட்டாரத்தில் பரப்பரப்பாக பேசப்பட்டு வரும் விடயம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி எந்தச் சந்தர்ப்பத்திலும் இதற்கு தயாராக இல்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் கூட்டணி அரசை அமைக்க எந்த வகையிலும் தயாரில்லை என்பது கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனது தனிப்பட்ட கருத்து. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை வைக்கக் கூடிய காலம் கடந்து விட்டது. 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வந்த போது, மூன்று மாதங்களுக்குள் திருத்தங்களை கொண்டு வருவேன், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான தன்னை நம்பி, 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு வாக்களிக்குமாறு கூறினார்.

20ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்படும் எனக் கூறினார். மூன்றரை வருடங்கள் கடந்து விட்டது இன்னும் 20ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. இதுதான் நம்பிக்கை இழப்புக்குக் காரணம். நிதி மோசடி விசாரணைப் பிரிவு தொடர்பான அரச இதழ் அறிவித்தல் கொண்டு வந்த போது, இதன் மூலம் பாரதூரமான அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம், அந்த அரச இதழின் அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு நாங்கள் அரச தலைவரிடம் கோரினோம். அதனை தான் காணவும் இல்லை உடனடியாக அதனை இரத்துச் செய்கிறேன் என்ற அரச தலைவர் கூறி எழுந்து சென்றார். அதுவும் அப்படியே இருக்கின்றது. எப்படி அரச தலைவர் மீது நம்பிக்கை வைக்க முடியும். இதன் பின்னர் 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிக்கு வர வேண்டும் என அரச தலைவர் கூறினார். எமது அரசியல் அறிக்கையை ஏற்றுக்கொண்டார்.

எனினும் தேர்தல் நடைபெறவிருந்த இறுதி நாள்களில் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி இரவு அரச தலைவர் ஒரு அறிக்கையை வெளியிட்டார். மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சர் பதவிக்கு தகுதியற்றவர். ரணில் விக்ரமசிங்க திருடன் இல்லை. ரணில் நல்ல மனிதர் அவருடன் அரசை முன்னெடுத்துச் செல்வோம் எனக் கூறினார். இதன் மூலம் தேர்தல் வெற்றியைத் தடுத்தார்.

கூட்டு எதிர்க்கட்சிக்கு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க வேண்டும் என்று அரச தலைவரிடம் கோரிக்கைவிடுத்தோம். அவரும்கோரிக்கை ஏற்றுக்கொண்டார். எனினும் நாங்கள் நாடாளுமன்றத்திற்கு செல்லும் போது ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் தீர்மானம் எடுத்து விட்டனர்.

அண்மையில் தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தலைமை அமைச்சரைக் காப்பாற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அரச தலைவர் காட்டிக்கொடுத்தார்.

இவ்வாறு செயற்பட்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தொடர்பாகவும் அவர் கூறுவதையும் நம்பி இடைக்கால அரசை அமைக் கூட்டணி ஆட்சிக்கு கூட்டு எதிர்க்கட்சி இணங்குவது எமக்கு பாரதூரமான பிரச்சினை. இதனால், தற்போதைய அரச தலைவர் கூறுவதை நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. முடிந்தால் அவர் செயலில் அதனைச் செய்து காட்ட வேண்டும் -என்றார்.

## அரச வங்கியில் துப்பாக்கிகள் திருட்டு

கொழும்பு, ஒக். 8

அரச வங்கி ஒன்றிலிருந்த இரு துப்பாக்கிகள் திருடப்பட்டுள்ளதாகப்பொலிஸார்தெரிவித்தனர்.

மொரகஹஹேன, கோனபொலப் பகுதியில் உள்ள அரச வங்கி ஒன்றிலிருந்த துப்பாக்கிகளே நேற்றுமுன்தினம் இரவு இவ்வாறுதிருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கபடுகின்றது.

இந்தத்துப்பாக்கிகள்திருடப்பட்ட சந்தர்ப்பத்தில் வங்கியின் பாதுகாப்பு அதிகாரி இருக்கவில்லை எனவும்பொலிஸார்தெரிவித்தனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார்தெரிவித்தனர்.

## விபத்தில் இருவர் சாவு

கொழும்பு, ஒக்.8

கொழும்பு க்ண்டி முதன்மை வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக் கொழும்பு - கண்டி முதன்மை வீதியின் நிட்டம்புவ கலல்பிட்டியவில் இடம்பெற்றது. விபத்தில் மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப்பொலிஸார்தெரிவித்தனர். பாரவூர்தி ஒன்றும் சிற்றூர்ந்தும் நேருக்கு நேர் மோதிக்கொண்டமையினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹெரோயினுடன் வயோதிபப் பெண்கள் கைது

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புகளின்போது இரு வயோதிபப் பெண்கள் உட்பட நான்கு பேரைக் ஹெரோயினுடன் கைது செய்துள்ளதாகப் பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது. கிரேண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வதுள்ளவத்தைப் பகுதியில் 415 கிராம் 200 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயினுடன் 60வயதுடையஒருபெண்ணும், பொரள்ளைப் பகுதியில் 15 கிராம் 250 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயினுடன் 60 வயதுடைய மற்றுமோர் பெண்ணும் கைதுசெய்யப்பட்டனர். பேலியகொட மீன் சந்தைக்கு அருகில் 4 கிராம் 900 மில்லிகிராம் நிறையுடைய ஹேரோயினுடன் 39 வயதுடைய ஒருவரும், மாதம்பிட்டிப் பகுதியில் 5 கிராம் 100 மில்லிகிராம் நிறையுடைய ஹேரோயினுடன் 58 வயதுடைய மற்றுமொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

# நிறைவேற்று அதிகார முறை ஊழல்வாதிகளை காக்கிறது

சாடுகின்றது ஜே.வி.பி.



**கொழும்பு, ஓக்.8**
**நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை ஊழல்வாதிகளைப் பாதுகாக்கப் பயன்படுகின்றது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.**

20ஆம் திருத்த சட்டத்தின் ஊடாக நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிப்போம் எனும் தொனிபொருளில் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. கிளிநொச்சி சந்தைப் பகுதியில் இந்தத் துண்டறிக்கைகள் மக்கள் விடுதலை முன்னணியினரால் வழங்கப்பட்டன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்கள், குறித்தும் 20ஆம் திருத்தச் சட்டத்தை கொண்டு வருவதன் நோக்கம் தொடர்பிலும் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தல்களும் வழங்கப்பட்டன.

அதன்போது கருத்துத் தெிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தாவது:

தற்போது எங்கும் ஊழல்கள் நிரம்பி வழிகின்றன. மத்திய வங்கியில் ஊழல் இடம்பெற்றிருக்கின்றது. அதன் முக்கிய ஊழல்வாதியைக் கைது செய்ய முடியாமல் பொலிஸார் தடுமாறுகின்றனர். இலங்கையில் மாறிமாறி வந்த ஆட்சிகாலங்களில் பல்வேறு ஊழல்கள் இடம்பெற்றுள்ளன.

தற்போது முன்னாள் பாதுகாப்புச் செயலாளரைக் கைது செய்வதை அரச தலைவர் தடுத்து வருகின்றார். நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை ஊழல்வாதிகளைப் பாதுகாக்கப் பயன்படுகின்றது. கடந்த 10 வருடங்களாக அரச தலைவர் ஊழியர்கள் படையணியின் பிரதானிகளும், அரச தலைவர் செயலாளர்களும் ஊழலில் ஈடுபட்டு சிறைவாசம் அனுபவித்துள்ளனர். இந்த நிறைவேற்று அதிகார பதவி ஊழல் மிக்கது ஆகவேதான் இதனை இல்லாதொழிக்குமாறு நாம் கோருகின்றோம் - என்றார். (ற)



# தொடருந்து மோதி 3 யானைகள் சாவு

கொழும்பு. ஒக். 8
தொடருந்தில் மோதி காட்டு யானைகள் 3 கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் வெலிகந்தை புனாணை தொடருந்து நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றது. மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இரவு நேர விரைவு தொடருந்து மோதியே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் இரண்டு பெட்டிகள் தடம்புரண்டுள்ள போதிலும் பயணிகள் எவருக்கும் பாரதூரமான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், விரைவு தொடருந்தின் கொழும்பு நோக்கிய பயணமும் தடைப்பட்டது. பயணிகள் மாற்றுப் போக்குவரத்து எற்பாடுகளைச் செய்து பயணத்தை மேற்கொண்டனர்.

இதேவேளை, விபத்தில் சிக்கி உயிரிழந்த காட்டு யானைகளின் உடல்களை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்துவதற்கும் தடம்புரண்ட பெட்டிகளைப் பழுது பார்ப்பதற்கும் தொடருந்துப் பாதையை சீர்செய்வதற்குமான பணிகளைத் தொடருந்து திணைக்கள அதிகாரிகளும் வன இலாகா அதிகாரிகளும் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். (110)

## மாத்தறை – பெலியத்தை தொடருந்து சேவை ஆரம்பம்

கொழும்பு, ஒக் .8
மாத்தறை - பெலியத்தை இடையிலான தொடருந்து சேவை இவ்வருட இறுதிக்குள் ஆரம்பித்து வைக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

மூன்று கட்டங்களாக அமைக்கப்படவுள்ள மாத்தறை - கதிர்காமம் தொடருந்து வீதியின் முதல் கட்டமான 36 கிலோ மீற்றர் நீளமுடைய மாத்தறை - பெலியத்தை இடையிலான தொடருந்து வீதியின் பணிகளே இவ்வாறு ஆரம் வைக்கப்படவுள்ளது.

இதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் 48 கிலோ மீற்றர் நீளமுடைய பெலியத்தை - அம்பாந்தோட்டை இடையிலான தொடருந்து வீதி மற்றும் மூன்றாம் கட்டத்தின் கீழ் 39 கிலோமீற்றர் நீளமுடைய அம்பாந்தோட்டை - கதிர்காமம் இடையிலான தொடருந்து வீதியும் அமைக்கப்படவுள்ளது.

முதல் கட்டமான மாத்தறை - பெலியத்தை இடையிலான தொடருந்து வீதியை அமைப்பதற்காக 278 மில்லியன் டொலருக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பின்போது சஜித் பிரேமதாசவுக்கு அதிக பொறுப்புக்கள்

கொழும்பு, ஒக். 8
ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது அதன் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாசவுக்கு அதிக பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளதாக அந்தக் கட்சியின் மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கையின்போது மாகாண சபைத் தேர்தலை மையப்படுத்தியதாகவும் கட்சியின் பொறுப்புக்களில் மாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற கட்சியின் அரசியல் சபைக் கூட்டத்தின் போது கட்சியின் மாற்றங்கள் தொடர்பில் பல சமிக்ஞைகள் வெளிப்பட்டதாகவும், இது கட்சியின் எதிர்காலத்தைச் சிறந்ததாக மாற்றும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய அதிகாரப் பகிர்வே நாட்டுக்குத் தேவை

*கூறுகின்றார் ராஜித சேனாரத்ன*

கொழும்பு, ஒக். 8
இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய அதிகாரப் பகிர்வை அதிகபட்சமாகச் சென்று மேற்கொள்வதற்கு தாம் எதிர்பார்ப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்

அதிகாரங்களைப் பகிர்ந்தால் தங்களுக்குரிய அதிகாரங்கள் பறிபோய்விடும் எனச் சிலர் நினைப்பதாக தெரிவித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, இலங்கையை ஆட்சிசெய்த அரசர்கள் அதிகாரங்களைப் பகிர்ந்தே ஆட்சியை நடத்தியதாகவும் அந்த முறையே தற்போது அவசியம் என்றும் சுட்டிக் காட்டினார்.

பன்னாட்டு ஆயுர்வேத கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சி கண்டியில் நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மற்றும் சுகாதார அமைச்சின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் ராஜித சேனாரத்ன, அதிகபட்ச அதிகாரப் பரவலையே தாம் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரங்களைப் பகிர்ந்தால் தங்களுக்கான அதிகாரங்கள் குறைந்துவிடும் என்று சிலர் நினைக்கின்றார்கள். அப்படியல்ல அதிகாரங்களைப் பகிர்ந்தால் பணிகளைச் செய்வதற்கு இலகுவாக அமையும்.

ஆரம்பகாலத்திலிருந்தே அதிகாரங்களைப் பகிர்வதற்கு நான் விருப்பமுடையவனாக இருக்கின்றேன். மேலதிகமாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் நான் விருப்பம் உள்ளவனாக இருக்கின்றேன்.

இன்னும் இன்னும் அதிகாரங்களைப் பகிர்ந்தாலும் சாலச்சிறந்தது. எமது வரலாற்றில் இந்த நாட்டில் அதிகாரங்களைப் பகிர்ந்து தான் ஆட்சி நடத்தியிருக்கின்றார்கள். ஐக்கிய நாட்டில் மூன்று அரசர்களும் அதிகாரங்களைப் பகிர்ந்தே ஆட்சிபுரிந்தார்கள்.

வெள்ளையர்களே இங்கு வந்து ஒற்றையாட்சியை அமைத்தார்கள். வெள்ளையர்கள் அறிமுகப்படுத்திய ஒற்றையாட்சியையே இப்போது இருக்கின்ற சில தேசப்பற்றாளர்கள் பெருமைபாராட்டிக் கொள்கின்றனர்.

மாறாக எமது நாட்டு அரச முறைமை பற்றி அந்தத் தேசப்பற்றாளர்கள் தம்பட்டம் அடிப்பதில்லை - என்றார்.

## 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரம் முக்கிய சந்தேகநபர் முன்னாள் கடற்படைத் தளபதி?

கொழும்பு, ஒக் 8
கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரத்தில் முக்கிய சந்தேக நபராக முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரனாகொடவும் காணப்படுகின்றார் என்று இலங்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கருதுகின்றனர். இதனை அவர்கள் நீதிமன்றத்துக்கும் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவிக்கையில்,

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட விடயம் தொடர்பில் முன்னாள் கடற்படைத் தளபதிக்கு நன்கு தெரிந்திருந்தது.

இது தொடர்பான ஆதாரங்களை அவர் ஒழிக்கின்றார் முக்கிய சாட்சியைக் கூட மௌனமாக்கியுள்ளார்.

கொழும்பில் கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்தின் இரகசிய வதை முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பில் முன்னாள் கடற்படை தளபதிக்கு நன்கு தெரிந்திருந்தது. ஆனால் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. எனத் தெரிவித்துள்ள குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் இதற்கான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கடத்தப்பட்ட இளைஞர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எந்த தொடர்புமில்லை எனத் தெரிவித்துள்ள விசாரணையாளர்கள் அந்தக் காலப்பகுதியில் கடற்படைப் பேச்சாளராக காணப்பட்ட டீகேபி தசனாயக்க மற்றும் சுமித் ரணசிங்க என்ற முக்கிய அதிகாரி ஆகியோரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த முகாம்களிலேயே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா விடுத்த வேண்டுகோளைதொடர்ந்து வசந்த கரணாகொடவின் செயலாளர் சேர்மல் பெர்ணாண்டோ இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார் என தெரிவிக்கும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சேர்மல் பின்னர் இது குறித்து கடற்படை தளபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் எனவும் தெரிவிக்கின்றனர்.

எனினும் தமிழ் இளைஞர்களை விடுவிப்பதற்கோ அல்லது அவர்களின் உயிரை காப்பாற்றுவதற்கோ கரணாகொட எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இந்த சம்பவம் தொடர்பில் நன்கு அறிந்துள்ள அதிகாரிகளிற்கு வாக்கு மூலங்களை வழங்கியுள்ள கடற்படையிரை முன்னாள் தளபதி உன்னிப்பாக கண்காணித்து வருகின்றார் எனவும் சிஐடியினர் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 11 தமிழ் இளைஞர்கள் விவகாரத்தில் முன்னாள் கடற்படைத் தளபதியும் முக்கிய சந்தேகநபராக மாறியுள்ளார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அணுகுமுறை மாறட்டும்

இலங்கையில் அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார் நீதி அமைச்சர் தலதா அத்துகோரள. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனிடமும் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனிடமும் தாம் நேரிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துவிட்டார் என்று கூறியிருக்கிறார் அமைச்சர்.

அவர் மட்டுமல்லர், தற்போதைய ஆட்சியில் உள்ள முக்கிய தலைவர்கள் எல்லோருமே இதே கருத்தையே கொண்டிருக்கிறார்கள். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்குள் வெளிப்படையாக இதனைத் தெரிவிக்கமாட்டார் என்றாலும் வெளிநாடுகளில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது இதனையே சொல்வார். அரசியல் கைதிகள் என்று யாரும் இலங்கையில் இல்லை என்று அடித்துக்கூறுவார். அரசதலைவர் மைத்திரிபாலவோ, பயங்கரவாதத்தை தோற்கடித்த படையினர் என்று ஐக்கிய நாடுகள் சபையிலேயே பயங்கரவாத முத்திரையைக் குத்துபவர் என்பதால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதானவர்களை அரசியல் கைதிகள் என்று அவரும் சொல்லப்போவதில்லை.

இப்படிக் கைதாகிச் சிறைகளில் இருப்பவர்களும் வழக்குகளை எதிர்கொண்டவர்களும் பயங்கரவாதிகள் என்கிற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் அரசியல் தலைவர்கள் இந்த விடயத்தை அரசியல் தீர்மானம் ஒன்றின் மூலம் அணுகுவார்கள் என்று எண்ணுவது இயலாமையின் வெளிப்பாடே.

அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமுமே தமிழர்களுக்கு எதிரான அரசியல் நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டவைதான் என்பதுதான் தமிழர் தரப்பின் நிலைப்பாடு. இந்தச் சட்டங்கள் கடந்த காலங்களில் தமிழர்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப்பட்டன. தமிழர்களைத்தான் இந்தச் சட்டங்களைக் கொண்டு ஒடுக்கினார்கள். எனவே இந்தச் சட்டங்களே அரசியல் நோக்கம்கருதிய, இனஒடுக்குமுறையைநோக்காகக்கொண்ட சட்டங்கள்தான்.

அதற்கும் மேலே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் தமது அரசியல் இலக்கைஅடைவதற்காகஅவர்கள்சார்ந்திருந்தஇயக்கத்தின் கட்டளையைஏற்றுச்செயற்பட்டவர்களேதவிர, தனிப்பட்ட ரீதியில்குற்றமிழைத்தவர்கள்அல்லர்என்பதால்அவர்களைக் குற்றவாளிகளாகப் பார்க்க முடியாது, அரசியல் கைதிகளாகவே பார்க்கவேண்டும் என்று சம்பந்தன் பல தடவைகளில் தெளிவுபடுத்தியிருந்தார்.

இத்தனைக்குப் பின்னரும் ஆட்சித் தலைவர்கள் மீண்டும் மீண்டும்அரசியல்கைதிகள்எவரும்இல்லைஎன்றுகூறுவது இந்தவிடயத்தைஅவர்கள்எப்படிஅணுகிறார்கள்அல்லது அணுகப்போகிறார்கள்என்பதைத்தெளிவுபடுத்துகின்றது. எனவே இந்த விடயத்தில் இனியும் ஆட்சியாளர்களை நம்பிக்கொண்டுஇராமல்மக்களைஒன்றுதிரட்டிபோராட்டக் களத்தில் குதிப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வரவேண்டும். போராட்டத்தை மக்கள் மயப்படுத்தி பெருமெடுப்பில் ஆட்சிச் செயல்பாடுகளை முடக்கி கனதியான செய்தியை அரசுக்கு வழங்கினால் தவிர இந்த விடயத்தில் பேச்சு மூலமான தீர்வு ஒன்றுக்கு இனிமேலும் காத்திருப்பதில் பயனில்லை.

அரசுடனான அணுகுமுறையை மாற்றுவதற்கான காலம் வந்து விட்டது என்று மேடைகளில் மட்டும் முழங்கிப் பயனில்லை. மக்களைத்திரட்டி பெரும் போராட்டங்களை அரசுக்கு எதிராக நடத்துவதன் மூலம், ஆட்சியை முடக்குவதன் மூலம் மட்டுமே உரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆங்காங்கே மக்கள் தன்னெழுச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். அவற்றை ஒருங்கிணைத்து உரிய தலைமைத்துவத்தை வழங்கி ஒன்றுபட்ட பெரும் அறப் போராட்டத்தை நடத்தி இந்த விடயத்தில் காத்திரமான செய்தியை வழங்குவதற்குத்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இனியும் தயக்கம் காட்டக்கூடாது. அரச தலைவரோடு சந்திப்பு நடத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினை தீரப்போவதில்லை. இதனை அரசியல் தீர்மானம் மூலம் அணுகாமல்சட்டத்தைக்காட்டிஏமாற்றுவதிலேயேஅவரும் காலத்தைக்கடத்தப்போகிறார். கடந்தகாலங்களிலும்அவர் அதைத்தான்செய்திருக்கிறார். எனவே இந்தத்தருணத்திலாவது தமிழ் மக்களுக்கு உரிய தலைமைத்துவத்தை வழங்குவதற்குக் கூட்டமைப்பு முன்வரவேண்டும்.

# குடாநாட்டின் அவல நிலைக்கு முடிவு எப்போது?

சேரலாதன்



**யாழ்.** குடாநாட்டில் இடம்பெற்று வருகின்ற சம்பவங்கள் இங்கு வாழ்கின்ற மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்துள்ளன. அவை இப்போது பூதாகாரமாகி விட்டிருக்கின்றன. இப்போதெல்லாம் பத்திரிகைகளில் அது சார்ந்த செய்திகளே ஆதிக்கம் செலுத்துகின்றன. கொக்குவில் பகுதியில் வீட்டுக்குள் புகுந்து வாள்வெட்டு, ஆறு வாள்களுடன் அறுவர் யாழ். நகரில் அட்டகாசம், சிவில் உடையில் வந்தவர்கள் துப்பாக்கிச் சூடு மட்டுமல்லாது வடக்கில் கஞ்சா அத்தியாவசிய உணவாகி விட்டது என்று கூறுமளவுக்கு நிலமை மோசமடைந்து விட்டிருக்கிறது.



இவற்றில் ஈடுபடும் குழுக்கள் தமக்குள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொள்ளும் கலாசாரம் ஒன்றும் உருவாகியிருப்பதாகவே தோன்றுகிறது.

**பெயரும், பெருமையும் சிதைந்து, ஏன் இந்த நிலை?**

கல்வி, கலாசாரம், பண்பாடு, நல்லொழுக்கம், கடவுள் பக்தி ஆகியவற்றில் சிறந்த மக்களைக் கொண்டது எனப் பெருமையுடன் கூறப்பட்ட குடாநாடு இன்று பிறர் எள்ளி நகையாடும் நிலைக்குப் பின்



தள்ளப்பட்டமை வேதனைக்குரியது. வித்தியாவைத் தொடர்ந்து வவுனியாவில் மாணவி கொலை. சுழிபுரத்தில் ஆறே வயதான பச்சிளம் பாலகி கழுத்து நெரித்துத் கொலை என அனைவரையும் அதிர்ச்சியிலும், வேதனையிலும் ஆழ்த்துகின்ற சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாகவும் தெரியவில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று கூறுவார்கள். குடாநாட்டின் இன்றைய நிலையை எடுத்துக் காட்டுவதற்கு இப்படியாகன சம்பவங்கள் பல நடந்தேறிவிட்டன. ஆறு வயதுப் பாலகியையே விட்டுவைக்காத கொடிய மிருகங்கள் வாழுகின்ற நிலத்தில் ஏனையவர்களின் உயிர் வாழ்தல்களும் கேள்விக்குட்பட்டு நிற்கின்றன.

**பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னும் நீளும்!**

போர் ஓய்ந்த பின்னர் அமைதியும் சமாதானமும் நாட்டில் நிலவி வருவதாகக் கூறப்படுகின்றபோதிலும், குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரையில் அது எட்டாக் கனியாகவே மாறிவிட்டது. தமது அரசியல் உரிமைகளுக்காகப் போராடிய தமிழர்களை இல்லாதொழிக்கும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் ஏற்படுத்திவிட்ட பாதகங்கள் பல. அந்தச் சட்டத்தை நீக்கக் கோரிய குரல்களுக்குச் செவிசாய்க்காமல் போர் ஓய்வுக்கு வந்தபிறகும்கூட அசமந்தமாக இருந்து வருகின்றன அரசுகள். அரசுக்குள்ள அழுத்தம் காரணமாக அந்தச் சட்டத்தை நீக்க முயன்றாலும், நீக்கக் கூடாது என்று அவர்கள் வாதிடும் அளவுக்குப் பலம் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் தமிழ் இளைஞர்கள். இவர்கள் ஈடுபடுகின்ற வாள்வெட்டுக்கள், அடாவடித்தனங்கள் என்பவற்றைக் காரணம் காட்டி அரசு அந்தச் சட்டத்தை ஏன் இன்னும் நீட்டிக் கொள்ளாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் அளிக்க முடியாது. குருவி இருந்து பனம் பழம் விழுந்த சொல்லாடல் போல சீர்கெட்ட தமிழ் இளைஞர்களால் பயங்கர வாதத் தடைச் சட்டமும் நீளலாம்.

**புலிகளின் காலம் நினைவுக்கு வருகிறது**

வடக்கில் இவ்வளவு பொலிசாரும், இத்தனை காவல் நிலையங்களும் நிலைகொண்டிருந்தும் கொள்ளைச் சம்பவங்கள், திருட்டு ஆகியன யாழ்.குடா நாட்டில் குறைவில்லாமல் இருக்கின்றன. கொள்ளையர்களும், திருடர்களும் இங்கு சுதந்திரமாக உலவி வருவதுடன் தமது காரியங்களைத் தடையின்றி நிறைவேற்றவும் செய்கின்றனர். இரவு வேளையில் எங்கோ ஒரு மூலையில் நாய் குரைத்தாலும் தூக்கம் கலைந்து பயத்துடன் விழித்திருக்க வேண்டிய அவல நிலையில் இங்குள்ள மக்கள் உள்ளனர். இந்த நிலையில் புலிகளின் காலத்தை ஒருகணம் மீட்டுப் பார்க்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். புலிச் சீருடையை அரிதாக, எங்கோ ஓர் இடத்தில் தான் அப்போதெல்லாம் காணமுடிந்தது. ஆனால், எங்கிலும் குற்றங்களைக் காணமுடியது. வரலாற்று உண்மை இது.

**போதையே முக்கிய காரணம்**

குடாநாட்டு இளைஞர்களிடையே போதைப்பொருள் பாவனை அதிகரித்ததையே குற்றச் செயல்களின் அதிகரிப்புக்குக் காரணமெனக் கூறப்படுகின்றது. பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள்களை விநியோகிப்பதில் சிலர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. தமிழ் மாணவர்களின் கல்வியைச் சீரழிப்பதும், இளைய தலைமுறையைத் தலையெடுக்கவிடாமல் கெடுத்து விடுவதும் இந்தத் தீயசக்திகளின் நோக்கமென்பதை எவரும் புரிந்துகொள்வார்கள்.

போதைப்பொருள்களுக்கு அடிமையாகிப் போனவர்கள் எந்தக் கொடுமையைச் செய்வதற்கும் அஞ்சமாட்டார்கள். கொலை, கொள்ளை, திருட்டு, வாள்வெட்டு ஆகியன இவர்களுக்குச் சாதாரண விடயங்களாக மாறிவிட்டுள்ளன.

**அனைத்துத் தரப்பினரும் ஒன்றித்துச் செயலாற்ற வேண்டும்**

இளைஞர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையாவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும். பொலிஸார் பார்த்துக் கொள்வார்கள் என நினைக்காது சமுதாயத்தில் உள்ளவர்கள் தாமாகவே முன்வந்து இதை அழிப்பதற்கான செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டும். நாடாளுமன்ற ஊறுப்பினர்கள்; மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கிராமங்கள்தோறும் சென்று இளைஞர்களிடையே நல்லொழுக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும். பாடசாலை மாணவர்கள் போதைப் போருள் பாவனை உட்படத் தவறான வழிகளில் செல்லாத வண்ணம் கண்காணிக்கப்படுதல் அவசியமாகும். கிராம மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டுப் பொலிஸாரின் ஒற்றுமையுடன் அடாவடித்தனங்கள் கண்காணிக்கப்படுவதுடன் அவற்றைக் கட்டுப்படுத்தவும் வேண்டும்.

குடாநாட்டு அரசியல்வாதிகள் கட்சி பேதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மக்கள் அமைதியாக வாழ்வதற்கான நெறிமுறையொன்றை உருவாக்குதல் வேண்டும். தமது சொந்த அரசியல் இலாபங்களை மட்டுமே கருத்தில்கொண்டு செயற்படுவதை அவர்கள் முதலில் நிறுத்திக்கொள்ள வேண்டும். ஊர் எரியும்போது பிடில் வாசித்த மன்னனின் நிலையில் இவர்கள் இருக்கக்கூடாது.

# தமிழ்ச்செல்வனுக்கு இரங்கல் பா எழுதிய கருணாநிதி

**தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி -43**



தேவநாயகம் தேவானந்த்

இலங்கையில் இறுதிப்போர் ஆரம்பமானதும் தமிழீழ விடுதலைப் புலிகள் சந்தித்த பெரும் இழப்பு. அதன் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப தமிழ்ச்செல்வனின் இழப்பாகும். புலிகள் இயக்கத்தின் போராளியும், தளபதியும், அதன் அரசியல் பிரிவுத் தலைவருமான சு. ப. தமிழ்ச்செல்வன் 2007ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி இலங்கை விமானப் படையின் தாக்குதலில் கிளிநொச்சியில் கொல்லப்பட்டார். இறப்பின் பின்னர் அவருக்குப் பிரிகேடியர் பதவி வழங்கப்பட்டது. புலிகள் இயக்கத்தில் கீழ் மட்டங்களில் இருந்து வளர்ந்து, தலைமையின் உள்வட்டத்தின் ஒருவராகச் செயற்பட்டவர் தமிழ்ச்செல்வன். 1993ஆம் ஆண்டில் பூநகரி இராணுவத் தளம் மீதான 'தவளைப் பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கையின்போது காலில் காயமடைந்தார். அதைத் தொடர்ந்து அரசியற் துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்தப் பதவியிலிருக்கும் போதே அவர் கொல்லப்பட்டார்.

**பல மட்டங்களில் இருந்தும் இரங்கல்கள்**

புலிகளின் சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்று வந்த தமிழ்ச் செல்வன், புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்குப் பின்னர் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுக்களில் புலிகள் தரப்புக் குழுவின் தலைவராகவும் செயற்பட்டு வந்தார்.

"23 ஆண்டுகால இயக்க வாழ்வைக் கொண்ட இவரின் இறப்புப் புலிகளால் ஈடு செய்யப்பட முடியாதது." ஏன்று இவரது இழப்புப் பற்றிப் பி.பி.சி தமிழ்ச் சேவை கருத்துத் தெரிவித்திருந்தது. இவரது இழப்புச் செய்தி அறிந்து உலகத் தமிழர்கள் துயருற்றனர். தமிழ்நாட்டில் பல தலைவர்களும், அமைப்புக்களும் அனுதாபம் தெரிவித்தன. அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த கருணாநிதி, தமிழ்செல்வனின் மறைவுக்கு இரங்கல் பா எழுதினார். அது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

**செல்வா எங்கு சென்றாய்...?**

கருணாநிதி எழுதிய கவிதைக்கு 'செல்வா எங்கு சென்றாய்?' என்று தலைப்பிட்டிருந்தார். தமிழ்ச்செல்வனுக்குக் கருணாநிதி எழுதிய கவிதை வருமாறு.

*எப்போதும் சிரித்திடும் முகம்*
*எதிர்ப்புகளை எரித்திடும் நெஞ்சம்!*
*இளமை இளமை இதயமோ*
*இமயத்தின் வலிமை! வலிமை!*
*கிழச்சிங்கம் பாலசிங்கம் வழியில்*
*பழமாய் பக்குவம்பெற்ற படைத் தளபதி!*
*உரமாய்த் தன்னையும்*
*உரிமைப் போருக்கென உதவிய*
*உத்தம வாலிபன் உயிர் அணையான்*
*உடன் பிறப்பணையான்*
*தமிழர் வாழும் நிலமெலாம்*
*அவர்தம் மனையெலாம்*
*தன்புகழ் செதுக்கிய செல்வா*
*எங்கு சென்றாய்?*

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவரின் மறைவுக்கு முதல்வர் கருணாநிதி எழுதிய இரங்கல் கவிதைக்கு அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா உடனடியாகக் கண்டனம் தெரிவித்தார்.

"பன்னாட்டு அளவில் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்தின் உறுப்பினர் கொல்லப்பட்டதற்கு அதிகாரப் பொறுப்பில் இருக்கும் முதல்வர் கருணாநிதி இரங்கல் தெரிவித்துள்ளது அவரின் பொறுப்பற்ற செயலை எடுத்துக் காட்டுகிறது.

இதன் மூலம் அவர் தீவிரவாதத்தை ஊக்குவிக்கிறார் என்பது மிகத் தெளிவாகத் தெரிந்து விட்டது. இதற்காக கருணாநிதி முதல்வர் பொறுப்பிலிருந்து பதவி விலக வேண்டும். தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் அவரது அரசைக் கலைப்பதற்கு மத்திய அரசு ஆணையிட வேண்டும்" என்று ஜெயலலிதா தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

(தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

# யார் குத்தியாவது அரிசியாகட்டும்!

வடக்குக் கிழக்குக்கான 40ஆயிரம் வீடுகள் சீன நிறுவனத்தின் உதவியுடன் விரைவாகக் கட்டிக் கொடுக்கப்படும். இதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கான அனுமதி கிடைத்துவிட்டது. அடுத்த மாதம் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என மீள் குடியேற்ற அமைச்சர் அறிக்கை வெளியிட்டிருந்தார். இதனால், வீட்டுக்காகக் காத்திருக்கின்ற மக்கள் மன ஆறுதல் அடைந்தனர். பின்னர் இரண்டு நாள்கள் கழித்து இந்த 40ஆயிரம் வீடும் சீனாவிடம் வேண்டாம் இந்தியாவிடம் கையளியுங்கள் எனச் சுமந்திரன் கூறியிருந்தார். இதுவரை இந்த அரசிடம் ஒரு பத்தாயிரம் வீட்டைக் கூடப் பேசி, வாங்கி மக்களுக்குக் கொடுக்க முடியாத திறனற்று இருக்கிறார்கள் அரசியல் தலைவர்கள். இனி இந்த 40 ஆயிரம் வீடுகளுக்கு எத்தனை வருடங்கள் கழித்து அமைச்சரவை பத்திர அனுமதி கிடைக்குமோ தெரியவில்லை. மக்கள் பாவம் வருகின்ற மார்கழிக்கு மழை தொடங்க இருக்கிறது.

எப்படியாவது இந்த 40ஆயிரம் வீட்டையும் கட்டிக் கொடுப்பதற்கான அழுத்தங்களை அரசுக்குக் கொடுப்பதற்குத் தமிழ்த் தலைவர்கள் முன்வரவேண்டும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே நீங்கள் எங்களுக்காகக் கஸ்ரப்படுகிறீர்கள் தான். அதற்கு நாம் தலை வணங்குகின்றோம்.

அத்தோடு மக்களுக்கு அவசரமாக வீடு கட்டிக் கொடுக்க வழி செய்யுங்கள். வீடு இல்லாமல் ஓலைக் கொட்டிலில், மணல்திட்டில் மக்கள் படும் துயரங்கள் சொல்ல முடியாதவை. அரசுகளின் 'பெரும்பான்மை' மனநிலை மாறும் வரைக்கும் நாம் தலையால் நடந்தாலும் அரசியல் தீர்வு எமக்குக் கிடையவே கிடையாது. உங்களால், முடிந்தால் அபிவிருத்தியாவது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும். இந்தியா குத்தினால் என்ன, சீனா குத்தினால் என்ன எமக்குத் தேவை அரிசி(வீடு).

**ராபட், மன்னார்.**

# “இரண்டு வாரங்கள் பதவியில் நீடிக்க முடியுமா?”

## சவூதி மன்னருக்கு ட்ரம்ப் சவால்

# “தவறுகளைத் திருத்தி நட்பைத் தொடர்வோம்”

## ட்ரம்பின் மிரட்டலுக்குப் பணிந்தது சவூதி

றியாத்.ஒக்.8

**நாங்கள் இல்லாமல் சவூதி அரேபிய மன்னரால் இரண்டு வாரமளவுக்குக்கூடப் பதவியில் நீடிக்க முடியாது என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பேசியிருந்தார். அதற்குப் பணிந்துபோகும் விதமாகத் தவறுகளைத் திருத்தி நட்பைத் தொடர்வோம் என்றிருக்கிறார் சவூதியின் மன்னர்.**

மேற்காசியாவில் மட்டுமின்றி உலக அளவில் பல்வேறு பிரச்சினைகளிலும் அமெரிக்காவுடன் கரம் கோர்த்துச் செயல்பட்டு வருகிறது சவூதி. ஆனால் கச்சா எண்ணெய் விவகாரத்தில் சவூதி அரேபியா கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. “நாங்கள் இல்லாமல் அந்த நாடு நீடித்து இருக்க முடியாது. சவூதி மன்னர் சல்மான் பின் அப்துலஸிஸ் எனக்கு நல்ல நண்பர் தான். ஆனால் அமெரிக்கா இல்லாமல் இரண்டு வாரங்களுக்கு கூட அவரால் சவுதி மன்னர் பதவியில் நீடிக்க முடியாது” என்று ட்ரம் கூறியிருந்தார்.

இந்த நிலையில்தான் அமெரிக்காவின் மிரட்டலுக்குச் சவூதி அரேபியா பணிந்துள்ளது. இது குறித்துச் சவூதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மான் தெரிவித்ததாவது,

“அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் இணைந்து பணியாற்றவே நாங்கள் மிகவும் விரும்புகிறோம். இரண்டு நாடுகளும் இணைந்து மத்திய கிழக்கில் பல சாதனைகளைப் புரிந்துள்ளன. தீவிரவாதம், ஐ.எஸ். நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளோம். நல்ல நண்பர்களிடையே சில நேரங்களில் மாற்றுக் கருத்து எழத்தான் செய்யும்.

ஆனால் தவறுகளைத் திருத்தி நட்பைத் தொடர்வதே சிறந்த நட்பாகும். குடும்பங்களில் கூட மாற்றுக் கருத்து எழத்தான் செய்யும். இதையும் அதுபோல தான் நாங்கள் எண்ணுகிறோம். ஈரான் கச்சா எண்ணெய் இல்லாததால் ஏற்படும் இழப்புகளை இனிமேல் சவூதி அரேபியா ஈடுகட்டும். அதற்கான பணிகளை உடனடியாகத் தொடங்குவோம்” என்றிருக்கிறார். ட்ரம்பின் சாவால் பேச்சைத் தொடர்ந்து வெளிவந்திருக்கின்ற இவரது இந்தப் பேச்சுக் குறித்து அரசியல வதானிகளின் பர்வை, சவூதி அரேபியா ட்ரம்பின் முன்னைய பயமுறுத்தல் பேச்சுக்குப் பணிந்ததாகவே கருதப்படவேண்டியது என்பதாக இருக்கிறது.



**பின்னணி**

அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன. ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது. மேலும், ஈரானை தனிமைப்படுத்தும் முயற்சியாக, அந்த நாட்டிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்க மற்ற நாடுகளுக்கு அமெரிக்கா தடை விதித்து வருகிறது. இதனால் ஈரானில் உற்பத்தியாகும் கச்சா எண்ணெயில் 40 சதவீதம் முடங்கியுள்ளது. இதன் காரணமாக, கச்சா எண்ணெய் தேவை அதிகரித்துப் பன்னாட்டுச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்து வருகிறது. ஈரான் நாட்டின் கச்சா எண்ணெய் பன்னாட்டுச் சந்தைக்கு வர முடியாத சூழலில் அந்த இழப்பை ஈடுகட்ட, சவுதி அரேபியா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் கூடுதலாகக் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்ய வேண்டும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால் இந்த வேண்டுகோளை சவூதி அரேபிய ஏற்றுக் கொள்ள மறுத்தது. இதனால் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கோபமடைந்தார். அமெரிக்கா இல்லாமல் இரண்டு வாரங்களுக்குக் கூட சவூதி அரேபிய மன்னரால் பதவியில் நீடிக்க முடியாது என ஆவேசமாகக் கூறினார். இதனால் இருநாடுகள் இடையேயான உறவு சீர்கெடும் நிலை ஏற்பட்டது.

# இந்தோனேசியா சுனாமி; சாவு 1,600ஆக அதிகரிப்பு



ஜகார்த்தா.ஒக்.8

இந்தோனேசியாவில் கடந்த வாரம் ஏற்பட்டிருந்த நிலநடுக்கம் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமித் தாக்குதல் என இரண்டு இடர்களிலும் சிக்கிச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 600ஐத் தாண்டியுள்ளது. சுனாமித் தாக்குதலில் அதிகளவு பாதிக்கப்பட்ட பலு நகரத்திலுள்ள பெடோபா மற்றும் பல்லோரா ஆகிய நகரங்கள் வரைபடத்திலிருந்து அழித்துவிட்டதாகவும் மேலும் அந்தப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் சாவுகள் இருக்கலாம் என்றும் இதன் காரணமாக நோய்த்தொற்று மற்றும் மாசு உருவாகும் வாய்ப்பு உள்ளதாகவும் பலு நகர மக்களை அதிகாரிகள் எச்சரித்திருக்கின்றனர்.

இந்தோனேசியாவின் சுலாவேசித் தீவில் கடந்த மாதம் 29ஆம் திகதி நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அங்குள்ள கடற்கரை நகரமான பலுவை சுனாமி தாக்கியிருந்தது. கடைசியாக வெளிவந்த பன்னாட்டுச் செய்திகளின்படி இவற்றால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 300ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சவூதியில் வ
# தலைவராக

றியாத்.ஒக்.8

சவூதியின் புதிய வங்கி ஒன்றின் தலைவராகச் சவூதி அரேபியாவின் பிரபல பெண் தொழில் அதிபர் லுப்னா, அல் ஓலயன் நியமிக்கப்பட்டுள்ளார். பழமை வாதத்தைக் காலம் காலமாகக் கடைப்பிடித்து வரும் சவூதி அரேபியாவில் முதல் முறையாக வங்கியின் தலைவராக ஒரு பெண் நியமனம் செய்யப்பட்டுள்ளது வரவேற்பைப் பெற்றுள்ளது. சவூதி அரேபியாவில் இயங்குகின்ற சவூதி பிரிட்டிஷ் வங்கி மற்றும் அலவ்வால் வங்கியும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த வங்கி 17.2 பில்லியன் அமெரிக்க டொலர் (12,560 கோடி) மதிப்புடன் நாட்டின் மிகப் பெரிய 3ஆவது வங்கியாக உருவெடுத்துள்ளது. இதன் புதிய தலைவராகவே குறித்த பெண் நியமிக்கப்பட்டுள்ளார்.

**பெண்கள் உரிமைகள் மீண்டுவருகின்ற சவூதி**

இதற்கு முன்பாகச் சவூதி அரேபியாவின் முதல் பெண் செய்தியாளராக நியமிக்கப்பட்டிருந்தார் வீம் அல் தஹீல். சவூதியின் தொலைக்காட்சி ஊடகமான ‘ஹலீஜ் ரைம்ஸ்’இல் மாலை நேர விரை

# ஹெய்ட்டியில்
# 11 பேர்

போர்ட் அயு பிரின்ஸ்.ஒக்.8

கரீபியன் கடற்பகுதியில் உள்ள ஹெய்ட்டித் தீவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. 5.9 ரிக்டர் அளவில் பதிவான இந்த நிலநடுக்கத்தால், கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. இதுகாரணமாக அங்கு 11 பேர் வரை சாவடைந்திருப்பதாகப் பன்னாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. கரீபியன் கடற்பகுதியில் உள்ள ஹெய்ட்டித் தீவின் வட மேற்குப் பகுதியிலேயே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. இது ஹெய்ட்டி





# வங்கியின் கவும் பெண்

வுச் செய்தி வாசிக்கும் செய்தி வாசிப்பாள ராக நியமிக்கப்பட்டிருந்தார் அவர். பெண் களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக் கப்பட்டுள்ள சவூதியில் சமீபகாலமாகச் சவூதி இளவரசர் முகமது பின் சல்மான் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். பெண்கள் மகிழுந்து ஓட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நாடாக சவூதி அரேபியா இருந்து வந்தது.
இந்தத் தடைக்கு எதிராக அங்குள்ள பெண்கள் அமைப்புகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தன. இந்தத் தடைக்கு எதிராக 8 பெண்கள் கைது செய் யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு இருந் தனர். இந்த நிலையில் சவுதி அரேபியா வில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பெண்கள் மகிழுந்து ஓட்ட விதிக்கப்பட்டு இருந்த தடை அண்மையில்; நீக்கப்பட்டது. மேலும், விளையாட்டு மைதானங்களுக்குள் பெண்களுக்கான அனுமதியும் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சவூதியின் விமானங் களில் துணை விமானிகளாகச் சவூதிப் பெண்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

# நிலநடுக்கம் சாவு!

யின் வடமேற்கே 12 மைல்கள் தொலைவில் 7.3 மைல்கள் ஆழத்தில் மையம் கொண்டுள்ளது. இதனால் ஹெய்ட்டியின் தலைநகர் போர்ட் அயு பிரின்ஸ் இலேசான அளவில் நில அதிர்வை உணர்ந்துள்ளது. போர்ட் டி பெய்க்ஸ், கிராஸ் மோர்னி, சான்சால்ம் மற்றும் டர்டில் தீவுப் பகுதிகளில் உள்ள கட்டடங்கள் குலுங்கியுள்ளன. நிலந டுக்கத்தால் காயமடைந்த பலரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.




# பன்னாட்டுப் பொலிஸ் அமைப்பின் தலைவரை இரகசியமாகச் சிறைப் பிடித்தது சீனா!

பிஜிங்.ஒக்.8
'இன்ரர்போல்' அமைப்பின் தலைவர் மெங் ஹாங்வே காணாமல் போனதாகத் தகவல் வெளியாகியிருந்தது.
ஆனால், அவரை சீன அரசு தடுப்புக் காவ லில் வைத்துள்ளதாகத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது. பன்னாட்டு அளவில் நடைபெறும் குற்றங்களை விசாரிக்கும் வகையில் செயற்படுவதே 'இன்ரர்போல்' எனப்படும் பன்னாட்டுப் பொலிஸ் அமைப்பு. இதன் தலைமையகம் பிரான்ஸ் நாட்டின் லயோன் நகரில் உள் ளது.
இதன் தலைவராக மெங் ஹாங்வே பதவி வகித்து வந்திருந்தார். லயோன் நகரில் வசித்து வந்த அவர் செப்ரெம்பர் மாதமள வில் காணாமல் போயிருந்தார். இதுதொ டர்பாக அவரது மனைவி முறைப்பாடு அளித்திருந்தார். அதை 'இன்ரர்போல்' விசாரணை செய்து வருகிறது. இந்த நிலையிலேயே அவரைச் சீன அரசு தடுப் புக்காவலில் வைத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மெங்க் ஹாங்வே சீனாவுக்குச் சென்றபோதே சீனப் பொலி ஸார் அவரைக் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.
அங்கு தடுப்புக்காவலில் வைத்துள்ளனர். எதற்காக அவரிடம் விசாரணை நடைபெ றுகிறது. எந்த இடத்தில் விசாரணை நடை பெறுகிறது என்ற எந்த விவரத்தையும் சீன அரசு வெளியிடவில்லை. மெங் ஹாங்வே சீனாவைச் சேர்ந்தவர்.
இவர் அந்த நாட்டின் துணை அமைச்ச ராக ஏற்கெனவே பதவி வகித்தவர். இந்த நிலையில் தான் அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். உள்நாட்டுப் பிரச்சி னைக்காக அவர் கைது செய்யப்பட்டாரா? அல்லது வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளனவா? என இன்ரர்போல் விசா ரணை நடத்தி வருகிறது.






# ட்ரம்புக்கு வந்த விஷம் தடவிய கடிதம்

வோஷிங்டன்.ஒக்.8
அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கு விஷம் தடவிய கடி தம் அனுப்பப்பட்டிருக்கிறது. இதை அனுப்பியவர் கடற்படை யின் மூத்த அதிகாரி ஒருவர் என்கின்றன பன்னாட்டுச் செய் திகள். பொலிசார் அவரைக் கைது செய்துள்ளனர். அமெ ரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இராணுவ அதிகாரி ஜேம்ஸ் மட்டிஸ், உளவுத்துறைத் தலை வர் கிறிஸ்தோபர்ரே, மற்றும் ஒரு கடற்படை உயர் அதிகாரி ஆகியோருக்குக் கடந்த 2 வாரத் துக்கு முன்பு ஒரு பயமுறுத்தல் கடிதம் வந்தது. அதில் கடிதம் அனுப்பியவரின் முகவரி இடப் பட்டிருக்கவில்லை. அதனால் அந்தக் கடிதம் மீது சந்தேகம் அடைந்த உளவுத்துறை அதிகா ரிகள் அந்தக் கடிதத்தைப் பரி சோதித்தனர். அதில் 'ரிசின்' எனப்படும் நச்சுப்பொருள் தட வப்பட்டிருப்பது தெரியவந்தது. இதன் பின்னர் அதுபற்றித் தீவிர விசாரணை நடத்திய அதி காரிகள் உதா மாகாணத்தி லுள்ள லாகன் நகரைச் சேர்ந்த வில்லியம் கிளைடே ஆலென் என்பவரைக் கைது செய்திருக் கின்றனர். அவர் அமெரிக்கக் கடற்படையின் மூத்த அதிகாரி யாவார். அவருக்கு எதிராக நீதி மன்றத்தில் பொலிசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# கதவுக்கு முட்டுக் கொடுக்கப்பட்டிருந்த 225 இலட்சம் மதிப்பிலான விண்கல்

நியூயோர்க்.ஒக்.8
கிட்டத்தட்ட 80 ஆண்டுகளுக்கு முன் பூமியில் விழுந்த 10கிலோ எடை கொண்ட விண்கல்லை வீட்டின் கதவு அசையாமல் இருப்பதற்காக முட்டுக் கொடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த விண்கல்லின் பண மதிப்பு 225இலட்சத்துக்கும் மேலானது என்று கணிக்கப்பட்டுள்ளது. இந் தச் சுவாரஸ்ய நிகழ்வு அமெரிக் காவில் நடந்துள்ளது.
அமெரிக்காவின் மிச்சிகன் மத் திய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வானவியல் பேராசிரியர் மோனாசிர்பெஸ். இவரை மிச்சி கனைச் சேர்ந்த நபர் ஒருவர் சந்தித்தார். அவர் தன்னிடம் 30ஆண்டுகளாக இருக்கும் ஒரு கல்லை கொடுத்து அதன் தன்மை குறித்து ஆராயும் மோனாசிர்பெஸ் இடம் கூறி னார். சுமார் 10 கிலோ எடை யுள்ள அந்த கல்லை மோனா சிர்பெஸ் ஆய்வு மேற்கொண் டார். அதில் அந்த நபர் கொடுத் தது வினோதமான விண்கல் எனத் தெரியவந்தது. 1930ஆம் ஆண்டுகளில் அதாவது சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பு விண்ணில் இருந்து வந்து மிச்சி கனில் உள்ள எட்மோர் என்ற இடத்தில் விளை நிலத்தில் அந்த விண்கலம் விழுந்ததும் தெரிய வந்தது. அதன் இன்றைய மதிப்பு ஒரு லட்சம் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.
அத்துடன் அங்குள்ள புகழ்பெற்ற அறிவியல் மையம் ஒன்று அதை விண்கல் என்று உறுதி செய்ததுடன் குறித்த பெறுமதி யைக் கொடுத்து அதை வாங்கு வதற்கு முன்வந்துள்ளதாகவும் அறிவித்திருக்கிறது.



# சபரிமலைக்குப் பெண்கள் செல்லக்கூடாது; போராட்டம் தீவிரம்


திருவனந்தபுரம்.ஒக்.8
கேரளாவில்அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் அனைத்து வய துப் பெண்களையும் அனுமதிக்குமாறு உச்ச நீதிமன்றத் தீர்ப்பளித்திருந்தது. அந் தத் தீர்ப்பை எதிர்த்துப் போராட்டம் தீவிரம டைந்துள்ளது.
கேரள மாநிலத்தில் அமைந்துள்ள சபரி மலை ஐயப்பன் கோயிலுக்குச் செல்ல :: பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பருவமெய்திய பெண்கள் 48 நாள்கள் விர தம் இருக்க முடியாது என்பதாலும், மாதவி டாய்க்; காலத்தில் அவர்கள் கோயிலுக்குள் நுழையும்போது கோயிலின் புனிதத் தன்மை பாதிக்கப்படும் என்றும் காரணம் தெரிவித்துக் கோயில் நிர்வாகத்தால் அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. இந்த நடைமுறையை எதிர்த்து இந்திய இளம் வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் கடந்த



2006ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசா ரித்த நீதிமன்றம், 'பெண்களின் வழிபாட்டு உரிமையைப் பறிப்பது அரசமைப்புச் சட்டத் துக்கு விரோதமானது. எனவே சபரிமலைக் கோயிலுக்குச் செல்லும் உரிமை அனைத்து வயதுப் பெண்களுக்கும் உள்ளது"எனத் தீர்ப்ப ளித்தது இந்தத் தீர்ப்புக்கு, ஆதரவாகவும், எதிராகவும் பல்வேறு தரப்பினரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். தீர்ப்பை எதிர்க் கின்ற பெண்கள் தாங்கள் மாதவிடாய்க் காலம் முடிவடையும் வரைக் காத்திருக்கத் தயார்" எனக் கூறித் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்து வருகின்றனர். கேரளாவில் பல்வேறு இடங்க ளில் பெண்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அனைத்து வயது பெண்களையும் சபரிமலைக் கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதை எதிர்த்தும், கண்டித்தும் பல இடங்களில் போராட்டங்கள்; இடம் பெற்று வரு கின்றன. இந்தப் போராட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பொலிசார் தடியடி நடத்திப் போராட்டக்காரர்களை அப்புறப்டுத்தியி ருக்கின்றனர்.

# சம்பளத்தை குறைத்துக்கொள்ள முடிவு செய்த திரிசா!

சினிமா



தமிழ் சினிமாவில் முன்னணி நாயகிகளில் ஒருவராக வலம் வருபவர்திரிஷா. விஜய், அஜித், சூர்யா, விக்ரம்என முன்னணி நாயகர்களுடன் ஜோடியாக நடித்துத் திரையுலகில் தனக்கென ஒரு இரசிகர் கூட்டத்தையும் வைத்து இருக்கிறார்.
விஜய் சேதுபதிக்கு ஜோடியாக திரிஷா நடித்துள்ள 96 படம், திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. விஜய் சேதுபதி, திரிஷாவின் நடிப்புக்குப் பாராட்டுக்களும் குவிந்து வருகின்றன. 12 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழில் முன்னணிநடிகையாகஜொலித்துவரும்திரிஷா, தற்போதுஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளார். அதாவது தனது சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள தயார் என அறிவித்துள்ள திரிஷா, முன் னணிநாயகர்களுடன் ஜோடிபோட விருப்பம் தெரிவித்துள்ளா ராம்: திரிஷாவின் சம்பள குறைப்பு முடிவு சக நடிகைகளைக் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | | | 9 | 3 | |
| | | | 8 | 9 | | | | 2 |
| 4 | | | | | 3 | | 1 | |
| | | 4 | 7 | | | | 6 | |
| 8 | | | | 6 | | | | 7 |
| | 7 | | | | 5 | 1 | | |
| | 9 | | 4 | | | | | 5 |
| 6 | | | | 8 | 2 | | | |
| | 2 | 8 | | | | | | 1 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 3 | 4 | 2 | 5 | 7 | 6 | 8 |
| 8 | 6 | 7 | 9 | 1 | 3 | 2 | 4 | 5 |
| 5 | 4 | 2 | 7 | 8 | 6 | 1 | 3 | 9 |
| 1 | 8 | 6 | 5 | 9 | 7 | 3 | 2 | 4 |
| 2 | 7 | 5 | 8 | 3 | 4 | 9 | 1 | 6 |
| 3 | 9 | 4 | 1 | 6 | 2 | 8 | 5 | 7 |
| 6 | 3 | 8 | 2 | 5 | 9 | 4 | 7 | 1 |
| 7 | 5 | 1 | 3 | 4 | 8 | 6 | 9 | 2 |
| 4 | 2 | 9 | 6 | 7 | 1 | 5 | 8 | 3 |

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உங்களிடம் உதவி பெற்றவர் உதாசீனமாக நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி படிப்படியாக நிறைவேறும். இலாபம் சீராக இருக்கும்.

**இடபம்:** திட்டமிட்ட பணிகளில் மாற்றம் செய்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் நேரம் பணிபுரி வீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** இஷ்ட தெய்வ அருளால் வாழ்வு சிறக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திபணி மேற்கொள் வீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**கடகம்:** வெளிவட்டார தொடர்பால்சிரமம் ஏற்படலாம். மவுனம் கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாக்கவும். சேமிப்பு திடீர் செலவால் கரையும்.

**சிங்கம்:** மனதில் தன்மான உணர்வு அதிகரிக்கும். உறவினரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும்.

**கன்னி:**அக்கம் பக்கத்தினருடன் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் பணிபுரிவது அவசியம். சேமிப்பு அத்யாவசியச் செலவுக்கு பயன்படும்.

**துலாம்:** நற்செயல்களில் ஈடுபட்டுப் புகழ் பெறுவீர்கள் . தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும். அபரிமிதமான அளவில் பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** பயனறிந்து பேசி நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய செயல் திட்டம் உருவாக்குவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

**தனுசு:** உங்களின் பொறுப்பை உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் குளறு படி படிப்படியாக சரியாகும். லாபம் சுமாராக இருக்கும்.

**மகரம்:** திய முயற்சியில் ஈடுபடுவீர்கள். சுபவிஷயத்தில் இடையூறுவிலகிநன்மைஉண்டாகும்.தொழில்வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும்.

**கும்பம்:**மனதில் புத்துணர்வு பெருகும். புதிய திட்டங்களை செயல்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். தாராள வரவால் சேமிப்பு உயரும்.

**மீனம்:** பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். சமூகத்தின் பார்வையில் நன்மதிப்பு பெறு வீர்கள். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்திப்பணி செய்வீர்கள்.

## நாளை
**08.10.2018**
செவ்வாய்க்கிழமை
**புரட்டாதி 23**

திதி: அமாவாசை மு.ப. 9.43 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.ப. 1.22
சுபநேரம்: 10.32 – 12.02 வரை
ராகுகாலம்: 3.02– 4.32 வரை



முகநூல் கவிதை

## காலத்தின் முடிவு


எத்தனை வேதனைகள்
என்னைப் பெற்றெடுக்கும்போது
பெற்றிருப்பாள்...
எத்தனை பொய்கள்
என்னைச் சாப்பிட வைக்க
சொல்லியிருப்பாள்...
எத்தனை தாலாட்டுகள்
என்னைத் தூங்கவைக்கப்
பாடியிருப்பாள்...
எத்தனை துயரங்கள்
என் படிப்புக்காக
அனுபவித்திருப்பாள்...
எத்தனை சாபங்கள்
என்னை ஏசியியோருக்கு
விட்டிருப்பாள்...
எத்தனை போரட்டங்கள்...
என்னை நன்றாக வளர்க்கக்
கடந்திருப்பாள்...
எத்தனை அறிவுரைகள்
என்னை நல்வழிப்படுத்த
சொல்லியிருப்பாள்...
எத்தனை வேண்டுதல்கள்
எனது மகிழ்ச்சிக்காக்
கடவுளிடம் வேண்டியிருப்பாள்..


இத்தனையும் எனக்காகப் பட்டவள்
இத்தனையும் எனக்காகச் சொன்னவள்
இத்தனையும் எனக்காகக் கேட்டவள்


இன்றோ....

ஆதரவற்று முதியோர் இல்லத்தில்
நிம்மதியின்றி இருக்கிறாள்..

இதுதான் காலத்தின் முடிவாயின்
நாளை என் பாசப்பிள்ளையால்
என் நிலையும் இதுதானோ..?














சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்



# மிருகத்துள்ளும் ஒரு மனிதம்

ஒருவர் தனது ஆடு.மாடுகளுடன் ஆசையோடு ஒரு புலிக்குட்டியையும் வளர்த்து வந்தார். அந்தப் புலிக்குட்டி இயல்பாக அந்த ஆடு. மாடுகளுடனும் அவற்றின் குட்டிகளுடனும் விளையாடி நேரத்தைக் கழிக்கும். அந்த மனிதர் அந்தப் புலிக் குட்டிக்கு அந்த ஆடு மற்றும் குட்டிகளை உண்ணும் ஆசை வராமல் இருக்க அவற்றை ஒன்றாகவே வளர்த்து வந்தார். புலிக்குட்டியும் அவ்வாறே ஆடு. மாடுகளை உண்ணும் ஆசை இன்றிப் பழகி வந்தது.

ஒருநாள் அந்தப் புலிக் குட்டிக்கு மாமிச ஆசை வரவே அது தனது முதலாளியிடம் சென்று தனக்கு மாமிச உணவு வேண்டுமென்று கேட்டது. முதலாளியும் அன்று முதல் தன்னிடமிருந்த ஆட்டுக்குட்டிகளில் ஒன்றை ஒரு தனிக்குடிலில் வைத்து வளர்க்க ஆரம்பித்தார். பின்னர் புலிக்குட்டியிடம் என்றாவது ஒருநாள் உனக்கு மாமிச ஆசை தலைக்கேறும்போது இந்தக் குடிலின் கதவைச் சேதப்படுத்திவிட்டு அந்த ஆட்டுக்குட்டியைத் தின்று விடு" எனக் கூறினார். புலிக்குட்டியும் அவர் கூறியதை ஏற்றுக் கொண்டது.

நாள்கள் நகர்ந்தன. ஒருநாள் அந்த முதலாலி வெளியூர் சென்றிருக்கையில் அந்தப் புலிக்குட்டிக்கு மாமிச ஆசை தலைக்கேறியது. உடனே தன் முதலாளி கூறியவை அதற்கு நினைவுக்கு வந்தன. அதன்படி குடிலைச் சேதப்படுத்தி உள்ளே இருந்த ஆட்டுக்குட்டியை இருட்டில் வைத்து உண்ண மனமின்றி அந்தக் குடிலுக்கு வெளியே இழுத்து வந்தது. அப்போது இத்தனை நாள்களும் புலியுடன் கூடி விளையாடிய அந்த ஆட்டுக்குட்டிக்கும் வெளியே தான் இழுத்து வந்த ஆட்டுக்குட்டிக்கும் வேறுபாடு தெரியாமல் தடுமாறியது புலிக்குட்டி.


சற்று யோசித்தது புலிக்குட்டி. இதுவரை காலமும் விளை யாடிய ஆட்டுக்குட்டியின் உடல் வாசத்தை இனம் கண்டு கொண்டது. முகர்ந்து முகர்ந்து பார்த்துத் தடுமாறியது. காரணம் தான் சிறுவயதில் விளையாடிய அதே ஆட்டுக்குட்டி அது. இதனால் அது உண்ண மனமின்றி அதை விட்டுவிட்டது.



## வாழ்வின் படிகள் 16

மிக மிக நல்ல நாள் - இன்று
மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
மிகவும் வேண்டியது- பணிவு
மிகவும் வேண்டாதது- வெறுப்பு
மிகப்பெரிய தேவை - சமயோஜித புத்தி
மிகப் பெரிய கொடிய நோய்- பேராசை
மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
மிகவும் கீழ்த்தரமானது- பொறாமை
நம்பக் கூடாதது- வதந்தி
ஆபத்தை விளைவிப்பது- அதிக பேச்சு
செய்ய வேண்டியது - உதவி
விலக்க வேண்டியது- விவாதம்
உயர்வுக்கு வழி- உழைப்பு
நழுவவிடக் கூடாதது - வாய்ப்பு
பிரியக் கூடாதது- நட்பு
மறக்கக் கூடாதது- நன்றி






## ஆசிரியர் என்பவர்


- ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுபவராக இருப்பவர்தான் ஆசிரியர். மாணவர்களின் நிலைக்குக் கீழ் இறங்கி வர ஆசிரியர் தயாராக இருக்க வேண்டும்.
- வகுப்பறையில் மாணவர்களின் முழுக்கவனமும் தன்னிடம் இருக்குமாறு கற்பிக்க வேண்டும். மாணவர்களுக்கு புரியும் விதத்தில் பாடம் கற்பிக்க வேண்டும்.
- ஆசிரியரின் முகத்தில் எப்போதும் ஒரு புன்சிரிப்பு மலர்ந்திருக்க வேண்டும். அதுவே மாணவர்களுக்குக் கற்பதில் மிகுந்த உற்சாகத்தை அளிக்கும்.
- ஆசிரியர் தனக்காகச் செலவிடும் நேரத்தைவிட மாணவர்களிடத்தில் அதிக நேரம் செலவழிப்பவராக இருக்க வேண்டும்.
- பாடநூல்களுக்கு அப்பாற்பட்டும் அனைத்துப் பொதுவான விடயங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். முக்கியமான விடயங்களைத் தினமும் மாணவ சமூகத்துடன் பகிர்ந்து கொள்ளக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- மாணவர்களுக்கு எதில் விருப்பம் உள்ளதோ அதைக் கண்டறிந்து செயற்படுத்த முயற்சிக்க வேண்டும். மாணவன் படிக்கவில்லை எள்றால் அவர்களுக்குப் புரியும் படியாகக் கற்பிக்க வேண்டும்.
- ஒரு விடயத்துக்கு விளக்கத்தைக் கொடுக்கும்போது செய்முறை அடிப்படையில் உணர்த்தினால் மாணவர்களுக்குப் படிப்பின் மீது ஆர்வம் அதிகரிக்கும்.
- மாணவர்களுக்குக் கல்வியின் மீது உள்ள ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். அவர்களது தனிப்பட்ட திறமைகளை வெளிக்கொண்டு வந்து அவர்களது சாதனைகளுக்குத் தூண்டுகோளாக இருக்க வேண்டும்.




## சரியான நேரத்தை எழுதுவோம்



1:30



____________



____________



# பழையது நல்லது


பொதுவாகப் பழைய பொருள்களைப் பலரும் விரும்புவதில்லை.இதில் பழைய உணவுகள் என்றால் பெரும்பாலும் எவரும் தவிர்த்து விடுவதுண்டு. ஆனால்.ஓர் அற்புதமான பழையது பற்றி இங்கே நாம் அறிந்து கொள்வோம்.

பழைய சோறு ஓர் அற்புதமான மருந்து. பழைய சோறு என்பது முதல் நாள் மதியம் சமைத்த சோற்றில் இரவில் நீரூற்றி வைத்து மறுநாள் உண்பதாகும். இந்தப் பழைய சோற்றில் விற்றமின் பி6, விற்றமின் பி12 ஏராளமாக இருக்கிறது என்கிறது ஆய்வு. சிறுகுடலுக்கு நன்மை செய்யும் பல்லாயிரக்கணக்கான பக்ரீரியாக்கள்' பெருகி எமது உணவுப் பாதையையே ஆரோக்கியமாக வைத்திருக்கிறதாம். இந்தச் சோற்றோடு கூடவே இரண்டு சின்ன வெங்காயம் சேர்த்தால் நோய் எதிர்ப்புச் சக்தி அபரிதமாகப் பெருகிறதாம்.



**பழைய சோற்றின் நன்மைகள் சில**

1. காலை உணவாக இந்தப் பழைய சோற்றைக் குடிப்பதால் உடல் இலேசாகவும் அதேசமயம் சுறுசுறுப்பாகவும் இருக்கும்.
2. இரவே தண்ணீர் ஊற்றி மூடிவைப்பதால் இலட்சக்கணக்கான நல்ல பக்ரீரியாக்கள் இதில் உருவாகின்றன.
3. மறுநாள் இதைக் குடிக்கும்போது உடல் சூடு தணிவதோடு குடற்புண், வயிற்றுவலி போன்றவற்றையும் குணப்படுத்தும்.
4. இதிலிருக்கும் நார்ச்சத்து மலச்சிக்கலைத் தவிர்த்து உடலைச் சீராக இயங்கச் செய்கிறது.
5. இந்தப் பழைய சோறு உணவு முறையை சிலநாள்கள் .தொடர்ந்து சாப்பிட்டால் குருதி அமுக்கம் கட்டுக்குள் வந்துவிடும். உடல் எடையும் குறையும்.
6. உடலுக்கு அதிகமான சக்தியைத் தந்து நாள் முழுக்க சோர்வின்றி வேலை செய்ய இது உதவுகிறது.
7. அலர்ஜி, அரிப்பு போன்றவை கூடச் சட்டென்று சரியாகிவிடும்.
8. குடற்புண் உள்ளவர்களுக்கு இதைக் கொடுத்து வர ஆச்சரியப்படும் அளவுக்குப் பயன் கிடைக்கும்.
9. எல்லாவற்றுக்கும் மேலாக நோய் எதிர்ப்புச் சக்தி அதிகளவில் கிடைப்பதால் எந்தநோயும் அருகில் கூட நெருங்காது.
10. ஆரோக்கியமாகவும் அதேசமயம் இளமையாகவும் இருக்கலாம்.




# வாசிப்பெனும் நற் சுவாத்தியங்களை அரவணைப்போம்

கி.தவநேசன்

## அறிவுத் தேடலில் வாசிப்பின் வகிபாகத்தை உணரப் பணிக்கும் செயல் வெளி

உலகளாவிய ரீதியில் தொழில்நுட்ப முன்னேற்றம் அபிவிருத்தியடைந்து வரும் சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதன் செயற்போக்கு அறிவு சார்ந்த தேடல்களையும் குறைவடையச் செய்துள்ளது. அவற்றுள் வாசிப்புப் பழக்கம் முதன்மையானதாக விளங்குகிறது.

**தேசிய வாசிப்பு மாதம்**

இந்தநிலையிலே வாசிப்புப் பழக்கத்தை அதிகப்படுத்துவதற்குரிய செயல்நிலைகள் உலகலாவிய ரீதியில் இலங்கை உட்பட பல்வேறுநாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சியின் ஓர் அங்கமாக, இலங்கையில் கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வோர் வருடத்திலும் வருகின்ற ஒக்ரோபர் மாத காலத்தை "தேசிய வாசிப்பு மாதாமாக" பிரகடனம் செய்துள்ளனர். இந்தக் காலப்பகுதியில் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் விதமான பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**பெற்றோரின் வகிபாகம்**

இங்கு பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதில் பெற்றோரின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுகிறது. பிள்ளைகளின் கற்றல் சார் நடவடிக்கைகள் வீட்டில் இருந்தே ஆரம்பிக்கப்படுவதால் பெற்றோர் தமது பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வதற்கு பல்வேறு வழிகளிலும் உதவிபுரிய முடியும்.

குழந்தைகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடியவற்றை தெரிவு செய்து அதை வாசிப்பதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அழகிய வர்ணச்சித்திரங்கள் உள்ள, பெரிய எழுத்துக்களை உடைய புத்தகங்களை வாங்கிக் கொடுப்பதன் மூலம் குழந்தைகளின் வாசிப்பு ஆர்வத்தினை அதிகப்படுத்தலாம். அன்றாடம் வீட்டுப்பாவனைக்கென கொள்வனவு செய்யும் பொருள்களின் பொதியிடலில் உள்ள விடயங்களை வாசிப்பதற்கு பிள்ளைகளை ஊக்கப்படுத்த முடியும்.

**ஊக்கப்படுத்தல்**

ஒரு பிள்ளையின் ஆளுமை, தன்னம்பிக்கை போன்றவற்றைத் தீர்மானிப்பதில் வாசிப்பு முக்கிய பங்காற்றுகிறது. நாளாந்தம் தமக்கு விருப்பமான ஏதாவதொன்றைப் பிள்ளைகள் வாசிப்பதை பெற்றோர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்றதான, வாசிப்பு ஆர்வத்தினைத் தூண்டக்கூடிய பொருத்தமான சூழல் வீட்டில் உள்ளதா என்பதை பெற்றோர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். வாசிப்புக்கு பொருத்தமான சூழல் என்பதன் வரையறை, "அமைதியான, போதிய காற்றோட்டம் மற்றும் வெளிச்சத்தைக் கொண்ட சூழமைவை" குறித்து நிற்கிறது.

**நற் தெரிவுகளுக்கு வழிப்படுத்தல்**


நூலகத்துக்கு பிள்ளைகளை அழைத்து செல்வதன் ஊடே அவர்கள் சுதந்திரமாகவும், தமக்கு விருப்பமான புத்தகங்களை தெரிவு செய்து வாசிப்பதற்குமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இன்று நூலகங்களில் சிறுவர் பகுதி பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நூலகங்களில் சிறுவர்களுக்கெனக் கதை சொல்லும் நேரம், கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை சிறுவர்களுக்குச் சிறந்த பொழுதுபோக்கு அம்சமாக அமைந்துவிடுகின்றன. நூலகங்களில் தமக்குப் பொருத்தமானவற்றைச் சுதந்திரமாகத் தெரிவு செய்து வாசிக்கும் சந்தர்ப்பம் மாணவர்களுக்கு கிடைத்தாலும், அவர்களின் வயதுக்கேற்ப பொருத்தமான நூல்களை அல்லது பொருத்தமான தலைப்புக்களை தெரிவு செய்து வாசிப்பதற்கு பெற்றோர் அவர்களை வழிப்படுத்த வேண்டும். அதேபோன்று பிள்ளைகள் மத்தியில் வாசிப்பினை வளம்படுத்துவதற்கு வாசகர் வட்டத்தைத் தமது கிராமங்களில் அல்லது பாடசாலையில் காணப்படும் நூலகங்களில் ஆரம்பித்தல் சிறப்பான கைங்கரியம்.

ஒவ்வொரு நாளும் பிள்ளைகளுக்கு வாசிப்பதற்குரிய நேர, காலத்தை இனங்கண்டுகொண்டு அவர்களை வழிப்படுத்த வேண்டும். வாசிப்பு என்பது, ஒரு புத்தகத்துடன் பிள்ளைகள் இருப்பது என்ற செயல்நிலையோடு ஆரம்பிக்கும் விடயமல்ல. அது நாளாந்த வாழ்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். பிள்ளைகள் தமக்கு விருப்பமான புத்த கங்களை மீண்டும் வாசிப்பதற்குத் தூண்டுவதன் மூலம், குழந்தைகளை வாசிப்பின் நேசிப்புடைய வாசகர்களாக மாற்றியமைத்துக்கொள்ளலாம். முதல் வாசிப்பில் தவறவிடப்பட்ட விடயங்களை அறிந்துகொள்ள இந்தச் செயன்முறை வழிவகுக்கும். பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அவர்களின் முதலாவது ஆசிரியராக திகழ்வோர் பெற்றோர்களே ஆவர்.

பிள்ளைகளின் பிறந்த நாள் மற்றும் ஏனைய கொண்டாட்ட நிகழ்வுகளின் போது, அவர்களுக்குப் பொருத்தமான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கும் நடைமுறையைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். மேலும், பிள்ளைகளுக்கு விருப்பமானதும், பொருத்தமானதுமான கதைகளை தெரிவுசெய்து கொடுத்து அவர்களை வாசிக்கத்தூண்டுங்கள். தொடர்கதைகளை வாசிப்பதன் ஊடே வாசிப்பு ஆர்வம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே வாசிப்பதற்குரிய குறிப்பிட்ட நேரத்தை ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு வாரமும் ஒதுக்குவதன் மூலம், பிள்ளைகளின் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்ட முடியும்.

**நுண்ணறிவு விருத்தியை கட்டாயப்படுத்தல்**

வார்த்தை விளையாட்டு, குறுக்கெழுத்து போன்ற பிள்ளைகளின் அறிவாற்றலை அதிகரிக்கக்கூடிய செயற்பாடுகளையும் கற்றுக்கொடுங்கள். பிள்ளைகள் உண்மையானவற்றை வாசிப்பதை ஊக்கப்படுத்துதல் பெற்றோரின் கடமை.



சொற்களுக்கு இடையே உள்ள தொடர்புகளை பிள்ளைகளுக்குச் சொல்லித் தர வேண்டும். அவர்களுக்கு விளங்கக்கூடிய இலகுநடையுடன் கூடிய சொற்களைப் பயன்படுத்துதல் வேண்டும். விளங்காதவற்றை விளங்கிக்கொள்வதற்கு மீண்டும் வாசிப்பதை ஊக்குவியுங்கள்.

வாசிப்பு சிறந்த பொழுது போக்கு அம்சம் என்ற வகையில், பிள்ளைகள் தொலைக்காட்சி மற்றும் ஏனைய பொழுது போக்கு தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தும் செயற்பாடுகளை குறைத்துக்கொள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம். பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வேறு இடங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்கு விருப்பமான புத்தகங்களையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டும். பிரயாணத்தில் ஏதாவது காலதாமதம் ஏற்படின், எடுத்துச் சென்ற புத்தகங்களை வாசிக்கக் கொடுப்பதன் மூலம் வீணாகப் பொழுதைக் கழிப்பதில் உள்ள பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். பிள்ளைகள் புத்தகங்களை வாசிக்கும்போது அதில் வருகின்ற சந்தேகம் குறித்து உங்களிடம் வினவினால், அதற்கு மறுக்காது சரியான பதிலை வழங்க வேண்டும். பெற்றோருடைய தலையாய கடமை அதுவென்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

**விளக்கம் தரல்**

பிள்ளைகள் தாம் இதுவரை கேள்விப்படாத சொற்கள் குறித்து உரிய விளக்கத்தை உங்களிடம் கேட்கும்போது, அதற்குரிய விளக்கத்தை வழங்குங்கள். ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் வாசிப்பதன் ஊடே நீங்கள் கற்றுக்கொண்டு பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். ஒருவருக்கொருவர் வாசிப்பது என்பதன் கருத்து, "குடும்ப உறுப்பினர்கள் தமது வயதுக்கு பொருத்தமான புத்தகங்கள், நாவல்கள் அல்லது வேறு ஏதாவது ஆக்கங்களைத் தெரிவுசெய்து அனைவருக்கும் கேட்கக்கூடிய விதத்தில் உரத்து வாசிப்பதன் மூலம் மாணவர்கள் விருப்பத்துடன் வாசிப்பதனை ஊக்கப்படுத்தல்" என்பதைக் குறித்து நிற்கிறது. பிள்ளைகள் வாசிக்கும்போது ஏற்படும் தவறுகளை இனம்கண்டு அதை மீண்டும் வாசிக்கத் தூண்டுவதன் மூலம் அவர்கள் அத்தகைய தவறுகளை மீண்டும் செய்வதைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

**பரந்த அறிவின் பெறுகையை உறுதிப்படுத்தல்**

சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் வாசிப்பதில் சிரமங்களை எதிர்கொள்ளும் போது, அவர்களின் வாசித்தல் எனும் நோக்கம் திசைதிரும்புவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த நேரத்தில் அவர்களை உற்சாகமூட்டக்மூடிய கருத்துக்களை வெளிப்படுத்தி அவர்களின் வாசிப்பு ஆர்வத்தை அதிகரிக்க வேண்டும்.

பாடசாலை விடுமுறை நாள்களில் அருகிலுள்ள வாசிகசாலைகளுக்குப் பிள்ளைகளை அழைத்துச்சென்று, அங்கு அவர்களுக்குத் தினசரி பத்திரிகைகள், வார இதழ்கள் மற்றும் மாத இதழ்களில் வரும் குட்டிச் செய்திகள், கதைகள் மற்றும் சிறுவர் பகுதி என்பவற்றை அடையாளப்படுத்தி அவற்றை வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள். பிள்ளைகளை அங்கத்தவராக்கி நூலகம் சென்று புத்தகம் வாசிப்பதற்கும், நூலகத்தில் புத்தகங்களை இரவல் எடுத்து வாசிப்பதற்கும் பழக்கப்படுத்துங்கள். பிள்ளைகள் புதிய பாடப்புத்தகங்களை, தமக்கு விருப்பமான உலகமாற்றத்தை பிரதிபலிக்கும் ஏனைய பாடைப்புக்களை வாசிப்பதற்கும் ஊக்கப்படுத்துங்கள்.

பிறர் சொற்கேட்டுப் பிள்ளைகளுக்கு விருப்பமற்ற புத்தகங்கள் மற்றும் ஆக்கங்களை வாசிக்க வேண்டும் என கட்டாயப்படுத்தாதீர்கள். இந்த செயற்பாடுகள் பிள்ளைகள் கொண்டுள்ள வாசிப்பு ஆர்வத்தை மழுங்கடிக்கச் செய்துவிடும். இதை உணர்ந்துகொள்ள வேண்டும். ஆரம்பத்தில் வாசிப்பு என்பது கடினமான செயற்பாடாக காணப்படும். ஒவ்வொரு நாளும் ஒரு பக்கம் அல்லது இரண்டு பக்கம் வாசித்தல் என்ற அடிப்படையில் அதை வழக்கப்படுத்திக் கொண்டு, காலப்போக்கில் வாசிப்புக்குரிய நேர காலத்தை அதிகரிக்கலாம்.

**வாசிப்பு மனிதனை முழுமை செய்யும்**

ஆக, வாசிக்க நேரம் இல்லை. வாசிக்க இடமில்லை, வாசிப்பதற்குரிய புத்தகமில்லை என்று கூறுபவர்களைப் புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்ற எண்ணமற்றவர்களாகவே கருத வேண்டும். வாசிப்பு மனிதனைப் பூரணத்துவமானவனாக மாற்றும் என்ற அடிப்படையைப் புரிந்துகொள்ளவேண்டும். பிள்ளைகள் வாசிப்பதன் மூலம் தமது நாள்களை தொடங்குவார்களாயின் அந்தநாள் முழுமையும் அவர்களுக்கு புத்துணர்ச்சியைத் தந்திருக்கும். இதனை அன்றாட செயற்பாடுகளின் ஊடே பெற்றோர்கள் அவ்தானம் கொள்ள முடியும். குழந்தைகளின் வாசிப்பு பழக்கத்தினை அதிகப்படுத்துவதற்குரிய செயற்பாடுகளைக் கண்டறிந்து அதன்வழியே பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும். பெற்றோராக அனைவரது கடமையும் அதுவென்பதை உணர்ந்தும், புரிந்தும், தெரிந்தும் கொள்ள வேண்டும். வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் செயற்பாட்டின் வழியே அறிவார்ந்த சமூகத்தை வளர்த்தெடுக்கப் பணி செய்ய வேண்டும்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இந்து ஆரம்ப
பாடசாலை மாணவியும்
எமது பேர்த்தியுமான
**செல்வி உதயகுமார்**
**வைஷ்ணவி**
2018 தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் 172 புள்ளிகளைப்
பெற்றுள்ளார். அவர் மேலும் பல
சித்திகளைப் பெற்று சாயி அம்மன்
துணை கொண்டு
வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
பஞ்சு தாத்தா குடும்பத்தினர்
(கொக்குவில்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மானிப்பாய் சோதி வேம்படி
வித்தியாசாலையில்
2018 தரம் 05 புலமைப் பரிசில்
பரீட்சையில் தோற்றி
183 புள்ளிகளைப் பெற்று
பாடசாலை
மட்டத்தில் முதலாவது நிலையில்
சித்தியடைந்த
**செல்வன் விமல்ஸ்**
**விஸ்விகன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவ
தோடு கற்பித்த அதிபர்,
ஆசிரியர்களையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
குடும்பத்தினர்.

## பூரிப்படைகின்றோம்

கடற்றொழில் நீரியல்வளத்
திணைக்கள உதவிப் பணிப்பாளர்
**திரு.வி.கலிஸ்ரன்** மற்றும்
யாழ்.மத்திய கல்லூரி
தேசிய பாடசாலை ஆசிரியை
**திருமதி ஜீன் ஜெஸ்மினி கலிஸ்ரன்**
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்
**செல்வன் க.றொய்ஸ்**
அவர்கள் 2018 தரம் 5
புலமைப் பரிசில் பரீட்சையில்
181 புள்ளிகளைப் பெற்று யாழ்.
மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்குப்
பெருமை சேர்த்து யாழ்./ மத்திய
கல்லூரி பாடசாலை மட்டத்தில் 1ஆம்
இடம் பெற்றுள்ள இவரை
பெருமிதத்துடன் வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:- ஷெரோலினா,
லியோ ஷெறூபன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலய ஆசிரியர்
**தம்பையா தர்மசீலன்**
அவர்கள் தேசிய நிலையில்
நல்லாசிரியருக்கான
**" பிரதீபா பிரபா"**
விருதினை 05.10.2018 அன்று
பெற்றமையையிட்டு
மகிழ்வடைவதுடன் மேலும்
பல பட்டங்கள் பெறவும்
வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
கொடிகாமம்.
(1683)

# சேவைநலன் பாராட்டு விழா



## திருமதி விக்னேஸ்வரி விக்னேஸ்வரன்

**B.A(GENERAL) - PGDE - SLTS - I**

கல்வி என்ற கடலைக் கடக்க
கனிவுடன் வந்த கருணை மகள்
துடுப்பாய் வாழ்வில் மாணவருக்காய் வந்து
தூரம் வரையில் கொண்டு சேர்த்து
தரிசாய் கிடந்த மாணவர் மனதில்
தானியமாக கல்வி விதைத்து
உலகம் விளங்க விளைச்சல் பெருக்கி
ஊரார் புகழ உத்தமராக்கி
கைமாறு ஏதும் எதிர்பாரா கற்பித்தீர்
உமது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய
வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சேவை
கிளி/ கனகாம்பிகைக்குளம் கனிஷ்ர வித்தியாலயம் – 1986.01.06 - 1991.04.01 - ஆசிரியர்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் – 1991.04.02 - 1997.10.08 - ஆசிரியர்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை – 1997.10.09 - 2018.01.22. ஆசிரியர்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை – 2018.01.23 - 2018.10.05 - உப அதிபர்

வாழ்த்தி மகிழும்
ஆசிரியர் கழகம்
யா/ வேம்படி மகளிர் உயர்தர
பாடசாலை
(CS/20386)(11,17)

# நீங்கா நினைவலைகள்

முதலாம் ஆண்டு | 19 ஆம் ஆண்டு

தோற்றம் 30 . 03 . 1958 — மறைவு 19 . 09 . 2017



அமரர் சீராளப்பிள்ளை
அருந்தவநாதன் (பயில்வான்)
திதி: அமாவாசை

தோற்றம் 26 . 12 . 1988 — மறைவு 11 . 11 . 2009



அமரர் அருந்தவநாதன்
சபேசன் (மயூரன்)

வாழ்க்கை எனும் பாதையிலே ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம் மாறாத நினைவுகளால்
மனம் வெந்து வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் இரு உள்ளங்கள் என்றும்
எம் நெஞ்சங்களில் குடியிருக்கும் அன்புத் தெய்வங்களே!

பனிச்சையடி, இயக்கச்சி.
077 667 9748, 077 448 0015

என்றும் நினைவில்
சுப்பிரமணியம் குடும்பத்தினர்
மற்றும் உறவினர்கள்.

(CS/352)(13,17)

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு 28.04.1933

### சரஸ்வதி நாகலிங்கம்

(ஆசிரியை - யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி)

இறப்பு 06.10.2018



மானிப்பாய், பூம்பந்தல் வளவைப் பிறப்பிட மாகக் கொண்ட சரஸ்வதி நாகலிங்கம் 06.10.2018 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங் கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, மங்கை யற்கரசி, பாலசிங்கம், சிவபாக்கியம், சண்முக நாதன், பற்குணராஜா, இராஜநாதன் மற்றும் இராஜதேவி, சறோயினி (கனடா), சற்குணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூம்பந்தல் வளவு,
மானிப்பாய்.

தகவல்:
சற்குணதேவி (சகோதரி)

(CS/20387)(11,17)



### கோவிந்தர் சின்னத்தம்பி

(பண்டிதர்)

வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தர் சின்னத்தம்பி (பண்டிதர்) நேற்று (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தர் - லட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் மகேந்திரன் (ஜேர்மனி), கலை வாணி (லண்டன்), வாணிசிறி, சாம்பவி (ஆசிரியர் - கிளி / பூநகரி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிஷாந்தி (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (லண்டன்), தயாகரன், பிரியங்கன் (கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், பளை, புளியம் பொக்கனை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஹரிஷன், அக்ஷனா (ஜேர்மனி), கீர்த்திகா (லண்டன்), கிருஷன், யருண்ஷன், அஷ்னிகா, அக்ஷியா ஆகியோரின் அன்புப் பேரனும் கண்ணணி, காலஞ்சென்ற தெய்வானை, கந்தர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2018) செவ்வாய்க் கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக இயற்றாலை ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 7111306, 077 959 7246 தகவல்: குடும்பத்தினர்.

உ
ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

(இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதான் தாழ் வாழ்க)

மண் மகிழ 26 . 05 . 1974



விண் நெகிழ 11 . 09 . 2018

கடந்த 11.09.2018 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த

### அமரர் தவதாசன் கேதாம்பிகை (கேதா ரீச்சர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.10.2018) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 11.10.2018 வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு தவதாசன் கேதாம்பிகை (கேதா ரீச்சர்) அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு விரைந்து வந்து அனைத்து விதமான உதவிகளையும் வழங்கிய அன்புள்ளங்களுக்கும், நேரில் வருகை தந்தோர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் வழியாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியை நடத்துவதற்கு உதவிய குருமார்களுக்கும் மலர் வளையங்களைச் சாத்தி மனத்துயரை அர்ப்பணித்தோருக்கும், அஞ்சலிகள் வெளியிட்டோர்களுக்கும், போசன உதவிகள், சரீர உதவிகள் வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர், அதிபர்கள், ஆசிரியர்கள் ஏனைய கல்விச் சமூகத்தினர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் ஒத்தாசை வழங்கிய அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இல.235, பாண்டியன்குளம்,
நட்டாங்கண்டல், முல்லைத்தீவு

குடும்பத்தினர்.
077 158 6854, 077 886 0958

(CS/20334)(11/17)

## மரண அறிவித்தல்



### கனகசுந்தரம் மயிலேறும் பெருமாள்

(இளைப்பாறிய மாவட்ட வைத்திய அதிகாரி - DMO)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கனக சுந்தரம் மயிலேறும்பெருமாள் நேற்று (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - ஞானாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ரதியின் அன்புக் கணவரும், அருண், மயூரன், சிவபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதுரா, கோபிகா ஆகியோரின் அன்பு மாமனும், ஐந்தவி, மைத்திரேயன், ஆதிரேயன் ஆகியோரின் அன்புப்பேர னும், காலஞ்சென்ற தில்லைநாயகி காலஞ்சென்ற செல்வநாயகி, காலஞ்சென்ற நடேசன், காலஞ்சென்ற சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி, முருகமூர்த்தி, தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அருளையா, காலஞ்சென்ற சாம்பசிவம், ஞானாம்பிகை, காலஞ்சென்ற பஞ்சலிங்கம், காலஞ்சென்ற அழகானந்தசுந்தரம், பவானி, காலஞ்சென்ற வரதராஜன் தெய்வேஸ்வரி ராஜ்குமார், தெய்வேந்திரன் தமயந்தி, இந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2018) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14, துறைமுக வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

077 3151654 (மயூரன்-மகன்)

(cs14355)(13,17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா / புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம்

வரலாற்று சாதனையாளர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் வசிதரன் மேதையன்
புள்ளிகள் 176



செல்வி சாருகா குணபாலசிங்கம்
புள்ளிகள் 174

யா / புங்குடுதீவு றோ. க. த. க. வித்தியாலயத்தின் வரலாற்றில் புலமைப் பரிசில் பரீட்சையில் மாபெரும் சாதனை படைத்த செல்வன் வ.மேதையன், செல்வி கு.சாருகா ஆகிய இரு மழலைகளையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மழலைகளையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



செல்வி அ. அஸ்வினி
புள்ளிகள் 137



செல்வன் க. அஸ்வின்
புள்ளிகள் 136



செல்வன் அ. யூட்ஸ் கமிலஸ்
புள்ளிகள் 115



செல்வி றொ. மயூரி
புள்ளிகள் 112




செல்வி லி. யஸ்மிகா
புள்ளிகள் 111



செல்வி அ. கயல்விழி
புள்ளிகள் 100

வாழ்த்துவோர் : பாடசாலை சமூகம்,
புங்குடுதீவு பங்குத்திருச்சபை, புனித சவேரியார் கல்வி அபிவிருத்திக்குழு.




# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations!



கிளி /பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் 2018 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 179 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

**மைதரன் சசிமீரா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சித்திகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

Best Wishes



வாழ்த்துவோர் : குடும்பத்தினர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



CongratulationS

எமது அன்புப்பேரனும், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவனுமாகிய

**செல்வன் பாஸ்கரன் யேபவன்**

அவர்கள் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 186 புள்ளிகள் பெற்று மாவட்ட நிலையில் 69 ஆவது இடத்தினைப் பெற்றதையிட்டு நாம் மகிழ்ச்சியுடன் பாராட்டுவதில் பெருமையடைகின்றோம். அவர் மேலும் மேலும் சிறப்புற கடவுளைவேண்டுகின்றோம். இவரது வெற்றிக்கு ஊக்கமளித்த பாடசாலை அதிபர் ஆசான்களிற்கும் நன்றியைத் தெரிவித்து மகிழ்ச்சியடைகின்றோம்.

வாழ்த்துவோர் :
தாத்தா, அம்மம்மா (திரு.திருமதி சிவலிங்கம்),
குட்டி மாமா மற்றும் பா. ஆரூன்,
பா. அம்சிக் (சகோதரர்கள்).

சித்தன்மாவடி வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா /கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 174 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

Best Wishes

**செல்வி**

**அபினா பிரபாகரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துதோடு மேலும் கல்வியில் சிறந்து விளங்க இறைவன் அருள்புரிவராக.

வாழ்த்துவோர் : பெரியப்பா (ந. கோவிந்தராஜா), பெரியம்மா (கோ. பேரின்பராணி) தர்ஷி அக்கா, அனு அண்ணா, சாரு அண்ணா, உஷா அக்கா.

## உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு

**பொன்னுத்துரை தயாளன்**

Best Wishes

மகத்தான ஆசிரியர் சேவைக்காக கடந்த 05.10.2018 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் "குரு பிரதீபா பிரபா" விருதினைப் பெற்ற எமது உறுப்பினரை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

| தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2016 | தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2018 |
|---|---|
|  |  |
| செல்வி சு. அபிராமி | செல்வி சு. கனிவிழி |
| * 163 புள்ளிகள் | *195 புள்ளிகள் மாவட்ட நிலை - 5 அகில இலங்கைத் தமிழ்த்தினப்போட்டி - 2018 பிரிவு - 1 (எழுத்தாக்கம்) முதலாம் இடம். |

Congratulations!

யா /மகாஜனக்கல்லூரி மாணவிகளான இவ்விரு சகோதரிகளையும் மனம் நிறைந்து பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களை இந்த உயர்நிலைக்கு இட்டுச் சென்ற கல்லூரி அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித்தலைவர், தரம் 1 இலிருந்து கல்வி கற்பித்த ஆசிரியர்களுடன், வரணி கலைவாணி முன்பள்ளி ஆசிரியைக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர் : ச.கிரிதரன்
(மாமா குடும்பம்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி **வரதலட்சுமி கதிரேசபிள்ளை**

Commerce Trained, B.A, Dip.in Edu M.Ed (merit)
SLPS - I

யா/ இளையதம்பி இந்து வித்தியாலய அதிபர் **திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை** அவர்கள் இலங்கை அதிபர் சேவை **தரம் - I இற்கு 13.11.2015** முதல் பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதில் பேருவகைகொள்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்.
வண்ணார்பண்ணை.

(IN/60777)(12,17)

## ஏலவிற்பனை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தினால் 01.10.2018 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கு அமைய கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள சிவமகா காளியம்மாள் ஆலயத்துக்குரிய "சூரியன்கடவை" என்ற பெயருடைய நிலப்பரப்பு பதினைந்து குழி ஆறு தசம் ஐந்து இரண்டு விஸ்தீரணமான ஆதனம் ஆலய ஆதீனகர்த்தாவினால் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த ஆதனம் 13.10.2018 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் குறித்த ஆலய முன்றலில் ஆதீனகர்த்தாவினால் ஏலத்தில் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டிருப்பதனால் குறித்த ஆதனத்தை கொள்வனவு செய்ய விரும்புவோர் அன்றையதினம் குறித்த ஏல விற்பனையில் பங்குபற்றிக் குறித்த ஆதனத்தை கொள்வனவு செய்யலாம் என்றும் அவ்விதம் கொள்வனவு செய்யும் நபர்கள் அன்றைய தினமே கொள்வனவு பணத்தை ஆதீனகர்த்தாவிடம் செலுத்த வேண்டும் என்றும் அன்றைய தினமே ஏலத்தில் கொள்வனவு செய்பவர்கள் முறையான அறுதி உறுதி நிறைவேற்ற வேண்டும் என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

**சிவமகாகாளியம்மாள் ஆதீனகர்த்தா,**
**பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

(CS/20349)(11,17)

## Best Wishes பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா /மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய ஆசிரியை

**திருமதி**

**கிருஷாந்தி பாஸ்கரன்**

அவர்கள் 05.10.2018 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு தாமரைத்தடாக மண்டபத்தில் நல்லாசிரியருக்கான "குரு பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றுக் கொண்டமையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations!

பாடசாலைச்சமூகம், யா /மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2018 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யா /புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவன்

Congratulations!

**சுதர்சன் அக்சயன்**

192 புள்ளிகளைப் பெற்று 9 ஆம் இடத்தைப் பெற்றமையை மனம் நிறைந்து பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் கல்வியில் சிறந்து விளங்க இறைவன் அருள்புரிவாராக.

பாராட்டி வாழ்த்துவோர் : **அம்மப்பா, அம்மம்மா, திருசித்தப்பா, பெரியமாமா, சின்னமாமா, மாமிமார்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பிலோமினா அருளானந்தம்



குருநகரை வசிப்பிடமாகவும் தற்போது உதயபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளானந்தம் பிலோமினா நேற்று (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஞானப் பிரகாசம் - ராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான றோசம்மா, சிங்கராசா, இராசநாயகம், இராஜசிங்கம் மற்றும் ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் யேசுதாசன், காலஞ்சென்ற அருள்தாசன் மற்றும் அருள்சீலி, அமலசீலி வேட்டில்டா, அல்போன்சா காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் தாயாரும் சறோசா, வதனி, காராளசிங்கம் சண்முகராசா, சிறீ ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (08.10.2018) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் உதயபுரம் புனித செபஸ்தியார் ஆலயத்தில் இடம்பெற்று புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 865
சீட்டிழுப்பு திகதி 2018.10.06 சனிக்கிழமை
J 11 25 57 63
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 54,456,144/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
ஜாதா நிற டிக்கட்டுகள் 2018.10.08ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றும் செல்வி யசோதை நடராஜசுந்தரம் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி பாலரஞ்சிதமணி நடராஜசுந்தரம்**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 20396/15/17)

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி, நாவற்குழி.**

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

### திருமதி சத்தியேஸ்வரி சோமசுந்தரம்



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியேஸ்வரி சோமசுந்தரம் நேற்று (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்ம லிங்கம் சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வர்களான கணபதிப்பிள்ளை கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சோமசுந்த ரத்தின் (ஆசிரியர்) அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சுந்தரேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோ தரியும் சிவகலா (ஆசிரியை, தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம்), கலாநாதன் (காவலாளி, நயினாதீவு கணேஷா கனிஷ்ட வித்தியாலயம்), யமுனா (ஆசிரியை, இணுவில் இந்துக்கல்லூரி), காலஞ்சென்றவர்களான இரத்னமாலா, தயாளன் ஆகியோரின் அன்புத் தாயும் புவனேஸ்வரியின் சிறியதாயும் இளங்கோ (அதிபர்) காலஞ்சென்ற பகீரதன் (அதிபர்) மற்றும் சுமதி ஆகியோரின் அன்பு மாமியும் துசிபரன், கஜனி துசித்திரா, புராதனி, கஸ்தூரி, தஷிணா, ஜஷி, மோகிதா, சோபிதா, சோபிகாந் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் தர்மிதனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (09.10.2018) செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நயினாதீவு,**
**5 ஆம் வட்டாரம்**

**தகவல் : குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம்மா தினகரிப்பிள்ளை



தோற்றம் 04.11.1927
மறைவு 05.10.2018

கரணவாய் வடக்கு, புலவரா வோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா தினகரிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியை) (05.10.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் தினகரிப்பிள்ளையின் அன்புமனைவி யும் காலஞ்சென்ற முருகேசு சின்னப் பிள்ளைதம்பதியரின்அன்புப்புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்துரை தங்கம்மா வின் அன்புச்சகோதரியும் கருணானந்தன் (லண்டன்), தேவபாலன், கமலநாதன் (கனடா), கமலாம்பிகை (அல்வாய், சின்னத் தம்பி வித்தியாலய ஆசிரியை) ஆகியோரின் அன்புத்தாயும் நவரட்ணத் தின் (நோர்வே) அன்புச்சிறியதாயும் பகீரதி (லண்டன்), சுகுணராணி, வித்யா (கனடா), தவநாதன் (ஆசிரிய ஆலோசகர் கணனி வள நிலையம்), ஜெயலட்சுமி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும் ஹர்ஷான், ஷாகரி (லண்டன்), தர்ஷயன், தர்சிகா, அஸ்வினி, சியாமினி, பிரியங்கா (கனடா), விருஜா , விருசன், திரு.திருமதி ஜெகன் ஜெசி, தரு, முகுந்தன் (நோர்வே) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.10.2018) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
**021 226 2137**

### திருமதி இராசமணி சின்னத்துரை



குப்பிளான் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி சின்னத்துரை கடந்த (05.10.2018) வெள்ளிக்கிழமை இறை பதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் செல்லப்பா சின்னத் துரையின் அன்பு மனைவியும் நவ ரூபன், காந்தரூபி (ஊழியர் - யூனியன் அஷூரன்ஸ்), கஜரூபன், சிவரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்றவர்களான செல்லப்பா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான இராசமணி, ஆறுமுகம், சத்தியமூர்த்தி இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சின்னமணி, ஐயாத்துரை அன்னலட்சுமி மற்றும் பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனியும் ராதா கேதாரநாதன் (ஆசிரியர் - காரைநகர் இந்துக் கல்லூரி), லாவன்ஜா, சரண்யா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜஸ்மிதா, ரிஷானா, ருபீஷன், வேணி, மகிசா, லவிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (10.10.2018) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் காடாகரம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காந்தரூபி - 077 899 9045**

**தகவல்: குடும்பத்தினர்.**

### நல்லையா இரத்தினம்

**(பிரபல வர்த்தகர் - CL 9222 கார் உரிமையாளர்)**



பிறப்பு 26.10.1928
இறப்பு 07.10.2018

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா இரத்தினம் நேற்று (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - நாகம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் கண் மணியின் பாசமிகு கணவரும் பாலகுமார் (ஓய்வுபெற்ற அதிபர் - யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி), புஸ்பராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), யோகராணி (லக்கி - தையல் போதனாசிரியர் - பிரதேச செயலகம், கோப்பாய்), விஜியராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செந்தில்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), இரத்தினராசா (ஓய்வுபெற்ற சுகாதார மேற்பார்வையாளர் - மாநகர சபை, யாழ்ப்பாணம்), சுந்தரராஜன் (கணக்காளர் வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்), குகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தாட்சாயினி (ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்), சங்கீதா, கார்த்திகா (அஞ்சல் அதிபர் - அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்), ஆரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தொழிற்துறைத் திணைக்களம், கைதடி), துவாரகா (மாணவி - யாழ். பல்கலைக்கழகம்), சிந்து (மாணவி - BIT பல்கலைக்கழகம், கொழும்பு), சுமித்தா (தரம் 10, மாணவி யாழ். இந்து மகளிர் கல்லூரி), சஞ்கித்தா (கனடா), காயத்திரி (கனடா), சரூன் (கனடா), விதுசா (கனடா), Dr. திவாகர் (ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை), நவதர்ஷன் (ஆசிரியர் - பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், முல்லைத்தீவு), இராஜேஸ்கண்ணன் (நீர்ப்பாசன சபை PVT), மயூரன் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் துவாரகன், தக் ஷயா, தானியா, ஆஷரா, ஆஷிகா, டிலக் ஷி, அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2018) திங்கட்கிழமை பி.ப. 4.00மணியளவில் திருநெல்வேலி கிழக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: இ.பாலகுமார் (மகன்)**
**(ஓய்வுநிலை அதிபர் - யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி)**

## வட இலங்கைச் சங்கீத சபை
## பொதுக்கூட்டம் – 2018

வட இலங்கைச் சங்கீத சபையின் பொதுக்கூட்டம் நிர்வாக சபை கூட்டம் தீர்மானத்திற்கு அமைவாக நடைபெறவுள்ளது. பொதுச்சபை உறுப்பினர்களை (அங்கத்தவர்களை) தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**திகதி - 24.10.2018 புதன்கிழமை**
**நேரம் - காலை 9.30 மணிக்கு**
**இடம் - வட இலங்கை சங்கீத சபை மண்டபம்**
**காங்கேசன்துறை வீதி, மருதனார்மடம்.**

நிகழ்ச்சி நிரல் :

**1. தேவாரம் 2. சபையின் செயற்பாட்டறிக்கை 3. கணக்கறிக்கை**
**4. புதிய நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்தல்**
**5. வேறு விடயம்**
**6. பிரேரணைகள் ஏதும் இருப்பின் 20.10.2018 ஆம் திகதிக்கு முன்னர் சபையின் செயலாளரிடம் கையளிக்கவும்.**

குறிப்பு - ஆயுட் கால சந்தா செலுத்தியவர்களை தவிர்ந்த ஏனைய பொதுச்சபை உறுப்பினர்கள் தமது சந்தாவை 12.10.2018 ஆம் திகதிக்கு முன் சபையில் செலுத்திப் பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளவும்.

சி. மாணிக்கராஜா
யாழ். வலய பிரதிக்கல்விப்பணிப்பாளரும்.
வட.இ.ச.சபை உப தலைவரும்.

சி. சிவராஜன் செயலாளர்.
வட இலங்கை சங்கீத சபை.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலரஞ்சிதமணி நடராஜசுந்தரம்

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை -
கொ/இரத்மலான இந்துக் கல்லூரி, கொழும்பு)



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் 50/2, செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலரஞ்சிதமணி நடராஜசுந்தரம் நேற்று (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - அகிலாண்டநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - கமலம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நடராஜசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கீர்த்தி சிரோன்மணி, இராஜரட்ணம், அருட்செல்வம் மற்றும் சிறீமணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரன், இரத்தினசபாபதி மற்றும் சுந்தரேஸ்வரி, றோஸ் ஜெயராணி, ஏர்னெட் ஜெயம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், யசோதை (ஆசிரியை - யா/நாவற்குழி ம.வி), வேணுகா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், பாலகுமாரின் பாசமிகு மாமியும், இனிதா, தன்யா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மஞ்சுளாவின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2018) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**50/2, செட்டித்தெரு,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**கணவர் - நடராஜசுந்தரம்**
077 312 6596
(c7956)

பிறப்பு 21 . 08 . 1950



இறப்பு 07 . 10 . 2018

### கந்தையா செல்வராசா

(இளைப்பாறிய பிரதம முகாமைத்துவ உதவியாளர், தொழில்திணைக்களம்)

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா செல்வராசா நேற்று (07.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் ( இளைப்பாறிய முகாமைத்துவ உதவியாளர், கல்வித்திணைக்களம்) அன்புக் கணவரும், வல்லிபுரம், சிதம்பரப்பிள்ளை, இராமநாதன், மாசிலாமணி, பரமானந்தம், தங்கமணி, காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கார்த்தீபன் ( Electrical Engineer, London), துவாரகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபா (Quantity Surveyor, London), துஷிதா (ஆயுள்வேத வைத்தியர், புதுக்குடியிருப்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அவினீஷ், பிரணவ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2018) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**43,கோணாவளை லேன்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 222 2558**


கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 351
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.10.07
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 97,233,978/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
F 06 22 66 68
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 396
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.10.07
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 57,963,575/-
வெற்றி இலக்கங்கள்
26 31 32 68
ஆங்கில எழுத்து M
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 07.10.2018
வெற்றி வாரம் 2378
வர்ணம் ஊதா
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 07 26 42 51
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 13,179,396/=
2018.10.09 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


## மரண அறிவித்தல்கள்

### திருமதி திலகவதி துரைரட்ணம்



பிறப்பு 12.04.1943
இறப்பு 07.10.2018

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி துரைரட்ணம் நேற்று (07.10.2018) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நடராஜா நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் துரைரட்ணத்தின் அன்புமனைவியும் முரளீதாஸ், மோகனதாஸ் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கவிதாவின் அன்பு மாமியும் அபிசனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2018) திங்கட் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## பொன்னம்பலம் சிவயோகம்



சரசாலை தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் சிவயோகம் நேற்று (07.10.2018) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், சிவதாஸ் (நில அளவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவமங்கையின் அன்பு மாமியாரும் சாலினி, கஜனி, உமாதரன், சாரங்கி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2018) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**140, கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

### பெண் அலுவலர் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கணினி அறிவுள்ள பெண் அலுவலர் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.
**- 077 386 7458**

### வேலையாள்கள் தேவை

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு சாரதி, பொதி செய்யும் பெண்கள், மில் வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை.
**076 778 9381**
(CS/20390)(11,17)

### வேலையாள்கள் தேவை

லேபர் (கூலி) வேலையாள்கள் தேவை.
உணவு, தங்குமிட வசதி இலவசம்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
**தொடர்பு - 077 0833 461**

### மணமகள் தேவை

1978ஆம் ஆண்டு பிறந்த 8இல் சூரியன், செவ்வாய், கிரகபாவம் 45 உடைய விசாகம் நட்சத்திரம், 4ஆம் பாதம் கொண்ட அரச உத்தியோகத்தருக்கு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை.
**-076 192 7030**

### விதைநெல் விற்பனைக்கு

விவசாயத் திணைக்களத்தினால் சுத்திகரிக்கப்பட்ட அதி உன்னத விளைச்சல் தரும் மூன்றரை மாத **B.G.34.6** விதைநெல் விற்பனைக்குண்டு.
**077 659 2044**
(IN/7999)(11,17)

### பெயர்மாற்றம்

அச்சுவேலி தெற்கு நாவற்காடு அச்சுவேலியைச் சேர்ந்த **இராசையா குணமணி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **இராசையா குணராசா** எனப் பெயர்மாற்றி இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறு கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
**இராசையா குணராசா**
(CS/20384)(11,17)

### வேலை ஆள்கள் தேவை

**யாழ்நகரில் உள்ள**
**புடைவை விற்பனை நிலையத்துக்கு**
**அனுபவமுள்ள, பழக விரும்பும்**
**ஆண், பெண் விற்பனையாளர்**
உடன் தேவை. மேலும் **சிட்டை**
**எழுதுனர் பெண்** உடன் தேவை
**077 348 2634**

### 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் தயாபரன் சிவதர்ஷன்**
(உரிமையாளர் சிவதயா அச்சகம்)

தோற்றம் 27.09.1990
மறைவு 23.09.2014

காலமாகிப் போகவில்லை - இவன்
காலத்தை வென்றிந்த ஞாலத்தில்
எம் நெஞ்சில் - உயர் காவியமாய்
உயிர்த்துள்ளான் சிவதர்ஷன்

திதி: 08.10.2018 (சதுர்த்தசி)

தயா அச்சகம்
575, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தயா வெளியீடு
077 396 5214

## இடைக்கால...

பட்டுள்ளனர். அதேவேளை, கூட்டு எதிரணி உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களை பத்திரமுல்லையில் உள்ள நெலும் மாவத்தை பொதுமக்கள் முன்னணி அலுலகத்தில் இன்று ஒன்றுகூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16பேர் அணி, இடைக்கால அரசு அமைக்கும் யோசனையை முன்வைத்திருந்தது. 2019ஆம் ஆண்டுகான வரவு செலவுத் திட்டத்தை தோற்கடித்து, கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும் என்றும் அதன் பின்னர், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து இடைக்கால அரசு அமைக்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைவாகவே இந்த யோசனையை 16பேர் அணி முன்வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அவரது சகோதரர்களான கோத்தபாய ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோருக்கு இடையில் அண்மையில் இரகசிய சந்திப்பு நடைபெற்றிருந்தது.

இடைக்கால அரசுக்கான ஆதரவை, அரச தலைவர் மைத்திரிபால இந்தச் சந்திப்பில் கோரியிருந்தார் என்றும், இது தொடர்பில் தமது கட்சியினருடன் பேசியே முடிவு எடுக்க முடியும் என்று மகிந்த தெரிவித்திருந்தார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவ்வாறானதொரு நிலையிலேயே, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி நாளை செவ்வாய்க் கிழமை தனதுக் கட்சிக் கூட்டத்தை கூட்டியுள்ளது. (ந.5)

## ஆர்வக்கோளாறால்...

இணையத்தளத்தில், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரின் மகன் தொடர்பான செய்தி வெளியாகியிருந்தது. அந்தச் செய்தியை வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவருக்கும், அமைச்சர்களுக்கும், அவைத் தலைவருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண முதலமைச்சருக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். அதில் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணம் வர்த்தக நிலையத்தில் திருட்டு, வடக்கு மாகாண சபை முக்கிய பிரமுகரின் மகனும் சிக்கினார் என்ற தலைப்பில் இணையத்தளத்தில் வெளியான செய்தியை எனக்கும் வடக்கு மாகாண அமைச்சர்கள், அவைத் தலைவருக்கும் மின்னஞ்சலில் அனுப்பியதற்கு எனது நன்றிகள்.

வடக்கு மாகாண சபையின் நிறைவேற்றுச் செயற்பாடுகளில்தான் தாங்கள் திறம்பட, ஆக்கபூர்வமாக விடயங்களை விளங்கிச் செயற்படாத் தன்மை இருக்கின்றது என்று நான் இதுவரை தங்களைப் புரிந்து கொண்டேன். ஆனால் அந்த விடயப் பரப்புக்களுக்கு அப்பாலும் அதே வடிவில் தான் செயற்படுகிறீர்கள் என்பதை மேற்படிச் செய்தியை அனுப்பியதன் மூலம் உணர்கின்றேன்.

தங்கள் ஊதுகுழல் இணையத்தளத்தில் ஒரு செய்தியை வரவைத்து அதைப் பரப்பி அரசியல் லாபம் தேடும் தங்கள் நோக்கத்தையிட்டு நான் பரிதாபப்படுகின்றேன். எனது மகனுக்கு 26 வயது. அவர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவரோ அல்லது மாகாண சபையில் நான் அங்கம் வகிப்பதன் மூலம் ஏதாவது நன்மை பெற்றவரோ அல்லர். அவரது நடவடிக்கைகளுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவர் தனித்துவமானவர் என்று கூறி நான் தப்ப எண்ணுகின்றேன் என்று கருதவேண்டாம். ஒருவரின்,தனிப்பட்ட விடயங்களையோ அல்லது அவரின் குடும்ப அங்கத்தவர்களின் விடயங்களையோ அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்துவது அரசியல் நாகரிகம் அல்ல. அதன் அடிப்படையில்தான் உங்கள் குடும்ப விடயங்கள் பலவற்றையும், தங்களது வீட்டில் தற்போது நடக்கும் விடயங்களைப் பலர் எமக்கு எடுத்துக் கூறியதோடு, சபையில் பேசுமாறும் வேண்டியபோது நான் அவ்வாறான அநாகரிக அரசியலைச் செய்ய விரும்பாமையால் அவை பற்றிப் பேசுவதில்லை. இனிமேலும் பேசப் போவதுமில்லை.

தங்கள் ஊதுகுழல் இணையத்தில் வெளியான விடயத்துக்கு வருகின்றேன். அதில் கூறப்பட்டுள்ள விடயங்களைப் பிழையென என்னால் நிரூபிக்க முடியும். தனிப்பட்ட முறையில் நிரூபிக்காமல் பகிரங்கமாகவே நிரூபிக்கத் தயாராக உள்ளேன். ஏற்கனவே மாகாண சபையின் கடந்த 5 ஆண்டு செயற்பாட்டில் நடைபெற்ற ஊழல்கள், செயற்பாட்டுத் திறன் இன்மை, அதிகார முறைகேடு, அசட்டையீனமான நிறைவேற்றுச் செயற்பாடுகள் போன்றவற்றைப் பகிரங்கமாக விவாதிப்பதற்கு தங்களை வருமாறு பல தடவைகள் நான் அழைத்திருந்தேன்.

தாங்கள் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதாகக் கூறுவது உண்மையானால், அதே போல் தங்கள் கூற்றுக்கள் உண்மையானதும் நேர்மையானதுமானால், இந்த விடயம் உள்ளடங்கலாக வடக்கு மாகாண சபையின் செயற்பாடு தொடர்பில் ஒரு பகிரங்க விவாதத்துக்கு வர வேண்டும் என்று மீண்டும் சவால் விடுகின்றேன். அதேநேரம் தாங்கள் அனுப்பிய செய்தியைத் திசை திருப்புவதாகக் கருதினால், அந்த விடயத்தை முதலில் விவாதித்து அதன் பின்னர் ஏனைய விடயத்துக்குள் செல்லவும் நான் முழுமையான சம்மதத்தைத் தெரிவிக்கின்றேன். தங்களிடமிருந்து இதற்கு உறுதியான பதிலை எதிர்பார்க்கின்றேன் என்றுள்ளது. (ந.5,105)

## கூட்டமைப்பின்...

சந்திப்புக்கு நேரமும் ஒதுக்கவில்லை. இந்த நிலையில் அரசியல் கைதிகள் விடயத்தில், விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாளை மதியம் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதுடன், கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பில், அரசுத் தலைமை பாராமுகமாகச் செயற்படுவதால் இது தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பை வலியுறுத்தி கொழும்பை முடக்கும் வகையில் மிகப் பெரிய போராட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (5)

## அரசியல்...

ஒறுப்பில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளுக்குப் பலம் சேர்க்கும் வகையிலும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்கு முன்பாகவும், அச்சுவேலிப் பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும் இன்று கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு முன்பாக பல்கலைக் கழக மாணவர்களால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று காலை 11 மணிக்கு ஆரம்பமாகும் போராட்டத்தில் பேதங்கள் இன்றி அனைவரும் கலந்து கொள்ளவேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

அச்சுவேலிப் பேருந்து நிலையம் முன்பாக முற்பகல் 10 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன.

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-21)

## வாக்குறுதியளித்த...

முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அமைச்சுக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளதால் பெரும் பாதிப்பு ஏற்படக் கூடும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேற்ற அமைச்சுக்கு 2018ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் 900 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. கடந்த காலங்களில் அந்த அமைச்சுக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டிருந்தபோதும், நடப்பு ஆண்டுக்கு குறைவான நிதியே வழங்கப்பட்டிருந்தது.

இதனைச் சுட்டிக்காட்டியும், வடகிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பிரதேசங்களில் அடிப்படைத் தேவைகளை முழுமைப்படுத்தும் நடவடிக்கைகளுக்குப் பெரும் தொகை நிதி தேவை என்பதை வலியுறுத்தியும் மீள்குடியேற்ற அமைச்சு அடுத்த ஆண்டுக்கு 20 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை என்று நிதி அமைச்சுக்கு கோரிக்கை சமர்பித்திருந்தது. நிதி அமைச்சு 6 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவே வழங்க முடியும் என்று அறிவித்திருந்தது.

நாடாளுமன்ற நிதிக் குழுக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த மாத ஆரம்பத்தில் நடைபெற்றது. மீள்குடியேற்ற அமைச்சுக்கு அதிகரித்த நிதி ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. 6ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்று இந்தக்கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. சில நாள்களுக்கு முன்னர் நிதி அமைச்சில் நடந்த கலந்துரையாடலில், மீள்குடியேற்ற அமைச்சுக்கு அடுத்த ஆண்டு பாதீட்டில் ஆயிரத்து 750 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

## நாடாளுமன்றத்தை...

ஓயாவின் நீர்மட்டமும் வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால் நாடாளுமன்றத்தைப் பாதுகாப்பதற்காக, நாடாளுமன்ற வளாகத்தைச் சுற்றி, மணல் மூடைகள் அடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இராணுவத்தினர், நாடாளுமன்ற வளாகத்தில் மணல் மூடைகளை அடுக்கி வருகின்றனர். (5)

## இலங்கையருக்கு...

விடுதிகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றபோது கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஆண்டு இலங்கையின் வரலாற்றில் மிகவும் மோசமான ஆண்டாக அமையவுள்ளது. காரணம் 2019ஆம் ஆண்டிலேயே நாம் அதிகளவான கடன்களைச் செலுத்த வேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

நாம் அனைத்துக் கடன்களையும் மையப்படுத்தியே ஒவ்வொரு வரவு -செலவுத் திட்டத்தையும் தயாரித்து வந்தோம். எமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதன் பின்னர் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தின் போது பல்வேறு உதவித் திட்டங்களையும், சம்பள அதிகரிப்புக்களையும் வழங்கியுள்ளோம்.

கடன்களை மீளச்செலுத்துமாறு பல்வேறு தரப்புக்களிடத்திலிருந்தும் எமக்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து ஆராய்ந்து பார்த்தபோது கடந்த அரசு பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுக்குத் தெரியாது மிகவும் சூட்சுமமாக வங்கிகள் ஊடாகப் பெருந்தொகையான கடன்களைப் பெற்றுள்ளது.

கடன்பெற்றுள்ளமையானது நேரடியாக திறைசேரிக்கு வருவதில்லை. வங்களின் பிரகாரம் பெற்ற கடன்களாகவே கணிக்கப்படுகின்றது. அரச வங்கிகளின் மூலமாகப் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்தாது விட்டால் சகல வங்கிகளும் இழுத்து மூடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம்.

லலித் கொத்தலாவலவின் வங்கிக்கு நடந்ததைப்போன்று தான் ஏனைய வங்கிகளுக்கும் நடக்க வேண்டிய ஆபத்துள்ளது. நேர்வழியிலோ அல்லது திருட்டுவழியிலோ கடன்களை யார் பெற்றிருந்தாலும் எமது மக்களுக்காக நாம் மீளச் செலுத்த வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம் - என்றார். (5,31)

## மைத்திரியும்...

ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் கடந்த வாரம் பத்திரமுல்லவில் உள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க வீட்டில் சந்தித்துப் பேசினர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இருப்பினும் எஸ்.பி.திசநாயக்க தனது வீட்டில் நடைபெறவில்லை என்று மறுத்திருந்தார். இந்தப் பேச்சில், பசில் ராஜபக்சவும் கலந்து கொண்டுள்ளார். பேச்சு வெற்றியளித்தால், இடைக்கால அரசின் தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்படுவார் என்று தீர்மானிக்கப்பட்டது என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையே இரு வாரங்களின் பின்னர் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறும் என்று எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ந.5)

## கொக்குவில்...

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. கொக்குவில் பகுதியிலேயே அதிகளவு வாள்வெட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமையும் வீடொன்றின் மீது தாக்குதல் நடந்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலையிலிருந்து கொக்குவில் பகுதிகளில் சிறப்பு அதிரடிப் படையினர் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். உந்துருளியிலும், நடந்தும் அவர்கள் வீதிச் சுற்றுக்காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. (ற-8)

## தமிழ்...

கிளிநொச்சி, பூநகரி செம்மன் குன்று பல்லாய்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் நாணயக்குற்றி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் நாணயக் குற்றியை மீட்டுள்ளனர். அதில் 'சேது' என்று தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

நாணயம் மீட்கப்பட்ட பகுதி தமிழ் அரசியான அல்லி ராணி ஆட்சி புரிந்தமைக்கான வரலாறுச் சான்றுகள் மீட்கப்பட்ட பிரதேசம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சேது நாணயம் என்பது 13 தொடக்கம் 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்தி வம்சத்தினரால் வெளியிடப்பட்ட நாணயம் ஆகும். இதன் ஒரு பக்கத்தில் நின்ற நிலையிலான ஒரு மனித உருவமும், அதன் இரு பக்கங்களிலும் விளக்குகளும் பொறிக்கப்பட்டுள்ளன. மறு பக்கத்தில் யாழ்ப்பாண அரசின் சின்னமான நந்தியும், 'சேது' என்ற சொல்லும், மேலே பிறையும் பொறிக்கப்பட்டுள்ளன. சேது நாணயங்கள் இலங்கையின் வட பகுதியிலும், தென்னிந்தியாவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

முன்னர் இந்த நாணயங்களை யார் வெளியிட்டார்கள் என்று தெரியாமல் இருந்தபோது பலரும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இவை சோழமன்னரால் வெளியிடப்பட்டவை என்று சிலரும், சிங்கள மன்னன் பராக்கிரமபாகுவால் வெளியிடப்படவை என்று சிலரும், இராமநாதபுரத்துச் சேதுபதிகளால் வெளியிடப்பட்டவை என வேறு சிலரும் கருதினர். 1920ஆம் ஆண்டு ஞானப்பிரகாசர் இது யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்டவை என்பதைச் சான்றுகளுடன் விளக்கினார் என்று விக்கிபீடியா தகவல் களஞ்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (21)

## யாழ்ப்பாணத்திலிருந்து....

வடமராட்சி கிழக்கில் பிரதேச செயலரின் அனுமதி இன்றி அரச காணியில் வாடி அமைத்துக் கடலட்டை பிடித்தவர்களுக்கு எதிராக மருதங்கேணிப் பிரதேச செயலரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையை அடுத்து அங்கு நிறுவப்பட்டிருந்த கடலட்டைத் தொழில் செய்யும் 8 நிறுவனங்களும் வெளியேறவேண்டும் என்று கடந்த 25ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று கட்டளையிட்டது. அதையடுத்து வாடிகள் அகற்றப்பட்டன.

மருதங்கேணி, தாளையடி போன்ற இடங்களில் 8 நிறுவனங்களுக்குச் சொந்தமான 32 வாடிகள் அகற்றப்பட்டன. சுமார் 850 இற்கு மேற்பட்ட பிற மாவட்ட மீனவர்களும் வெளியேறினர். அந்த நிறுவனங்களுக்கு முல்லைத்தீவு, சாலைப் பிரதேசத்திலும் கடலட்டைத் தொழில் செய்வதற்கான அனுமதி உண்டும் என்றும், அதன் அடிப்படையில் அவர்கள் அங்கு வாடிகள் அமைக்கின்றனர் என்றும் பிரதேச மீனவர்கள் கூறுகின்றனர்.

சாலையில் உள்ள கடற்படைத் தளத்தை அண்டிய பகுதிகளுக்குள் செல்ல உள்ளூர் மக்களுக்கோ, மீனவர்களுக்கோ அனுமதியில்லை. பிறமாவட்ட மீனவர்கள் மட்டுமே அந்தப் பகுதியில் தொழில் செய்கின்றனர். தற்போது அதிக மீனவர்கள் அந்தப் பகுதியில் குவிகின்றனர். அவர்களின் படகுகளால் உள்ளூர் மீனவர்களின் வலைகள் பாதிப்படையும். அவ்வாறான பாதிப்புக்கள் நடந்தால் கடற்படை முகாமை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று உள்ளூர் மீனவர்கள் தெரிவித்தனர். (ற-105)

## நல்லகாரியங்கள்...

கூறினார்.

அவர் அங்கு முக்கியமாகத் தெரிவித்ததாவது, நல்ல பணிகளை ஆற்றுகின்ற மக்களுக்கு சில எதிர்ப்புக்கள் வரத்தான் செய்யும். வடமாகாண முதலமைச்சர் அதற்கொரு உதாரணம். எனினும் தடைகளைத் தாண்டி முனைப்புடன் முன்னேற இந்தளவு பெரிய மக்கட் கூட்டமும் சமூக அமைப்புக்களும் தனக்குப் பின்னால் இருப்பதை வைத்திய கலாநிதி முகுந்தன் மறந்து விடமாட்டார் என்று நம்புகின்றேன்.

மருத்துவக் கலாநிதி முகுந்தன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி திறந்த இருதய சத்திர சிகிச்சைக் கூடத்தை வெற்றிகரமாகத் திறந்து அதை நடத்திச் சென்றதைப் பாராட்டும் முகமாக கொழும்பிலிருந்து சுகாதார சேவைகள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் வைத்திய சேவைகள் பணிப்பாளர் நாயகம் இருவரும் நேரடியாக இங்கு சமூகமளித்து சத்திரசிக்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளர்களுக்கு பழக்கூடைகளை வழங்கியும் வைத்திய நிபுணருக்கு மலர்க்கொத்துக்கள் வழங்கியும் மதிப்பளித்துச் சென்றமையை அனைத்துப் பத்திரிகைகளும் பிரசுரித்திருந்தன. இவ்வாறு திறமை மிக்கவர்கள் கொழும்புத் தலைமைகளினால் மதிப்புடன் உற்று நோக்கப்படுகின்றார்கள். எம்மவராலோ அவர்கள் பொறாமையுடன் நோக்கப்படுகின்றார்கள் - என்றார். (5)

## சென்றலைட்ஸ் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஒக். 8
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 77:63 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம23)

## வெற்றிபெற்றது இந்து இளைஞர்

யாழ்ப்பாணம், ஒக். 8
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவு அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக பி அணி வெற்றிபெற்றது. நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:2 என்ற செற் கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம23)

## ரேஞ்சர்ஸ் அணி காலிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 8
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.
இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
2:1 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)




**வடக்கின் கில்லாடி வெற்றிக்கிண்ணம்**

# மூன்றாவது இடத்தைத் தனதாக்கியது றோயல்

யாழ்ப்பாணம், ஒக். 8
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் வடக்கின் கில்லாடி வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது.
அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது.
3:0 என்ற கோல் கணக்கில் றோயல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. இந்தத் தொடரின் இறுதியாட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த இறுதியாட்டதில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 8
**கூடைப்பந்தாட்டம்**
கே.ஸி.ஸி.ஸி. விளை யாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.கே.எஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கால்பந்தாட்டம்**
ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமைபிற்பகல்3மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)





## வென்றது மானிப்பாய் இந்து

யாழ்ப்பாணம், ஒக். 8
கொழும்பு சாகிராக் கல்லூரியின் பழைய மாணவர் தலைவர்கள் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
கொழும்பு குதிரைப் பந்தயத்திடலின் பன்னாட்டு அரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ஆஸ்திரேலியாவை தோற்கடிப்போம்

## ஷா நம்பிக்கை



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவோம் என்று தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் யாசீர் ஷா.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நேற்று ஆரம்பமானது. இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஷா இவ்வாறு தெரிவித்தார்.

"ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றும். இந்தத் தொடரில் இரண்டு இன்னிங்ஸிலுமாகச் சேர்த்து நான் மட்டும் 20 இலக்குகளைக் கைப்பற்றத் திட்டமிட்டுள்ளேன். அந்த இலக்கை நோக்கிப் பயணிப்பேன். ஆஸ்திரேலியாவை வீழ்த்துவதில் எனது பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்" என்று ஷா மேலும் தெரிவித்தார். (ம)

# ரஞ்சித் தொடருக்குக்கூட தகுதியற்றது மே.தீவுகள்

## ஹர்பஜன் கிண்டல்



தற்போதுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி ரஞ்சிக் கிண்ணத் தொடருக்குக்கூட தகுதியற்றது என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் ஹர்பஜன்.

இந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி படுதோல்வியடைந்தது. இந்தத் தோல்வியை அடுத்து ஏகப்பட்ட வசைகளை அந்த அணி வாங்கிக் குவித்துள்ளது. இத்தகையதொரு பின்னணியில்தான் தீவுகளைக் கிண்டிலடித்துள்ளார் ஹர்பஜன்.

"மே.இ.தீவுகள் கிரிக்கெட் மீதான உரிய மரியாதையுடன் தான். நான் உங்கள் அனைவரிடமும்ஒரு கேள்வியைக் கேட்கிறேன். இந்த மே.இ.தீவுகள் அணியை வைத்துக் கொண்டு ரஞ்சிக் கிண்ணக் கீழ்மட்டப் பிரிவிலாவது விளையாட முடியுமா? ரஞ்சி மேல்மட்ட பிரிவில் வாய்ப்பேயில்லை" என்று ஹர்பஜன் மேலும் தெரிவித்தார்.

ஹர்பஜனின் இந்தக் கருத்துக்குச் சமூக வலைத் தளங்களில் கடும் கண்டனம் எழுந்துள்ளது. இந்திய அணி இதற்கு முதல் இங்கிலாந்தில் படுதோல்வியடைந்தது. எனவே ஹர்ஜனின் கூற்று சரியானதா? என்று வலைத்தள வாசிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம)




# ரொனால்டோவை விட மெஸ்ஸியே சிறந்தவர்

## பீலே தெரிவித்தார்




கால்பந்து உலகின் ஜாம்பவான்களாக ரொனால்டோ, மெஸ்ஸி இருவரும் உள்ள போதிலும் ரொனால்டோவைக் காட்டிலும் மெஸ்ஸிதான் சிறந்த வீரர் என்று தெரிவித்தார் பிரேசில் அணியின் கால்பந்து ஜாம்பவான் பீலே. பிரேசிலின் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே பீலே இவ்வாறு தெரிவித்தார்.

"மெஸ்ஸியையும், ரொனால்டோவையும் ஒப்பிடுவது மிகவும் கடினமானது. இருவரும் வெவ்வேறு விதமான பாணியைக் கொண்டவர்கள். ரொனால்டோ தனிநபராக ஆதிக்கம் செலுத்த விரும்புகிறார். ஆனால் மெஸ்ஸி பந்துப்பரிமாற்றங்களை மேற்கொள்ளப் பிரியப்படுகிறார். இருவரும் சிறந்த வீரர்கள். ஆனால் நான் அணியொன்றைத் தெரிவுசெய்பவனாக அல்லது கட்டமைப்பவனாக இருந்தால் நிச்சயம் மெஸ்ஸிக்குத்தான் முக்கிய இடம்கொடுப்பேன்' என்று பீலே மேலும் தெரிவித்தார். (ம)

# பிருத்வி ஷா சிறந்த வீரர்

## கோக்லி புகழாரம்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி அபார வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி ஆட்டநாயகனாகத் தெரிவானார் பிருத்வி ஷா. அவருக்கு இந்திய அணியின் தலைவர் கோக்லி புகழாரம் சூட்டியுள்ளார்.

"இங்கிலாந்து, இந்தியா நிலை



மைகளை ஒப்பிடமுடியும் என்றுநான்நினைக்கவில்லை. அது மிகப்பெரிய சவால். இந்தியாவில் நாம் ஆதிக்கம் செலுத்துவோம் என்பது தெரிந்த ஒன்றுதான். துல்லிய வெற்றி. மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆட்டம் பற்றி பேசக்கூடாது. அவர்கள் தங்கள் தவறுகளைக் களைந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

எதிரணி என்ன செய்கிறது என்பதில் கவனம் செலுத்த விரும்பவில்லை.

நாங்கள் துல்லியமாக வென்றோம் என்று மட்டுமே கூற முடியும், அப்பழுக்கில்லாத ஆட்டம். பிருத்வி ஷா தான் வேறொரு தரநிலையைச் சேர்ந்தவன் என்பதைக் காட்டியுள்ளார்" என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

# வழித்துத் துடைத்தது தென்னாபிரிக்க அணி



சிம்பாப்வேக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் 4 இலக்குகளால் வெற்றிபெற்று மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரை 3:0 என்ற அடிப்படையில் வழித்துத் துடைத்தது தென்னாபிரிக்க அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக வில்லியம்ஸ் 69 ஓட்டங்களையும், ரெய்லர் 40 ஓட்டங்களையும், திரிபானோ 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரெய்ன், ரபாடா இருவரும் தலா 3 இலக்குகளையும், தாகீர், பிளுக்வையோ இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 25 பந்துகள் மீதமிருக்க 6 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக ஹென்றிக்ஸ் 66 ஓட்டங்களையும், கலீசன் 59 ஓட்டங்களையும், மார்க்ரம் 42 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)

# செட்டிக்குளம் ம.வி. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 8
வவுனியா கால்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் வவுனியா செட்டிக்குளம் மகா வித்தியாலய அணி இறுதிக்குத் தகுதி பெற்றது. வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா திருஞான சம்பந்தர் மகா வித்தியாலய அணி மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியும் கோல்கள் இல்லாமல் நகர்ந்து சென்றது. இரண்டு அணிகளும் தமக்குக் கிடைத்த ஒருசில வாய்ப்புக்களைக்கூட வீணடித்துக் கொண்டிருந்தன.

ஆட்டம் நிறைவடைவதற்கு ஐந்து நிமிடங்கள் இருக்கையில் வவுனியா செட்டிக்குளம் மகா வித்தியாலய அணியின் வீரர் கோலொன்றைப் பதிவுசெய்ததை அடுத்து 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது செட்டிக்குளம் மகா வித்தியாலயம். (ம-422)



# பாகிஸ்தான் அணி பலமான ஆரம்பம்!

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய முதலாம் நாளில் பாகிஸ்தான் அணி பலமான ஆரம்பம் கண்டது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக ஹபீஸ் மற்றும் இமாம் உல் ஹக். இருவரும் இணைந்து பலமான அத்திபாரத்தை அமைத்தனர். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது பாகிஸ்தான். இமாம் உல் ஹக் ஓரளவு நிலைத்து நிற்க மறுமுனையில் ஓரளவு அடித்தாடிக் கொண்டிருந்தார் ஹபீஸ். இலக்கெதனையும் இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது பாகிஸ்தான் அணி. முதலாம் நாளின் இரண்டாவது செசன் நிறைவில் பாகிஸ்தான் அணி இலக்குச் சரிவில்லாமல் 193 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹபீஸ் 113 ஓட்டங்களையும், இமாம் உல் ஹக் 75 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். (ம)



**பணிப்பெண் தேவை**

திருகோணமலையில் உள்ள வீடொன்றில் முதியவர்களை பார்வையிடுவதற்கு பணிப்பெண் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள், தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவர் விரும்பத்தக்கது.
-0718890008, 00447402015620

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**
இம்முறை A/L எழுதியோர், பல்கலை புதுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள் மற்றும் தொழில்புரிவோருக்கான
3 மாத சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 13.10.2018 சனி
1. காலை 08.00-10.00 3.பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4.மாலை 03.00-05.00
கதைத்தலுக்கு தேவையான முழுமையான ஆங்கிலம் கற்பிக்கப்படும்
12.10.2018 வெள்ளிவரை முன்பதிவுகளைமேற்கொண்டு பயிற்சியில் இணையமுடியும்.
SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர். 077 621 4567 021 320 3313

**ஆட்கள் தேவை**

நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரபல கல்வி நிறுவனம் ஒன்றிற்கு இரவு நேர காவல் வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாள் தேவை

தகுதியுடையவர்கள் இத்தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

071 777 5444

# கரப்பந்தாட்டத்தில் கணேசா சம்பியன்



யாழ்ப்பாணம், ஒக். 8
மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் யாழ்ப்பாணம் மாவட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் உரும்பிராய் கணேசா அணி சம்பியனானது.

ஆவரங்கால் இந்து இளைஞர் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் உரும்பிராய் கணேசா அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணி மோதியது.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரண்டு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய உரும்பிராய் கணேசா அணி 25:19, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்களைக் கைப்பற்றியது.

ஆனால் மூன்றாவது செற்றை பலத்த போராட்டத்தின் பின்னர் 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கே.கே. எஸ். அணி.

எனினும் நான்காவது செற் 25:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கணேசா அணியின் வசமாக முடிவில் அந்த அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-422)

# கலைமகள் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 8
விளைபூமி விளையாட்டுக் கழகம் நடத்தும் நெல்மணிகள் வெற்றிக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் வேரவில் கலைமகள் அணி வெற்றிபெற்றது.

விளைபூமி விளையாட்டு கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வேரவில் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் இளைஞர்வட்டம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதற் பாதி. இரண்டாவது பாதியிலும் கோல்கள் பதிவாகவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோலெதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வேரவில் கலைமகள் அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாகக் கலைமகள் அணியின் கோல்க் காப்பாளர் ச.கேதீஸ் தெரிவானார். (ம-23)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.